Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 20 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 சித்திரை 23 புதன்கிழமை (06.05.2015) பக்கங்கள் 20 ஓசை – 218

பிரத்தியேக செய்தி...

## பாடசாலை வாயிலில் போதைவஸ்து வியாபாரம் தடுக்க தயங்கும் பொலிசார்

யாழ்.நகர்ப் பகுதியில் உள்ள பிரபல்யமான பாடசாலைகளுக்கு முன்பாக பாடசாலை ஆரம பிக்கும் போதும், பாடசாலை விடும்போதும் முச்சக்கரவண்டி மற்றும் மோட்டார் சைக்கிள்களில் வரும் நபர்களால் பாடசாலை மாணவர்களுக்கு போதைப பொருட்கள் விற்பனைசெய்யப்படுவதாக யாழ்.பிரதேச செயலர் திருமதி தெய்வேந்திரம் குற்றம் சுமத்தியுள்ளார்.

நேற்று யாழ்.மாவட்டச் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற மாவட்ட சிவில் பாதுகாப்பு குழு கூட்டத்திலேயே அவர் இந்தக் குற்றச்சாட்டினை முன்வைத்திருக்கின்றார்.

இதன்போது அவர் குறிப்பிடுகையில்,

பிரபல்யமான பாடசாலைகளுக்கு முன்பாக இரு வேளைகளில் அதாவது பாடசாலை ஆரம்பிக்கும்போதும், பாடசாலை விடும்போதும், முச்சக்கரவண்டிகள், மோட்டார் சைக்கிள்களில் வரும் நபர்கள் போதைப் பொருடகளை விற்பனை செய்கின்றார்கள்.

ஆனால் அவர்கள் ஒவ்வொரு நாளும் வேறு வேறு வாகனங்களில் வருவதுடன், அவர்கள் இந்தப் பகுதியைச் சேராதவர்களாகவும் உள்ளார்கள். இது தொடர்பாக நாங்கள் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைபபாடு கொடுத்தும் எவ்விதமான, நடவடிக்கைகளும் இல்லை என

19 ஆம் பக்கம் பார்க்க

## மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் மரணம்

வல்வெட்டித்துறை முத்துமாரி அம்மன் ஆலய இந்திரவிழாவை முன்னிட்டு தண்ணீர் பந்தல் அமைத்திருந்தவர். மின்சாரம் தாக்கி நேற்று செவ்வாய்க்கிழமை உயிரிழந்துள்ளார்.

வல்வெட்டித்துறை நெடியகாடு பகுதியைச் சேர்ந்த சிவனடியார் நவரட்ணம் (வயது 58) என்பவரே உயிரிழந்தவர் ஆவார். நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இந்திரவிழாவை முன்னிட்டு இவர் தண்ணீர் பந்தல் ஒன்றினை அமைத்திருந்தார். அப்பந்தலுக்கு முன்பாக் உள்ள வீதிக்கு நேற்று காலை தண்ணீர் ஊற்றியபோது வீதியில் இருந்த மின்வயர் ஒன்றின் மீது தண்ணீர் ஊற்றப்பட்டதனால் அவர் மின் தாக்குதலுக்கு உள்ளானார் என தெரிவிக்கப்படுகின்றது.

சடலம் பிரேத பரிசோதனைக்காக ஊறணி வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டு உள்ளதாகவும், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் வல்வெட்டித்துறை பொலிஸார் தெரிவித்துள்ளனர். (18)



# ஒரே கோட்டில் பயணிக்க முயற்சி



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ ஆகியோருக்கு இடையிலான சந்திப்பொன்று கொழும்பில் இன்று மாலை இடம்பெறவுள்ளது.

இந்தச் சந்திப்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் சிலரும் கலந்து கொள்வதாக அக்கட்சியின் ஊடகப் பேச்சாளர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

சபாநாயகரின் உத்தியோகபூர்வ இல்லம், நாடாளுமன்ற கட்டடத்தொகுதி அல்லது ஜனாதிபதி செயலகம் ஆகிய இடங்களில் ஏதேனுமொரு இடத்தில் இந்தக் கலந்துரையாடலை மேற்கொள்ள ஆலோசிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் அனுர, பிரியதர்ஷனயாப்பா உட்பட கட்சியின் சில உறுப்பினர்கள் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொள்ளவுள்ளதாக கட்சியின் பேச்சாளர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பிரதான கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவர்கள் எதிர்கால அரசியல் திட்டங்கள் குறித்து கலந்துரையாடவுள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு நேற்று விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கூட்டமைப்பின் ஏனைய கட்சிகளை இணைத்துக்கொண்டு

19 ஆம் பக்கம் பார்க்க

## முன்னாள் அமைச்சர் கைது

முன்னாள் அமைச்சரும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜோன்ஸ்டன் பெர்னான்டோ, நேற்று நிதிக்குற்ற விசாரணைப் பிரிவினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மகிந்த ராஜபக்ச அரசாங்கத்தில், கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சராக இருந்த போது, சதொச வில் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பாக, ஜோன்ஸ்டன் பெர்னான்டோ நேற்று விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

காலை 10.15 மணியளவில், காவல்துறையின் நிதிக்குற்ற விசாரணைப் பிரிவின் பணியகத்தில், ஜோன்ஸ்டன் பெர்னான்டோவிடம் விசாரணை ஆரம்பிக்கப்பட்டது,

19 ஆம் பக்கம் பார்க்க

## பாக். தூதுவராக முன்னாள் தளபதி

பாகிஸ்தானுக்கான இலங்கைத் தூதுவராக, முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் தயா ரத்நாயக்க நியமிக்கப்படவுள்ளதாக, கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இராணுவத் தளபதியாக இருந்த ஜெனரல் தயா ரத்நாயக்க அண்மையில் ஓய்வுபெற்றிருந்தார்.

கடந்த தேர்தலில், மகிந்த ராஜபக்ச தோல்வியடைந்த பின்னர், அலரி மாளிகையில் தீட்டப்பட்ட சதித் திட்டத்துக்கு அவர் உடன்பட மறுத்ததாக, தற்போதைய அரசாங்கம் கூறியிருந்தது.

இந்தநிலையில், ஜெனரல் தயா ரத்நாயக்கவை, பாகிஸ்தானுக்கான அடுத்த தூதுவராக

19 ஆம் பக்கம் பார்க்க

## போலி மருத்துவ நிலையங்கள் யாழ். நகர மத்தியில்

### யாழ்.செயலக கூட்டத்தில் அதிர்ச்சித் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ் நகர மத்தியில் பல போலி மருத்துவ நிலையங்கள் இயங்கிவருவதாக யாழ். செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் அதிர்ச்சித்தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

யாழ்.நகர்ப்பகுதியில் போலி பல் சிகிச்சை நிலையங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு கொடுக்கப்பட்ட முறைப்பாடுகளுக்கு நடவடிக்கை இல்லை என பல் சிகிச்சை வைத்தியர்கள் முன்வைத்த குற்றச்சாட்டுக்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் என வடமாகாண சிரேஸ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் லலித் ஏ.ஜயசிங்க கூறியுள்ளார்.

யாழ்.மாவட்டச் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற நேற்றைய சிவில் பாதுகாப்பு குழு கூட்டத்திலேயே மேற்படி விடயம் தொடர்பாக

19 ஆம் பக்கம் பார்க்க

## விமானப்படை வீரர் மரணம்

ரத்மலானை - வான்படை முகாமில் பாதுகாப்பு சாவடியில் பணியாற்றிய இராணுவ வீரர் ஒருவர் நேற்று முற்பகல் தனது துப்பாக்கியால் தன்னைத்தானே சுட்டு தற்கொலை செய்து கொண்டார்.

பொலிஸ் பேச்சாளர் ருவான குணசேகர இந்த தகவலைத் தெரிவித்தார்.

பொலிஸார் இது தொடர்

19 ஆம் பக்கம் பார்க்க

## வீதி விபத்தில் ஒருவர் பலி

கோண்டாவில் டிப்போவுக்கு முன்பாக் - பலாலி வீதியில் வீதியோரமாக நின்றவரை யாழ்ப்பாணத்திலிருந்து உரும்பிராய் நோக்கிப் பயணித்த வாகனம் ஒன்று நேற்று மோதியதால் அவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார். இந்தச் சம்பவம் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் இடம்பெற்றது. சம்பவத்தில் கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த சீனியர் ஞானசேகரம் (வயது 53) என்பவரே உயிரிழந்தார்.

சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது, குறித்த வீதி ஊடாக உழவு இயந்திரத்தில் சல்லிக் கற்களை ஏற்றிச்சென்ற

19 ஆம் பக்கம் பார்க்க



அடுத்த வாரம் கலைப்பு

பக்.- 14இல்

கலைக்கும் அதிகாரம் யாருக்கு?



பக்.- 04இல்





கொக்குவில் இந்திரா சனசமூக நிலையத்துக்கு புதிதாக கட்டடம் ஒன்று அமைப்பதற்காக அடிக்கல் நாட்டும் வைபவம் கடந்த 4 ஆம் திகதி மு.ப.9 மணிக்கு இடம்பெற்றது. இந்நிகழ்வில் வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் வடமாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் தவராசா, நல்லூர் பிரதேச ஈ.பி.டி.பி. அமைப்பாளரும் நல்லூர் பிரதேச் சபை எதிர்க்கட்சித் தலைவருமான அம்பலம் இரவீந்திரதாசன் மற்றும் பலர் கலந்துகொண்டிருப்பதையும் காணலாம்.

# ஓவியக் கண்காட்சி

வவுனியா கல்மடு மகா வித்தியாலயத்தில் நாளை மற்றும் நாளை மறுதினம் ஓவியக் கண்காட்சி ஒன்று இடம் பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் க.செல்வதேவன் தலைமையில் இடம் பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் வ.ஸ்ரீகாந்தராசா கலந்துகொள்வதோடு சிறப்பு விருந்தினராக யாழ்.கல்வி வலய சித்திர பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் துசிவந்தனும் கலந்துகொளளவுள்ளார். (18)

# வீட்டின் பின் கதவை உடைத்து திருட்டு



யாழ்ப்பாணம் துன்னாலை தக்குச்சம்பாட்டி பகுதியிலுள்ள வீடொன்றில் நேற்றுமுன்தினம் பின்பக்க கதவை உடைத்து உள்நுழைந்து அங்கிருந்த பொருட்கள் மற்றும் பணம் ஆகியன திருடப்பட்டுள்ளதாக வீட்டு உரிமையாளர் முறைப்பாடு பதிவு செய்துள்ளதாக நெல்லியடிப் பொலிஸார் நேற்றுக் கூறினர்.

வீட்டிலிருந்த தொலைக்காட்சிப் பெட்டி, நீர் இறைக்கும் இயந்திரம் மற்றும் அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த 12 ஆயிரம் ரூபாய் பெறுமதியான பணம் ஆகியன இவ்வாறு திருடப்பட்டுள்ளன.

வீட்டிலிருந்தவர்கள் உறவினர் ஒருவரின் திருமணத்துக்குச் சென்றிருந்த போது இந்த திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் கூறினர்.

## DDTV யின் இன்றைய நிகழ்ச்சிகள்

| நேரம் | புதன்கிழமை |
|---|---|
| Am 05.00 | ஆலய தரிசனம் (பக்திப் பாடல்கள்) |
| Am 07.00 | காலைக் கதிர் |
| Am 08.00 | நாளிதழ் நேரம் |
| Am 09.00 | கொஞ்சம் கலாட்டா |
| Am 09.55 | காலை செய்திகள் |
| Am 10.00 | ஆரோகனம் |
| Am 10.30 | சிரிக்க சிரிக்க |
| Am 11.30 | அதிர்வுகள் |
| PM 12.30 | Hello DD |
| PM 01.00 | மதிய செய்திகள் |
| PM 01.30 | திரைப்படம் |
| PM 03.55 | மாலை செய்திகள் |
| PM 04.00 | மழலைகள் |
| PM 05.00 | சிரிக்க சிரிக்க |
| PM 06.00 | நாளிதழ் நேரம் |
| PM 07.00 | அதிர்வுகள் |
| PM 08.00 | பிரதான செய்திகள் |
| PM 08.30 | Hello DD |
| PM 09.00 | திரைப்படம் |
| PM 11.30 | நீங்காத நினைவுகள் |

# குற்றச் செயல்களைத் தடுக்க விசேட நடவடிக்கை எடுக்கப்படும்

## பிரதிப் பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு





(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் அண்மைக்காலமாக அதிகரித்துள்ள போதைப்பாவனை, வாள் வெட்டுக் கலாசாரம் உள்ளிட்ட குற்றச் செயல்களைத் தடுக்க விசேட நடவடிக்கை எடுக்கப்படும் என்று வடக்கு மாகாண சிரேஸ்ட பிரதிப் பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்தார்.

குடாநாட்டு நிலைமைகளை ஆராயும் விசேட கூட்டம் யாழ். அரச செயலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை முற்பகல் இடம் பெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அரச அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் பிரதேச-செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், பொலிஸ் பொறுப்பதிகாரிகள், பிரதேச சபைத் தலைவர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இதன்போது யாழ்.குடாநாட்டில் அதிகரித்துள்ள போதைப் பாவனை, வாள் வெட்டு, அடிதடிக் கலாசாரம், மிருகபலியிடல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

அத்துடன் குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் குறித்து தகவல்களை வெளியிடுவோரை வெளிப்படுத்துவதால் அவ்வாறானவர்களுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்படுகிறது என்றும், பொலிஸார் இதுகுறித்து கவனம் செலுத்த வேண்டும் என்றும் சுட்டிக்காட்டப் பட்டது. பல்வேறு கருத்துப் பரிமாற்றங்களுடன் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த விசேட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று பொலிஸ் தரப்பு தெரிவித்தது.

அத்துடன் இங்கு இடம் பெறும் குற்றச் செயல்கள் குறித்து பொலிஸ் நிலையங்களில் தகவல் கொடுக்க அஞ்சுபவர்கள், பொலிஸாரால் தீங்கு இழைக்கப்படுவதாக கருதுபவர்கள் அதுபோன்ற சம்பவங்களை தன்னுடன் தொடர்பு கொண்டு தெரிவிக்கமுடியும் என்று வடமாகாண சிரேஸ்ட பிரதிப் பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்தார்.

இதற்கென அவர் தனது தொலைபேசி இலக்கத்தையும் குறிப்பிட்டு (0718591005) ஆங்கிலம் அல்லது சிங்கள மொழியில் தொடர்புகொள்ளுமாறும் கேட்டுக்கொண்டார்.

# "வித்திய ஒளி" நூல் வெளியீடு

கிளிநொச்சி முட்கொம்பன் அ.த.க.பாடசாலையின் வித்திய ஒளி எனும் நூல் வெளியீடு இன்று காலை 9 மணிக்கு பாடசாலை அதிபர் தி.திலீபன் தலைமை யில் நடைபெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்னாள் மாவட்ட அரசாங்க அதிபர் (தி.இராசநாயகம் கலந்து கொள்வார் சிறப்பு விருந்தினராக பூநகரி கோட்டக்கல்வி அதிகாரி சொ.தர்மரத்தினம் கலந்துகொள்ளவுள்ளனர். (18)

# கலாபூசன விருதுக்கு விண்ணப்பம் கோரல்

கலாசார அலுலலக திணைக்களத்தினால் வளங்க இருக்கும் கலாபூஷன விருது 2015 இற்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

பிரதேச கலைத்துறைக்கு பங்களிப்பு செய்துள்ள 15, 12, 60 வயதினை பூர்த்தி செய்து இலக்கியம் எழுத்தாளர், மேடை நாட்கம், நாட்டியம், சங்கீதம் ஓவியச்சிற்பம் தொலைக்காட்சி சினமா பாடல் கவி இசைத்தல், பைலா, பிற விடயங்களில் ஆர்வம் உள்ளவர்கள் 10.05.2015 இற்கு முன் கரவெட்டி பிரதேச செயலகத்திற்குள் அமைந்துள்ள கலை கலாசாரப் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு கரவெட்டி பிரதேச செயலர் கேட்டுக்கொள்கிறார்.

# ஆன்மீக நிகழ்வு

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் நடாதிதப்பட்டு வரும் கலை பண்பாட்டு பேரவையின் சந்நிதியின் வாராந்த ஆன்மீக நிகழ்வுகளில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை உள்ளக பெருங்கோவில் என்னும் தலைப்பில் சொற்பொழிவு ஒன்று இடம் பெறவுள்ளது.

இச்சொற்பொழிவினை பிரபல எழுத்தாளர் ஐ.சண்முகலிங்கம் (குப்பிளான் சண்முகலிங்கம்) நிகழ்த்தவுள்ளார்.

# வெற்றிலைப் பாவனையால் வாய்ப்புற்றுநோய் அதிகரிப்பு

பேருந்தின் சாரதிகள், நடத்துநர்கள் மத்தியில் வாய்ப்புற்று நோய் வேகமாகப் பரவுவதாக சுகாதார அமைச்சின் பரிசோதனைகள் மூலம் தெரியவந்துள்ளது.

வெற்றிலையில் எடுத்துக் கொண்டால் அதில் புற்றுநோய்க்கான 32 வகையான இரசாயனப் பதார்த்தங்கள் இருப்பது தெரியவந்துள்ளது.

நெடுநேரம் வெற்றிலையை வாயில் வைத்து மெல்லுவதால் வாயில் உள்ள இழையங்களுக்கு பெரும் சேதம் ஏற்படுவதாக புற்றுநோய் ஒழிப்புத் திட்டப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

வருடந்தோறும் வாய்ப்புற்று நோயால் பாதிக்கப்படுபவர்கள் 1000 பேர் வரையில் புதிதாக இனங் காணப்படுவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

# அரச நிறுவன பணிகளுக்காக முதலாவது தடைதாண்டல் பரீட்சை

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நாடளாவிய ரீதியில் நடாத்தப்படும் அரசாங்கத் திணைக்களங்கள், மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள் உள்ளிட்ட அரச நிறுவனங்களில் பணிக்காக இணைத்துக் கொள்ளப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான முதலாவது தடைதாண்டற் பரீட்சை எதிர்வரும் சனிக்கிழமை காலை 09.00 மணி தொடக்கம் பிற்பகல் 02.30 மணி வரை நடைபெறவுள்ளது.

அரச துறைகளில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக கடமையாற்றும் அலுவலர்களுக்கு எதிர்காலத்தில் சம்பள உயர்வு மற்றும் பணியுயர்வு ஆகியவற்றிற்கு அடிப்படையாக அமையும் இத்தடை தாண்டற் பரீட்சையானது. மூன்று பிரதான பாடங்களை உள்ளடக்கியதாக நடைபெறவுள்ளது. இதில் காலை 09 மணி தொடக்கம் 10 மணி வரை அலுவலக நடைமுறைகள் தொடர்பான பாடநெறிப் பரீட்சையும், 10.30 மணி தொடக்கம் 11.30 மணி வரை கணக்கியல் தொடர்பான பாடநெறிப் பரீட்சையும் மதியம் 12.30 மணி தொடக்கம் 02.30 மணி வரையும் கணனி தொடர்பான பாட நெறிப் பரீட்சையும் நடைபெறவுள்ளது. இப்பரீட்சைகளுக்கு தோற்றவுள்ள பரீட்சார்த்திகளுக்கான பரீட்சை அனுமதி அட்டைகள் யாவும் ஏற்கனவே உரியவர்களுக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (03)

# பொதுக்கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும்

யாழ்ப்பாணம் சாவகச்சேரி பூவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையத்தின் 21 ஆவது வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது. அதில் புதிய நிர்வாகசபை தெரிவு செய்யப்பட்டது. புதிய தலைவராக வை.ராயரட்ணம் தெரிவு செய்யப்பட்டார்.

செயலாளராக எஸ்.அருட்கரன், பொருளாளராக திருமதி ம.கீர்த்திநாதன், முதல்வர் சி.மகாலிங்கம், உப செயலாளர் திருமதி.அ.ஸ்ரீசுசாந்தினி ஆகியோர் பொதுக்கூட்ட உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். இந்நிகழ்வில் வலயக்கல்வி முன்பள்ளி உதவிப் பணிப்பாளர் சு.பாக்கியராஜா ஓய்வு பெற்றதையிட்டு பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# "இந்துக்களின் குரல்" சஞ்சிகை மாத இதழ் அறிமுக விழா

(யாழ்ப்பாணம்)


"இந்துக்களின் குரல்" இந்துத் தேசிய மாத இதழின் அறிமுக விழா நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூயில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வுக்கு தென்மராட்சி ஓய்வூதியர் சங்கத் தலைவரும் ஓய்வு நிலை அதிபருமான செ.சுப்பிரமணியம் தலைமை தாங்கவுள்ளார். பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம், சிறப்பு விருந்தினர்களாக மாகாணசபை உறுப்பினர் கேசவன் சஜந்தன், சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் ந.சர்வேஸ்வரன், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் ரி.குகதாசன், சாவகச்சேரி கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் கா.இராசதுரை, கௌரவ விருந்தினர்களாக லயன்ஸ் கழக மாவட்டத் தலைவர் சி.அருளானந்தம், சாவகச்சேரி வர்த்தகர் சங்கத் தலைவர் வ.ஸ்ரீபிரகாஸ், யாழ் பல்கலைக்கழக ஓய்வுபெற்ற பதிவாளர் யோ.ஜெயக்குமார், சாவகச்சேரி ப்.நோ.கூ.சங்க பொது முகாமையாளர் யோ.தெய்வேந்திரம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந் நிகழ்வில் ஆசியுரையினை சைவக்குருமார் ஒன்றியத்தின் க.கிருபானந்தக் குருக்கள் வழங்கவுள்ளார்.


மேலும் வரவேற்புரையினை தென்மராட்சி கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் செல்வி இராமலிங்கம் இராசமலர் வழங்கவுள்ளார். வாழ்த்துரைகளை சாவகச்சேரி நகரசபை உபதவிசாளர் கு.சதாசிவமூர்த்தி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி. லலிதாமலர் முகுந்தன், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி.சு.சுதாகர் ஆகியோர் வழங்குவர்.

சஞ்சிகையின் மதிப்பீட்டுரையை சாவகச்சேரி சந்திரபுர ஸ்கந்தவரோதயா மகாவித்தியாலய ஆசிரியர் சி.கா.கமலநாதன், ஏற்புரையை சஞ்சிகை ஆசியர் என்.பி.ஸ்ரீந்திரன் ஆகியோர் வழங்குவர். முதற்பிரதியை சாவகச்சேரி அம்பிகா பார்மசி உரிமையாளர் ந.சிவபாலன் பெறுவார். நன்றியுரையை இந்துக்களின் குரல் சஞ்சிகை ஆசிரியர் யோ.துஷ்யந்தன் ஆற்றுவார். அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், ஆர்வலர்கள் அனைவரையும் இந் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு இதழாசிரியர்களும் விழாக் குழுவினரும் கேட்டுக் கொண்டுள்ளனர்.



சுன்னாகம் சந்திரசேகரப் பிள்ளையார் ஆலய வருடாந்த தேர்த்திருவிழாவில் சுவாமி தேரில் வெளிவீதியுலா வரும் காட்சியைக் காணலாம்.

# ரகசியப் பெட்டி



பூராயர்.பொ

## சுதந்திரக் கூட்டமைப்பின் பிரசாரக் குழு தலைவராக மகிந்த வரும் வாய்ப்பு!

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பிரசாரக் குழுவுக்கு தலைமை தாங்குவார் என்று அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றார்கள்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் இன்று 06 ஆம் திகதி சந்திப்பு இடம்பெறுவது தெரிந்ததே.

இச்சந்திப்பில் மகிந்த ராஜபக்ஷ எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலோடு சம்பந்தப்படுத்தி இரு நிபந்தனைகளை முன்வைப்பார் என்று சொல்லப்படுகின்றது.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு வேட்பாளர்களை தெரிவு செய்கின்ற சபையில் இடம்பெற சம்மதிக்க வேண்டும், இக்கூட்டமைப்பின் பிரசாரக் குழுவுக்கு தலைமை தாங்க அனுமதிக்கப்பட வேண்டும் ஆகியனவே இந்நிபந்தனைகள் என்கின்றார்கள்.

இருவருக்கும் இடையிலான பிணக்குகளை இல்லாமல் செய்கின்றமைக்கும், இருவரும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் அனைத்து செயற்பாடுகளிலும் ஒன்றுபட்டு செயற்படுகின்றமையை உறுதிப்படுத்துகின்றமைக்கும் ஆக இடம்பெறுகின்ற இச்சந்திப்பில் இரு கோரிக்கைகளும் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற வாய்ப்புகளே காணப்படுகின்றன.

இதே நேரம் மகிந்த ராஜபக்ஷவால் முன்வைக்கப்படக் கூடிய கோரிக்கைகள் தொடர்பாக சுதந்திர கட்சியின் மத்திய நிறைவேற்றுக் குழுவே இறுதித் தீர்மானம் எடுக்கும் என்று எதிர்க் கட்சித் தலைவர் நிமால் ஸ்ரீபால டி சில்வா தெரிவித்து உள்ளார்.

## அமைச்சரர்னார் சுமந்திரன் எம்.பி!

கொழும்பு கம்பன் விழாவில் தொழிலதிபர் ஈஸ்வரனின் விசேட அழைப்பின் பேரில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 2ஆம் திகதி சனிக்கிழமை மாலை அமர்வில் கலந்து கொண்டார்.

இவ்வமர்வில் தொடக்கவுரை ஆற்றினார் சுமந்திரன் எம்.பி. அரங்கத்தின் நடுவில் சிம்மாசனம் கொடுக்கப்பட்டு அமர்த்தப்பட்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை தசரத சக்கரவர்த்தி என்று வர்ணித்தார்.

த்சரத சக்கரவர்த்திக்கு சுமந்திரன் என்று ஒரு அமைச்சர் இருந்தார் என்று இராமாயணம் சொல்கின்றது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தமிழ் மக்களுக்கு நல்ல விடயங்களை செய்ய விரும்புகின்றார், எனவே இவருக்கு ஒத்துழைக்க வேண்டும் என்று சுமந்திரன் கோரிக்கையும் விடுத்தார்.

தசரதனாக மைத்திரிபால சிறிசேனவும், அமைச்சராக சுமந்திரனும் உள்ளமையால் வசிஷ்டராக இருக்கின்றார் என்று கம்பவாரிதி பேசினார்.

## ஐ.தே.க.செயலாளர் அட்டகாசம், அவமானத்தில் அமைப்பாளர்கள்!

ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளரும், அமைச்சருமான கபீர் காசிம் எம்.பி யின் சர்வாதிகார நடவடிக்கைகள் குறித்து இக்கட்சியின் பிரமுகர்கள் பலரும் கவலை, அதிருப்தி தெரிவித்து வருகின்றார்கள்.

இவர் நிறைவே[illegible]கார ஜனாதிபதி போன்ற தோரணையில் நடந்து கொள்கின்றார் என்றும் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை தவிர ஏனையோரை இவர் அலட்சியம் செய்கின்றார் என்றும் கூறப்படுகின்றது.

தொகுதி அமைப்பாளர்கள் என்கிற வகையில் ஐ.தே.க அமைச்சர்கள்கூட இவரை நேரில் சந்தித்துப் பேசுவது என்பது குதிரைக் கொம்பாகவே உள்ளது என்றும் தொலைபேசியில் இரண்டு செக்கன்களுக்கு மேல் பேச வேண்டாம் என்று இ[illegible] கண்டிப்பாக அறிவுறுத்தப்பட்டு உள்ளனர் என்றும் சொல்லப்படுகிறது.

இவ்விதம் இவரால் பாதிக்கப்பட்ட அல்லது அவமானப்படுத்தப்பட்டு உள்ள அமைப்பாளர்கள் கறுவிக் கொண்டு உள்ளார்கள். கபீர் காசிம் ஐ.நா நிறுவனம் ஒன்றில் மிக முக்கிய பொறுப்பில் உள்ளார், எனவே வேலைப் பளு காரணமாக கட்சிப் பொதுச் செயலாளர் பதவியை இராஜினாமா செய்வதாக அறிவித்து கௌரவமாக விலகிக் கொ[illegible]லாம் என்று ஐ.தே.க அமைச்சர் ஒருவர் தெரிவித்தார்.

## அரசியல்வாதிகளுக்கு அழுத்தம் கொடுக்க புத்திஜீவிகள் குழு உதயம்

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களில் அழுத்தம் கொடுப்பதற்காக புத்திஜீவிகள் மற்றும் துறை சார்ந்த நிபுணர்களின் குரல் என்கிற அமைப்பு கொழும்பில் கடந்த வாரம் உதயம் ஆகி உள்ளது.

நாடு பூராவும் உள்ள பல்கலைக்கழகங்களின் கல்வியியலாளர்கள் இவ்வமைப்பில் உள்வாங்கப்பட்டு வருகின்றனர்.

அமைப்பின் தலைவராக ருகுணு பல்கலைக்கழக பேராசிரியர் ரஞ்சித் சேனாரட்ணவும், செயலாளராக சப்ரகமுவ பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் மகிந்த பத்திரணவும், தேசிய அமைப்பாளராக பேராதனைப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் நந்தன விஜேசிங்கவும் தெரிவாகி உள்ளார்கள்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள பல்கலைக்கழகங்களின் கல்வியியலாளர்களை அமைப்பில் உள்வாங்க விசேட நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

அரசியல்வாதிகள், கொள்கை வகுப்பாளர்கள் போன்றோர்களுக்கு தேசிய விவகாரங்களில் அழுத்தம் கொடுத்தல், பல்கலைக்கழக வளங்களை தேசிய அபிவிருத்திக்கு பயன்படுத்துதல், பல்கலைக்கழக மாணவர்களின் திறமைகளை தேசிய நலனுக்கு பயன்படுத்துதல் ஆகியன இவ்வமைப்பின் பிரதான இலட்சியங்கள் என்று தேசிய அமைப்பாளர் நந்தன விஜேசிங்க ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் அனைத்து தரப்பு அரசியல்வாதிகளையும் இவ்வமைப்பு நேரில் சந்தித்து பேச்சுக்கள் நடத்தும் என்றும் இவர் கூறினார்.

அன்புள்ள இடத்தில்தான் ஆண்டவன் இருக்கிறான். - காந்தியடிகள்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## 'ஒற்றுமை'யின் மகத்துவம்!

அமெரிக்க ராஜாங்க செயலாளர் ஜோன் கெரியுடனான தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரின் சந்திப்பின்போது, வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் மற்றும் கூட்டமைப்பின் பேச்சாளராகச் சொல்லப்படும் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோரை வாய் திறக்க விடாது சம்பந்தனும் சுமந்திரனும் அடக்கியது பற்றி சமூக வலைத்தளங்களில் விவாதம் நடந்துகொண்டிருக்கிறது.

ஞாயிற்றுக்கிழமை கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கெரியை சந்தித்து பேச்சு நடத்தியிருந்தனர். கூட்டமைப்பு சார்பில் இரா.சம்பந்தன், எம்.ஏ.சுமந்திரன், சுரேஷ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன் மற்றும் சி.வி.விக்னேஸ்வரன் ஆகியோர் பங்குபற்றியிருந்தனர்.

நமது பிரச்சினையின் எல்லாப் பரிமாணங்களையும் நன்கு ஆய்ந்தறிந்து கொண்டே இங்கு வரும் வெளிநாட்டினரிடம் ஏதோ புதிதாக அவர்களுக்கு நிலைமைகளை விளக்குவது போல கூட்டமைப்பினர் என்னென்ன நீட்டோலைகளை எடுத்து வாசிப் பார்களோ அதை கெரியிடமும் சம்பந்தன் சுமந்திரன் இருவரும் மட்டுமே வாசித்துக் கொண்டிருந்திருக்கிறார்கள்.

விக்னேஸ்வரன் பேசமுற்பட்ட போது கூட்டமைப்பின் அதிமுக்கிய தலைவர்கள் இருவரும் தடுத்துவிட்டனராம். கடந்த சில வாரங்களாகவே தன்மீது அவர்கள் கடுப்பிலிருப்பதைத் தெரிந்திருந்த முதலமைச்சர் விக்னேஸ்வரன் தன்னை அவர்கள் பேச விடமாட்டார்கள் என்று தெரிந்துகொண்டே தயாராகச் சென்றிருக்கிறார்.

அதன்படி, தான் தயாரித்துச் சென்ற மகஜரை முதலமைச்சர் விக்னேஸ்வரன் சந்திப்பின் ஆரம்பத்திலேயே ஜோன் கெரியிடம் சமர்ப்பித்துவிட்டு அதன்பிறகு ஓரமாக ஒரு பொம்மையைப் போல இருந்துவிட்டாராம். வடக்கு மாகாணசபையால் ஏன் எதையுமே செய்ய முடியாமலிருக்கிறது என்ற விளக்கமே அந்த மகஜர்.

முதலமைச்சர் இப்படி வாய்மூடி அமர்த்தி வைக்கப்பட்ட பிறகு, சம்பந்தனும் சுமந்திரனுமே பேசிக் கொண்டிருந்தார்களாம். ஒரு கட்டத்திற்கு மேல் பொறுக்க முடியாமல் சுரேஷ் பிரேமச்சந்திரன் குறுக்கிட்டிருக்கிறார்.

இரா. சம்பந்தன் அவர்களும் தேசிய உயர்சபையில் அங்கத்தினராக இருக்கும் மைத்திரி அரசாங்கத்தைப் பற்றிய குற்றச்சாட்டாக எதையோ கெரியிடம் சொல்ல முற்பட்டிருக்கிறார் சுரேஷ்.

சம்பந்தன் சுரேஷை பேசவிடாமல் தடுத்துள்ளார். ஆனால் விக்னேஸ்வரன் போல் சுரேஷ் உடனடியாகவே பொம்மை நிலைக்குச் சென்றுவிடவில்லை. இரண்டாவது தடவையும் குறுக்கிட்டுப் பேசமுற்பட்டிருக்கிறார்.

இந்தமுறை தலைவர் சம்பந்தன் கடுங்கோபம் கொண்டு, வாயை மூடிக்கொண்டிருக்குமாறு சுரேஸிடம் திரும்பித் தமிழில் சீறியிருக்கிறார். இதன்பிறகு சுரேஷ் பிரேமச்சந்திரனும் அமைதியாகியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்த வரையில், இந்த சண்டைகள் குத்துவெட்டுகள் ஒன்றும் புதினமானவையல்ல. ஆனால் இதையே ஏதோ ஒரு பெரும் சண்டையாக வர்ணித்து, சம்பந்தன் சுமந்திரன் ஆகியோருக்கு எதிராக விக்னேஸ்வரன், சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றும் "இரண்டாம் தேசியத் தலைவர்" எனத் தன்னைப் பாவித்துக் கொள்ளும் சிறிதரன் ஆகியோர் ஏதோ ஒண்டிக்கு ஒண்டி சவால் விடப் போகிறார்கள் என்று முகநூலார் பிரலாபிப்பதைத்தான் தாங்க முடியவில்லை.

கூட்டமைப்பை இரண்டாக உடைத்து தேர்தலை எதிர்கொள்ளலாம் என்றெல்லாம் அவர்கள் கற்பனையிலும் நினைத்துப் பார்க்க மாட்டார்கள். தாங்கள் பிரிந்து நின்றுகொண்டு, ஒற்றுமைக்கு வாக்களியுங்கள் என்று கேட்டு தமிழ் மக்களை ஏமாற்ற முடியாது என்பது அவர்களுக்குத் தெரியும்.

"சிங்கள அரசை மடக்கிப் பணிய வைப்பதற்காக தமிழொற்றுமைக்கு உங்கள் வாக்குகளை அளித்து, சர்வதேசத்திற்கு காட்டுங்கள்" என்றால்தான் தமிழ்மக்கள் அதிகாலையிலேயே எழுந்து கியூவில் போய்நின்று வாக்களிப்பார்கள்; பதவிகள்-அப்போது தான் தங்களுக்கு உத்தரவாதம் என்பது அவர்களுக்கு நன்கு தெரியும்.

- ஆசிரியர்

# உள்ளூராட்சி சபைகள் கலைப்பு

# ஜனாதிபதிக்கு அதிகாரமில்லை

## உதய கம்மன்பில தெரிவிப்பு

ஜனாதிபதியினால் உள்ளூராட்சி சபைகளை கலைக்க முடியாது என பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மற்றும் உள்ளூராட்சி சபை அமைச்சரினால் இதனை கலைப்பதற்கு அதிகாரமில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

உள்ளூராட்சி சபை சட்டத்தின் 154 ஆம் சரத்தில் இது தொடர்பில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

உள்ளூராட்சி சபைகளுக்கு பொறுப்பான மாகாண அமைச்சரினாலேயே உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக் காலத்தை நீடிக்க முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சபைகள் மாகாணசபைகளுக்கு சொந்தமானவை எனவும், மாகாணசபையின் அமைச்சரினால் இது குறித்து தீர்மானிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளதுடன்,

மேல் மாகாணசபையின் முதலமைச்சரே இது தொடர்பில் ஜனாதிபதிக்கு முதன் முதலாக அறிவித்திருந்தார் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில சுட்டிக்காட்டியுள்ளார்.

# புதிய தேர்தல் திருத்தத்தினால் சிறுபான்மை கட்சிகள் பாதிக்கப்படாது

## என்கிறது கபே

புதிய தேர்தல் முறையின் ஊடாக சிறுபான்மை கட்சிகளுக்கு எந்தவகையிலும் பாதிப்பு ஏற்படாது என கபே அமைப்பு தெரிவித்துள்ளது.

ஊடகமொன்றிற்கு வழங்கிய செவ்வியின் போது அவ் அமைப்பின் தேசிய அமைப்பாளர் அஹமட் மனாஸ் மக்கிம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

புதிய தேர்தல் முறை திருத்தம் காரணமாக சிறுபான்மை கட்சிகளுக்கும் சில அனுகூலங்கள் கிடைக்கும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை தேர்தல் முறையில் திருத்தத்தை கொண்டு வருவதற்கான 20 ஆவது அரசியலமைப்பு திருத்தத்திற்கு சிறுபான்மை கட்சிகளின் ஆதரவு கிடைத்துள்ளதாக சிறி லங்கா சுதந்திரக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

இருந்த போதிலும் ஐக்கிய தேசியக் கட்சி இதற்கு மாற்று கருத்தை வெளியிட்டுள்ளது.

அதாவது புதிய தேர்தல் திருத்தத்திற்கு சிறுபான்மை கட்சிகளின் ஆதரவு இதுவரை நிச்சயமற்ற தன்மையில் இருப்பதாக நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அத்துடன் சிறுபான்மைக் கட்சிகளுக்கு அநீதியிழைக்கப்படாத விதத்திலேயே 20 ஆம் திருத்தம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தேசிய கல்வி நிறுவகத்தில் கணித பாடசெயலமர்வு

## வடக்கு வளவாளர்களுக்கு இன்று

(கொழும்பு)

தேசிய கல்வி நிறுவகம் புதிய கணிதபாடத்திட்டத்திற்கான நான்கு நாள் வதிவிடச்செயலமர்வை இம மாதம் தொடர்ச்சியாக நடாத்தி வருகிறது என தேசியகல்வி நிறுவகத்தின் கணித பாடத்திற்கான பணிப்பாளர்கே.ஆர்.பத்மஶ்ரீ தெரிவித்தார்.

தரம் 7 மற்றும் 11 ஆகிய வகுப்புகளுக்கு அடுத்தாண்டு அறிமுகமாகவிருக்கும் புதிய பாடத்திட்டம் தொடர்பில் வளவாளர்களுக்கு பயிற்சியளிக்கும் வதிவிடச் செயலமர்வுகளை மாகாணம் மாகாணமாக மொழிரீதியில் வேறுபட்ட தினங்களில் வேறுபட்ட இடங்களில் நடாத்திவருகிறது.

ஒவ்வொரு செயலமர்விற்கும் 60பேர் அழைக்கப்பட்டுள்ளனர். ஒரு வலயத்திலிருந்து கணிதபாட உதவிக்கல்விப்பணிப்பாளர் ஆசிரியஆலோசகர் மற்றுமொரு சிரேஸ்ட கணித பாட அலுவலரொருவரும் அழைக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு கிழக்கு மாகாணத்தின் தமிழ்மொழிமூல வளவாளர்களுக்கான வதிவிடச்செயலமர்வு இன்றும், நாளையும் நடைபெறவுள்ளது. வடக்கிலிருந்து 30பேரும் கிழக்கிலிருந்து 30பேரும் அழைக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

# இராணுவச் சிப்பாய் பாதுகாவலரா? நாமலுக்கு அதிகாரமில்லை

## பொலிஸ் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

இராணுவ சிப்பாய் ஒருவரை தனது மெய்ப் பாதுகாவலராக வைத்துக் கொள்வதற்கு நாமல் ராஜபக்சவிற்கு எவ்வித அதிகாரமும் இல்லையென பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதிப் பொலிஸ் அத்தியட்சகருமான ருவன் குணசேகர தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்து கொண்ட நிகழ்வில் இராணுவ சிப்பாய் ஒருவர் துப்பாக்கி ஒன்றுடன் ஜனாதிபதிக்கு அருகில் சென்றமை தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்குனுகொலபெலெஸ்ஸ பகுதியில் சிறி லங்கா சுதந்திரக் கட்சியின் கூட்டத்திற்கு குறித்த இராணுவ சிப்பாய், நாமல் ராஜபக்சவின் பாதுகாப்பாளராகவே சென்றுள்ளார் என தற்பொழுது உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

அவ்வாறு இராணுவ சேவையில் ஈடுபடும் ஒருவரை தனிப்பட்ட நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவதற்கு எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இராணுவ சிப்பாயின் கையில் துப்பாக்கி இருந்தமையை உறுதி செய்த பொலிஸ் ஊடகப் பேச்சாளர், அவர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்ட இராணுவ சிப்பாய் என விசாரணைகளின் போது தெரியவந்ததாகவும் குறிப்பிட்டார்.

எனினும் கடந்த வாரத்தில் நாமல் ராஜபக்ச குறித்த இராணுவ சிப்பாயிடம் தண்ணீர் போத்தலே இருந்ததாக பத்திரிகைகளில் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# ஊழியர் சேமலாப நிதியில் பணத்தைப் பெறவாய்ப்பு

(கொழும்பு)

ஊழியர் சேமலாப நிதிய உறுப்பினர்கள் தங்களின் பணத்திலிருந்து 30 வீதம் பெறுவதற்கு வாய்ப்பளிக்கப்படும் என தொழில் அமைச்சின் புதிய செயலாளர் ஹேரத் யாப்பா தெரிவித்துள்ளார்.

தமது வைப்பில் மூன்று இலட்சம் ரூபா இருந்தால் அதிலிருந்து 30 வீதம் கோரலாம் எனவும் வீடமைப்பு, சுகாதாரப் பிரச்சினைகளுக்கு நிதி தேவைப்படும் போது ஊழியர் சேமலாப நிதிய உறுப்பினர்கள் 22 இலட்சம் ரூபா வரையில் பணத்தைப் பெறலாம் எனவும், இச் செயற்திட்டத்தை இம் மாதம் முதல் அமுல்படுத்த எதிர்பார்ப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# இப்போது யுத்தம் முடிவடைந்து விட்டது, அவர்கள் எங்கே போகவேண்டும்?

**காமினி அக்மீமன கட்டுரையிலிருந்து**



இராணுவ வலிமையை படிப்படியாக குறைக்க வேண்டியது புதிய அரசாங்கத்தின் நிகழ்ச்சித் திட்டத்தில் உயர்வாக இருக்கவேண்டிய ஒன்று, ஆனால் அதைப்பற்றி நினைத்துக் கூடப் பார்க்கவில்லை.

மூன்று தசாப்தங்களாக நடைபெற்ற. உள்நாட்டு யுத்தத்தின் பின்னர், இலங்கையிடம் அளவுக்கு மீறிய இராணுவப் படை உள்ளது. போர் நிறைவடைந்து இரண்டு வருடங்களின் பின்னர் 2010 இல் இராணுவத்திடம் கிட்டத்தட்ட 200,000 செயற்பாட்டு பணியாளர்கள் இருந்தார்கள் மற்றும் 20,000 40,000 இற்கும் இடைப்பட்டவர்கள் அவசர தேவைக்கான ஒதுக்கமாகவும் மற்றும் 18,000 பேர்கள் தேசிய பாதுகாப்பு நபர்களாகவும் இருந்ததுடன் மொத்தமாக 13 செயல்பாட்டு பிரிவுகள் மற்றும் பல உன்னத காலாட்படை பிரிவுகளும் இருந்தன. மொத்த இராணுவத்தினரின் தொகை இப்போது 21,866,445 ஆக உள்ளது.

ஒப்பீட்டளவில் பார்ப்பதானால் நைஜீரியா, மலேசியா மற்றும் அவுஸ்ரேலியா என்பனவற்றின் இராணுவ பலத்தை இங்கே விவா திக்க வேண்டியுள்ளது. நைஜீரியா கொடிய போகோஹறம் போராளிகளுக்கு எதிராக கசப்பான உள்நாட்டு யுத்தத்தில் ஈடுபட்டுள்ளது. அந்த நாட்டின் மொத்த சனத் தொகை 173.6 மில்லியன்கள் அது அளவில் இலங்கையை விட எட்டு மடங்கு பெரியது. அது உலகின் 32 ஆவது பெரிய நாடு, அதன் மொத்த நிலப் பரப்பு 923,768 சதுர கி.மீ.

**போர் முடிவடைந்த 2009 இன் பிற்பகுதியில் இலங்கை, துருப்புகளின் எண்ணிக்கையை 25,000 ஆல் அதிகரிக்க திட்டமிட்டது. வடக்கை பராமரிப்பதற்கு அவசியம் என்று ஜெனரல் (இப்போது பீல்ட் மார்ஷல்) சரத் பொன்சேகாவே இதை வலியுறுத்தினார். எனினும் ஜுலை 25, 2010 இல் லெப். ஜெனரல் ஜகத் ஜயசூரியா தற்போதைய பலமாகிய 200,000 மேற்பட்ட இராணுவமே அனைத்து அச்சுறுத்தல்களையும் எதிரிடப் போதுமானது எனத் தெரிவித்தார். மூன்று ஆயுதப் படை சேவைகளினதும் தலைவர்களைக் கொண்டு அமைக்கப்பட்ட குழுவினால் முன்மொழியப்பட்ட அசல் பிரேரணை நடைமுறைப் படுத்தப்பட்டிருந்தால், நாங்கள் இப்பொழுது முகங் கொடுக்கும் பொருளாதார சீரழிவு பலமடங்கு பெரிதாக்கப்பட்டிருக்கும். ஐந்து வருட காலத்தில் 2015 ஆம் ஆண்டுவரை மொத்தப் படையினரின் எண்ணிக்கையை 410,000 ஆக உயர்த்துவது என்று அந்தக் குழு திட்டமிட்டிருந்தது.**

அவுஸ்ரேலியாவின் சனத்தொகை 22,507,617 ஆகும், இது இலங்கையை விட சிறிதளவு கூடியது. ஆனால் அவுஸ்ரேலியா உலகத்திலே ஆறாவது பெரிய நாடு, இலங்கையின் மொத்த பரப்பளவான 65,610 சதுர கி.மீ உடன் ஒப்பிடுகையில் அதன் மொத்த பரப்பளவு 7,682 மில்லியன் சதுர கி.மீ ஆகும். ஆனால் அவுஸ்ரேலியாவின் இராணுவம் என அழைக்கப்படும் பாதுகாப்பு படையில் உள்ள முன்னணி செயற்பாட்டு வீரர்களின் எண்ணிக்கை 58,000 மாத்திரமே அதனுடன் ஒதுக்கத்தில் உள்ளவர்களின் தொகை 49,240.

மலேசியாவின் சனத்தொகை 30,703,353 மற்றும் அதன் பரப்பளவு 329,847 சதுர கி.மீ, இலங்கையை விட ஐந்து மடங்கு பெரியது. அதன் இராணுவத்தில் 110,000 செயற்பாட்டு வீரர்கள் மட்டுமே உள்ளனர். ஒப்பீட்டளவில் மலேசியாவின் ஒட்டுமொத்த இராணுவ பலம் பெரிதாக இருந்தாலும் இலங்கையின் இராணுவ துருப்புக்களின் பலத்துடன் தொடர்பு படுத்தி ஒப்பிடுகையில அது சிறிதாகும்.

இந்த நான்கு நாடுகளிலும் நைஜீரியா செயல்பாட்டு ரீதியான உள்நாட்டு அல்லது வெளியக அச்சுறுத்தலை எதிர்கொள்கிறது. இந்த நான்கு நாடுகளிலும் இலங்கையைத் தவிர- ஏனையவற்றில் பெரிய மற்றும் சிறிய அளவிலான ஆயுத தொழிற்சாலைகள் உள்ளன. அவுஸ்ரேலியாவிடம் மிகப் பெரிய ஆயுத தொழிற்சாலை உள்ளது. மலேசியா தனது இராணுவ தேவைக்கான சிறிய ஆயுதங்கள், வெடி பொருட்கள், வெடி மருந்துகள் மற்றும் துறை முக கப்பல் கட்டும் அமைப்புகள் போன்றவற்றில் பெரும்பாலானவற்றை தானே சமாளித்துக்கொள்கிறது.

நைஜீரியா சிறிய ரக ஆயுதங்கள், மோட்டார்கள், றொக்கட் மூலமாக செலுத்தப்படும் கிரனைட் செலுத்திகள் போன்ற நடுத்தர திறன் மிக்க ஆயுதங்களை உற்பத்தி செய்கிறது. இலங்கை மட்டுமே, அவர்களது இராணுவம் சில இராணுவ வன்பொருட்களான சிறிய மனிதரற்ற வான் இயங்கு வாகனங்கள், குண்டு துளைக்காத சட்டைகள், மற்றும் குண்டு துளைக்காத வாகனங்களுக்கான மேலதிக பாதுகாப்பு அம்சங்கள் போன்றவற்றை உற்பத்தி செய்த போதிலும், இராணுவத்துக்கு தேவையான ரவைகளிலிருந்து ரயர்கள் வரையான அனைத்தையும் இறக்குமதி செய்யவேண்டிய நிலையில் உள்ளது. கொழும்பு கப்பல் கட்டும் தளத்தில் இராணுவத்துக்கு அல்லது குடிமக்களின் தேவைக்கு ஏற்ற சிறிய படகுகளை மட்டுமே உற்பத்தி செய்ய முடியும்.

அவுஸ்ரேலியா அமெரிக்காவுக்கு ஆயதங்களை ஏற்றுமதி செய்கிறது. அதனிடம் றேய்தியான், போயிங், தேல்ஸ் மற்றும் பீ.ஏ.ஈ. என நான்கு பெரிய ஆயுத உற்பத்தி நிறுவனங்கள் உள்ளன. றேய்தியான் கொடிய கொத்துக் குண்டுகளை உற்பத்தி செய்கிறது.

அவுஸ்ரேலியாவின் நபர் ஒருவரின் மொத்த உள்நாட்டு உற்பத்தி அமெரிக்க டொலர் 37,492.85 இது இலங்கையினது 3,279 அமெரிக்க டொலரைவிட கிட்டத்தட்ட 12 மடங்கு உயர்வானது. மலேசியாவின் நபர் ஒருவரின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 17,500 அமெரிக்க டொலர்கள், இது இலங்கையினதை விட ஐந்து மடங்கு அதிகம். நைஜீரியா மட்டுமே இலங்கையை விட குறைவான எண்ணிக்கையில் உள்ளது. அதன் பாரிய சனத்தொகை காரணமாக நபர் ஒருவரின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 3,005 அமெரிக்க டொலர் ஆக உள்ளது. ஆனால் அது ஒரு எண்ணெய் உற்பத்தி நாடாகவும் ஆபிரிக்காவில் பாரிய பொருளாதாரத்தை கொண்ட நாடாகவும் உள்ளது.

சுருக்கமாகச் சொன்னால் இந்த நாடுகள் யாவும் இலங்கையைக் காட்டிலும் பெரிய இராணுவத்தை வைத்திருப்பதற்கு நல்ல வசதிகளைக் கொண்ட நாடுகள். ஆனால் மலேசியாவை தவிர வேறு எதுவும் பெரியளவு இராணுவத்தை தேர்வு செய்யவில்லை. மகாதீர் முகம்மதின் கீழுள்ள மலேசியா சீனாவை எதிர்ப்பதற்கு. அத்தகைய ஒரு அவசியத்தை கொண்டுள்ளது. ஆனால் மலேசியாவின் இராணுவ பலம் அதன் ஆயுத பலத்திலேயே தங்கியுள்ளது, இராணுவ படைகளின் பெரிய அளவில் அல்ல.

கசப்பான பியாபிரா உள்நாட்டு யுத்தம் மற்றும் இரண்டு இராணுவ சர்வாதிகாரம் என்பனவற்றால் பாதிப்படைந்த பின்னர் நைஜீரியா ஒரு பெரிய இராணுவத்தை வைத்திருந்தது ஆனால் இப்போது ஒரு சிறிய அளவான இராணுவத்தையே பராமரித்து [illegible]றது.

[illegible] அபிவிருத்தி அடைந்த நாடு என்பதற்கு மாறாக அவுஸ்திரேலியா ஆயுதத் தொழிற்சாலைகளை வைத்திருந்த போதிலும். அதனிடம் ஆழ்கடலில் போர் செய்யும் க[illegible]ட கிடையாது. அது தொடர்பாக [illegible] வெளியார் அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதற்கு 79 இடை மறித்து போர் செய்யும் விமானங்கள் உட்பட 408 விமானங்களை கொண்ட வலிமை யான வான் படையில் தங்கியுள்ளது. அவுஸ்ரேலியாவின் கடற்படையிடம் போர்க் கப்பல்களோ, ஆயுதம் தாங்கிய கப்பல்களோ, விமானம் தாங்கி கப்பல்களோ அல்லது தகர்க்கும் கப்பல்களோ கூடக் கிடையாது.

இலங்கையிடம் பெரிய கரையோரம் இருப்பதற்கு மாறாக அதன் கடற்படை பாரிய ஆயுத உபகரணங்களைப் பொறுத்தமட்டில் மிகவும் பலவீனமான நிலையிலேயே உள்ளது. 28 கரையோர பாதுகாப்பு படகுகள், அத்துடன் இறங்குதுறை படகுகள் மற்றும் தரையிலும் நீரிலும் காலாட்படை நடவடிக்கைக்கு உதவும் போக்குவரத்து கப்பல்கள் உட்பட 40 கப்பல்களை கொண்ட ஒரு கப்பற்படையை மட்டுமே கொண்டுள்ளது. இது பிரதிபலிப்பது தேசிய அரசியல் வெளியக அச்சுறுத்தலுக்கு மாறாக உள்நாட்டு அச்சுறத்தலையே இலக்காக கொண்டுள்ளது என்பதையே.

இந்த தருணத்தில் கேட்க வேண்டிய கேள்வி: சமாதானத்தை அடைந்துள்ள இந்த தருணத்தில் இந்தளவு இராணுவ வன்பொருட்கள் இலங்கைக்கு அவசியமா? என்று. அரசியல்வாதிகள் கடும்போக்கு அரசியல் விளையாட்டை விளையாடும்வரை இராணுவ திட்டமிடுபவர்கள் அதற்கு உடன்பாடாகவே பதிலளிப்பார்கள். அரசியல் ரீதியாக விட்டுக்கொடுப்புக்கு உட்படாமலும் மற்றும் எதிர்கால தமிழ் ஆயுதக்கிளர்ச்சியின் அச்சத்தை காரணம் காட்டுவார்கள் (தெற்கில் மற்றொரு சிங்கள கிளர்ச்சியையும் மறந்துவிடக்கூடாது).

போர் முடிவடைந்த 2009 இன் பிற்பகுதியில் இலங்கை, துருப்புகளின் எண்ணிக்கையை 25,000 ஆல் அதிகரிக்க திட்டமிட்டது. புதிதாக சமாதானத்தை உருவாக்கிய வடக்கை பராமரிப்பதற்கு அவசியம் என்று ஜெனரல் (இப்போது பீல்ட் மார்ஷல்) சரத் பொன்சேகாவே இதை வலியுறுத்தினார்.

எனினும் ஜுலை 25,2010 இல் லெப். ஜெனரல் ஜகத் ஜயசூரியா தற்போதைய பலமாகிய 200,000 மேற்பட்ட இராணுவமே அனைத்து அச்சுறுத்தல்களையும் எதிரிடப் போதுமானது எனத் தெரிவித்தார்.

முன்று ஆயுதப் படை சேனைகளினதும் தலைவர்களைக் கொண்டு அமைக்கப்பட்ட குழுவினால் முன்மொழியப்பட்ட அசல் பிரேரணை நடைமுறைப் படுத்தப்பட்டிருந்தால், நாங்கள் இப்பொழுது முகங் கொடுக்கும் பொருளாதார சீரழிவு பலமடங்கு பெரிதாக்கப் பட்டிருக்கும். ஐந்து வருட காலத்தில் 2015 ஆம் ஆண்டுவரை புதிதாக 210,000 வீரர்களை படையில் இணைத்துக் கொண்டு மொத்தப் படை யினரின் எண்ணிக்கையை 410,000 ஆக உயர்த்துவது என்று அந்தக் குழு திட்டமிட்டிருந்தது. இந்தத் திட்டத்துக்கான மொத்தச் செலவு 331.9 பில்லியன் ரூபா அல்லது அமெரிக்க டொலர் 2.8 பில்லியன்.

இந்த திட்டம் ஒருபோதும் செயற் படுத்தப் படாதது மகிழ்ச்சியானது. ஆனால் தற்போது உள்ள இராணுவம், நாட்டின் தற்போதைய நொருங்கத் தக்க பலவீனமான பொருளாதார பலத்துடன் ஒப்பிடுகையில் மிகவும் பெரியது என்பதுடன் அத்தகைய பெரிய போர் படைக்கு அவசியம் ஏற்படுத்தும் விதமான அச்றுத்தல் குறைவாகவே உள்ளன.

அதை ஒரு நிபுணத்துவம் வாய்ந்த பாதுகாப்பு படையின் அளவுக்கு வெட்டிக் குறைப்பதற்கும் மற்றும் அந்தப் பணத்தை பயன்படுத்தி அவசர வேலையில்லா திண்டாட்டத்தையும் மற்றும் அபிவிருத்தி பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கு செய்யவேண்டியது என்ன?

துருப்புக்களைத் தீவிர செயற்பாட்டிலிருந்து களைவதற்கு அவர்களுக்கு தெரிவு செய்யப்பட்ட துறைகளில் தொழிற் பயிற்சி வழங்குவது அல்லது மற்றைய அரசாங்கத் துறை ஊழியர்களைப் போல, மொத்தமாக ஒரு தொகை பணத்தை வழங்கி அவர்களை ஓய்வுபெறச் செய்வதை தெரிவு செய்யலாம். எதிர்கால கிளர்ச்சிகள் உருவாவதற்கான சமூக பொருளாதார காரணங்களை குறைப்பதை உறுதி செய்வதுடன் மற்றும் அவைகள் உருவான பின்னர் அவற்றை நசுக்குவதற்காக பெரிய தொகைகளை செலவிடுவதைக் காட்டிலும் அவை உருவாகாமல் உறுதி செய்வதே நல்லது.

# தேசிய இனப்பிரச்சினை தீர்விற்கு புதிய அரசியல் யாப்பு அவசியம்

## ஐயம்பதி விக்ரமரத்ன தெரிவிப்பு



நாட்டின் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் மாகாணங்களுக்கு அதிகாரப் பகிர்வு மற்றும் மனித உரிமை போன்ற அம்சங்கள் உள்ளடங்கிய புதிய அரசியல் யாப்பு ஒன்று அவசியம் என 19ஆவது திருத்தச்சட்ட உருவாக்க சபையின் தலைவரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான ஜயம்பதி விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

19ஆவது திருத்தச் சட்டம் அதிகார பரவலாக்கம் குறித்து அமையவில்லை என்றும் இந்த அரசியல் அமைப்பை கொண்டு செல்ல முடியாது என்றும் புதிய அரசியல் திருத்தம் அவசியம் என்றும் இந்த அரசியல் யாப்பு பல தடவைகள் திருத்தம் செய்யப்பட்ட ஒன்று என்றும் ஜயம்பதி விக்ரமரத்ன இந்திய ஊடகம் ஒன்றிடம் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதுள்ள யாப்பு மனித உரிமை விடயத்தில் சிறந்த முன்னேற்றம் கொண்டுவரும் என்றும் அரசியல், சிவில் மாத்திரமன்றி சமூக பொருளாதார உரிமைகளையும் வலுப்படுத்துவதாக அமைவதாகவும் தெரிவித்த ஜயம்பதி, மத்தியில் இருந்து அதிகாரங்கள் பகிரப்படும் போது ஐக்கியத்தை ஏற்படுத்த முடியும் எனவும் கூறியுள்ளார்.

# அமைச்சுப் பதவியை துறக்கும் 20 சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள்

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர்களாக இருந்து புதிய அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக்கொண்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் இருபது பேர் 20ஆவது திருத்தச்சட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் தங்கள் அமைச்சுப் பதவிகளை இராஜினாமா செய்துகொள்ள தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

19ஆவது மற்றும் 20ஆவது திருத்தச்சட்டம் சமர்ப்பிக்கப்படுவதனாலும், ஜனாதிபதியை வலுவடையச் செய்வதாகவும் தெரிவித்தே தாங்கள் அமைச்சுப் பதவியைத் பெற்றுக்கொண்டனர் எனவும்,

அதன் பின்னர் அப்பதவியை இராஜினாமா செய்துகொள்ள தீர்மானித்திருந்தனர் எனவும் குறித்த 20 பேரும் தெரிவித்துள்ளனர்.

20ஆவது திருத்தச்சட்டம் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் முதலாவதாக உள்ளூராட்சி சபை தேர்தலை நடாத்திவிட்டு பொதுத் தேரதலை நடாத்துமாறு இந்த உறுப்பினர்கள் ஜனாதிபதியிடம் கேட்டுக்கொள்ள தீர்மானித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# – தேர்தல் தினசூழ்ச்சித்திட்டம் – ஆலோசனையை வழங்காத சட்டமா அதிபர் திணைக்களம்

(கொழும்பு)

கடந்த ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் வெளியாகிக்கொண்டிருந்தபோது முன்னாள் ஜனாதிபதி மகிந்தவால் முன்னெடுக்கப்பட்டதாக கூறப்படும் சூழ்ச்சித்திட்டம் தொடர்பில், சட்டமா அதிபர் திணைக்களம் இன்னும் எவ்வித ஆலோசனையும் வழங்கவில்லையென பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆட்சியை தக்கவைத்துக்கொள்ள இந்த சூழ்ச்சித்திட்டம் முன்னெடுக்கப்பட்டதாக தெரிவித்து, வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவால் முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டையடுத்து குற்றவிசாரணைப் பிரிவினரால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

அத்துடன், முன்னாள் பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ், முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ, முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் மற்றும் முன்னாள் மேல் மாகாண அமைச்சர் உதய கம்மன்பில ஆகியோரிடம் வாக்குமூலமும் பதிவுசெய்யப்பட்டது.

அதனையடுத்து, குறித்த விசாரணை அறிக்கை சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

எனினும் அடுத்தகட்ட நடவடிக்கைகள், குறித்து சட்டமா அதிபர் திணைக்களம் தொடர்ந்து மௌனம் காத்து வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# போலிக்குற்றச்சாட்டுக்கள் மூலம் அதிருப்திக்கு ஆளாகியுள்ள அரசு

## கூறுகிறார் ஜோன்ஸ்டன்

அரசாங்கம் போலிக் குற்றச்சாட்டுக்களை சுமத்தி மக்களின் அதிருப்திக்கு உள்ளாகி வருவதாக முன்னாள் அமைச்சர் ஜோன்ஸடன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நாட்டு மக்களினால் போற்றப்பட்ட எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் மீது போலி குற்றச்சாட்டுக்களை சுமத்தி, அவர்களை தண்டிக்க அரசாங்கம் முயற்சிக்கின்றது.

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் குற்றவாளிகள் என்ற கோபல்ஸ் கொள்கை இனியும் வெற்றியளிக்காது.

மக்களின் செல்வாக்குடைய மக்களினால் போற்றப்பட்ட பல எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் மீது குற்றம் சுமத்தி அவர்களை நெருக்கடிக்குள் ஆழ்த்த அரசாங்கம் எத்தனிக்கின்றது.

செய்யாத குற்றங்களை செய்ததாக நிரூபிக்க முயற்சிக்கப்படுகின்றது.

எங்களது அரசியல்வாதிகள் கள்வர்கள் அல்ல, களவெடுக்க வேண்டிய அவசியமும் இல்லை.

எமது ஆட்சிக் காலத்தில் நாம் நாட்டை அபிவிருத்திப் பாதையிலேயே இட்டுச் சென்றோம் என ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ சிங்கள பத்திரிகையொன்றுக்கு நேர்காணல் வழங்கியுள்ளார்.

# திறைசேரி உண்டியல் மோசடி இராஜதந்திரிகளுக்கு விளக்கம்

## பீரிஸ் தெரிவிப்பு

மத்திய வங்கியின் திறைசேரி உண்டியல் மோசடிகள் குறித்து வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு தெளிவுபடுத்தப்படும் என முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான வெளிநாட்டுத் தூதரகங்கள் மற்றும் உயர்ஸ்தானிகராலயங்களின் இராஜதந்திரிகளுக்கு தெளிவுபடுத்தப்படும்.

திறைசேரி உண்டியல் மோசடி மிகவும் பாரியளவிலான நிதி மோசடிகளில் ஒன்றாகும்.



இந்த நடவடிக்கையினால் நாட்டின் பொருளாதாரத்திற்கு தொடர்ச்சியாக பாரியளவில் பாதிப்பு ஏற்படக்கூடும்.


இந்த விடயம் குறித்து முழு அளவில் ஆராயப்பட்டுள்ளது.

மத்திய வங்கியின் ஆளுநர் மட்டுமன்றி பலர் இதில் தொடர்புபட்டுள்ளனர்.

இந்த பாரிய மோசடி குறித்து வெளிநாட்டு இராஜதந்திரிகளை தெளிவுபடுத்தும் நடவடிக்கை எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ளது.

எதிர்க்கட்சியின் சில நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் இணைந்து வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு இந்த விளக்கம் அளிக்கப்படும் எனஅவர் மேலும் தெரிவித்துள்ளார்.


# எம்.பி.பதவியை பறிக்க முடியாது



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை பறிக்க முடியாது என உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது. அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாது என நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது.

# மத்திய வங்கியின் ஆளுநர் பணிக்கு திரும்பியதற்கு எதிர்ப்பு



ஊழல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்ட நிலையில் விடுமுறையில் சென்றிருந்த இலங்கை மத்திய வங்கியின் தலைவர் அர்ஜுன் மகேந்திரன் மீண்டும் பணிக்கு திரும்பியிருப்பதை தேசிய சுதந்திர முன்னணி கண்டித்துள்ளது.

அர்ஜுன் மகேந்திரன் மீது ஊழல் குற்றச்சாட்டுகளை சுமத்திய தேசிய சுதந்திர முன்னணியின் அரசியல் குழு உறுப்பினர் பியசிறி விஜேநாயக்க இதனைத் தெரிவித்தார்.

மத்திய வங்கியின் தலைவர் ஊழல் குற்றச்சாட்டுக்களிலிருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவிக்கும் கருத்துக்களை ஏற்றுக்கொள்ள முடியாதென்று கூறிய பியசிறி விஜேநாயக்க, ஐக்கிய தேசியக்கட்சியின் வழக்கறிஞர்கள் அடங்கிய குழுவொன்றினால் வழங்கப்பட்ட இந்தத் தீர்ப்பை தம்மால் ஏற்க முடியாதென்றும் தெரிவித்தார்.

இந்த ஊழல் புகார்களை பொலிஸாரின் குற்றப் புலனாய்வுப் பிரிவிடமோ அல்லது ஊழல் விசாரணை ஆணைக்குழுவிடமோ ஒப்படைத்து விசாரணைகளை மேற்கொள்ள அரசாங்கம் தவறியுள்ளதாகவும், ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்திடமிருந்து நியாயத்தை எதிர்பார்க்க முடியாது என்றும் அவர் விமர்சித்திருக்கிறார்.

விரைவில் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற்று தாம் அமைக்கவுள்ள அரசாங்கத்தின் மூலம் இந்த ஊழல் குற்றச்சாட்டுக்களை விரிவாக விசாரணை செய்ய தீர்மானித்துள்ளதாகவும் பியசிறி விஜேநாயக்க தெரிவித்தார்.

# நிரபராதி என்ற நிலையிலேயே ஆளுநர் பணிக்குத் திரும்பினார்

## என்கிறார் அமைச்சர் ரவி



(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனுக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் சம்பந்தமாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன எனவும் விசாரணைக் குழு மத்திய வங்கியின் தலைவர் நிரபராதி என்று அறிவித்துள்ள காரணத்தினாலேயே அவர் மீண்டும தனது பணிக்கு திரும்பியிருப்பதாக அமைச்சர் ரவி கருணாநாயக்க, தெரிவித்துள்ளதுடன் இதில் எந்தவித தவறும் இல்லை என்றும் தெரிவித்தார்.

எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொள்ள முடியாதென்று கூறிய ரவி கருணாநாயக்க இவை அடிப்படையற்றவை என்றும் கூறினார்.

மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் இரகசியமான முறையில் மேற்கொண்டுவந்த செயல்களை தமது அரசாங்கம் வெளிப்படையாக மேற்கொண்டு வருவதாக தெரிவித்த அமைச்சர் ரவி கருணாநாயக்க, இதன் காரணமாகவே எதிர்க்கட்சிகள் வீணான குற்றச் சாட்டுக்களை சுமத்தி வருவதாகவும் கூறினார்.

கடந்த ஆட்சிக் காலத்தில் அப்போதைய மத்திய வங்கியின் தலைவராகச் செயற்பட்ட அஜித் நிவாட் கப்ராலுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் பல குற்றச்சாட்டுக்களை முன் வைத்த போதிலும் அவை விசாரணை செய்யப்படவில்லை என்று கூறிய நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க, எனவே தற்போதைய எதிர்க்கட்சிகளுக்கு இவ்வாறான குற்றச் சாட்டுக்களை சுமத்துவதற்கு எந்தத் தகுதியும் இல்லை என்றும் விமர்சித்தார்.

# மக்களின் பெறுமதி வாய்ந்த வாக்குகள் முன்னேற்றத்துக்கு பயன்படுத்தவேண்டும்

## சந்திரகுமார் எம்.பி.தெரிவிப்பு



தமிழர் அரசியலில் மக்கள் எங்களுக்கு வாக்களிக்க வேண்டும். ஆனால் நாம் மக்களுக்கு எதுவும் செய்யமாட்டோம். மக்களும் எங்களிடம் திருப்பிக் கேள்வி கேட்க கூடாது என்ற கலாசாரத்தை ஏற்படுத்தி வைத்துள்ளனர். இந்த நிலைமை மாற்றம் பெறவேண்டும். மக்களின் பெறுமதிவாய்ந்த வாக்குகள் அவர்களின் முன்னேற்றத்துக்கு பயன்படுத்தப்பட வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் தெரிவித்துள்ளார். நேற்றைய தினம் வடக்கச்சி பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பு நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழர் அரசியலில் கடந்த பல தசாப்தங்களாக மக்களின் வாக்குகள் மூலம் மக்கள் பிரதிநிதிகளாக தெரிவு செய்யப்படுகின்றவர்கள் மக்களுக்கு எதுவும செய்யத் தேவையில்லை என்ற கலாசாரத்தை உருவாக்கியுள்ளனர்.

இந்த நிலைமை மாற்றம் பெறவேண்டும் மக்கள் தங்களின் பெறுமதி மிக்க வாக்குகளை தங்களின் முன்னேற்றத்திற்கு பயன்படுத்த வேண்டும் ஒரு முறை மக்கள் தங்களின் வாக்குகளால் வழங்கிய சந்தர்ப்பத்தை சரியாக மக்களுக்காக பயன்படுத்தாத மக்கள் பிரதிநிதிகளை மறுமுறை அதே வாக்குகளால் நிராகரிக்க வேண்டும். இந்த ஜனநாயக அரசியல் கலாசாரம் மக்களிடம் உருவாகும் போதே மக்கள் பிரதிநிதிகள் மக்களுக்காக சேவை செய்வார்கள்.

தேசியத்தை எந்த விதத்திலும் பாதுகாக்கத் தவறியவர்கள், தேசியத்தை படுகுழிக்குள் தள்ளியவர்கள்தான் இன்று போலித தேசியத்தை பேசிக்கொண்டிருக்கின்றார்கள். திம்பு முதல் ஜெனிவா வரையான பேச்சு வார்த்தைகள் வரை பேச்சு வார்த்தையில் ஈடுபட்ட தமிழ்த் தரப்புகள் அரசிடம் முதல் வைத்த கோரிக்கை மக்களின் இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்த வேண்டும் என்பதே அடுத்த கட்டமே அரசியல் தீர்வு என்று. இன்று நாம் அதனையே செய்து வருகின்றோம் எதுவுமே இன்றி மீள்குடியேறிய மக்களை அவர்களின் சொந்த இடங்களில் வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுத்து இயல்பு நிலையை கொண்டு வந்திருக்கின்றோம்.

இது இன்னும் முழுமைபெறவில்லை. ஆனால் இதில் எவற்றையும் செய்யாது எல்லாவற்றையும் விமர்சித்துக்கொண்டு இருப்பவர்கள் உண்மையிலேயே வினைத்திறனற்றவர்கள் இந்த வினைத்திறனற்றவர்கள்தான் தங்களின் இயலாமையினை மக்களிடம் மறைக்க போலித்தேசியத்தை கையிலெடுத்துள்ளனர். எனத்தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் தமிழ் மக்கள் மாற்றத்தை நோக்கிச் சிந்திக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்ட அவர் தற்போதே தமிழ் மக்கள் தங்களின் வாழ்க்கையில் முன்னேற்றத்தை நோக்கிச் செல்கின்ற காலம் மலர்ந்துள்ளது.

முன்னைய யுத்தகாலத்தில் நெருக்கடி மிக்க சூழலில் பிள்ளைகளின் கல்வி பற்றியோ, வீட்டைப்பற்றியோ, வீதியைப் பற்றியோ, மின்சாரத்தைப் பற்றியோ சிந்திக்க முடியாத சூழல் காணப்பட்டது. அந்தளவுக்கு நெருக்கடி மிக்க நிலைமை காணப்பட்டது. சொந்த மண்ணை, சொந்த ஊரை, சொந்த வீட்டை விட்டு இடம்பெயர்ந்து அவல வாழ்க்கை வாழும் நிலைமை இருந்தது. ஆனால் தற்போது அந்த நிலைமை முற்றிலும் மாற்றப்பட்டுள்ளது என்றார்.

இந்த மக்கள் சந்திப்பு நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன், வட்டக்கச்சி பிரதேச கட்சியின் செயற்பாட்டாளர்கள் கெங்காதரன் (சிறி) மற்றும் சீலன் பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# கந்தசாமி கோவிலின் தேர்த்திருவிழா



நீர்வேலி கந்தசுவாமி கோவிலின் தேர்த்திருவிழா கடந்த சனிக்கிழமை காலை பக்தி பூர்வமாக இடம்பெற்றது.

விநாயகப்பெருமான், பார்வதி சமேத பரமேஸ்வரப் பெருமான், வள்ளி தேவசேனா சமேத ஆறுமுகப் பெருமான் ஆகியோர் மூன்று சித்திரத் தேர்களில் உலா வந்து அடியவர்களுக்கு அருள் பாலித்தனர்.

சித்திராப் பூரணையை நிறைவு நாளாகக் கொண்டு நீர்வேலி கந்தனுக்கு 19 நாட்கள் திருவிழா நடைபெறுவது வழமை.

1830 ஆம் ஆண்டில் சிவசங்கரபண்டிதரால் கந்தபுராண படலம் ஆரம்பிக்கப்பட்ட வரலாறும் இவ்வாலயத்திற்குப் பெருமையானது. (48)

# கோடாவைத்திருந்த பெண்ணை விளக்கமறியலில் வைக்க உத்தரவு

(கரணவாய்)

துன்னாலைப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் கோடா வைத்திருந்த பெண்ணொருவரை விளக்கமறியலில் வைக்க பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நெல்லியடி பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட குறித்த பெண்ணை பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர்படுத்திய நிலையில் எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

ஏற்கனவே இப்பெண் இதுபோன்ற கோடா வைத்திருந்த குற்றச்சாட்டில் 70 ஆயிரம் ரூபா தண்டம் செலுத்தியதுடன் விளக்கமறியலில் இருந்தவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (18)




சூடு - சுவை - சுவாரசியம் - இதுதான் தினமுரசு

# 39 வருடங்களின் பின்னர் சாதனை படைத்த முர்ரே




ஜேர்மனி முனிச் நகரில் நடைபெற்ற முனிச் ஓப்பன் ரென்னிஸ் போட்டியில் ஆண்டி முர்ரே சம்பியன் பட்டம் பெற்று சாதனை படைத்துள்ளார்.

போட்டித்தொடரின் ஆண்கள் ஒற்றையருக்கான இறுதிப் போட்டி நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதில் பிரிட்டன் வீரர் ஆண்டி முர்ரே ஜேர்மனியின் பிலிப் கோல்ஸ்கிரெய்பரை எதிர்கொண்டார்.

ஆண்டி முர்ரே 3-4 என பின்தங்கிய நிலையில் இருக்கும் போது மழை குறுக்கிட்டது. இதனால் ஆட்டம் நிறுத்தப்பட்டது.

நிறுத்தப்பட்ட ஆட்டம் நேற்று மீண்டும் தொடங்கியது. இருவரும் விட்டுக்கொடுக்காமல் விளையாடினார்கள். இதனால் முதல் செட் "டை பிரேக்கர்" வரை சென்றது.

இறுதியில் முர்ரே 7-6 (7-4) என அந்த செட்டை கைப்பற்றினார். ஆனால், இரண்டாவது செட்டை 5-7 என இழந்தார்.

இதனால் சம்பியன் பட்டத்தை முடிவு செய்யும் மூன்றாவது செட்டை கைப்பற்ற இருவரும் ஆக்ரோஷமாக விளையாடினார்கள்.

"டை பிரேக்கர்" வரை சென்ற இந்த செட்டை முர்ரே 7-6 (7-4) என போராடி கைப்பற்றினார். இதனால், 2-1 என முர்ரே வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தை வென்றார்.

களிமண் தரையில் பிரிட்டன் வீரர் ஒருவர் ஏடிபி சம்பியன் பட்டம் வெல்வது கடந்த 39 வருடங்களுக்கு பின் இதுதான் முதன்முறையாகும்.

இதற்கு முன் 1976 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் பஸ்டர் மோட்ராம் என்பவர் பால்மா போட்டியில் சம்பியன் பட்டம் வென்றிருந்தார். அதன்பின் முர்ரே தற்போது பட்டம் வென்றுள்ளார்.

# இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் பணிப்பாளராக ஸ்ரோர்ஸ்




இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் பணிப்பாளர் பதவி முன்னாள் அணித் தலைவர் அண்ட்றூ ஸ்ரோஸ்"க்கு வழங்கப்படுவதற்கான சாத்தியங்கள் அதிகரித்துள்ளன.

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் முகாமைத்துவப் பணிப்பாளராக பதவி வகித்த போல் டௌன்டன், கடந்த ஏப்ரல் மாதத்துடன் விலகிக்கொண்டதை அடுத்து அப் பதவிக்கு ஒருவரை நியமிப்பதற்கு இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் கிரிக்கெட் கட்டுப் பாட்டுப்பாட்டுச் சபை ஆலோசித்து வருகின்றது

இப் பதவியை வகிப்பதற்கு தாங்கள் விரும்புவதாக முன்னாள் அணித் தலைவர்களான மைக்கல் வோன், அலெக் ஸ்டுவர்ட் ஆகியோரும் தெரிவித்திருந்தனர்

ஆனால் மைக்கல் வோன் இறுதி நேரத்தில் விலகிக் கொள்ளத் தீர்மானித்ததால் பெரும்பாலும் அண்ட்றூ ஸ்ட்ரோஸ"க்கு அப்பதவி வழங்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# ஓய்வை அறிவித்தார் ஜோனதன் ட்ரொட்



இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னணி துடுப்பாட்டக்காரரான ஜோனதன் ட்ரொட் தனது கிரிக்கெட் வாழ்க்கையில் இருந்து ஓய்வு பெற போவதாக தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து அணியின் நட்சத்திர வீரர்களில் ஒருவராக திகழ்ந்தவர் ஜோனதன்ட்ரொட்

இவரது அற்புதமான சில துடுப்பாட்டங்களை இரசிகர்கள் அவ்வளவு எளிதில் மறக்க முடியாது.

எனினும் சமீபகாலமாக ஜோனதன் ட்ரொட்டின் செயற்பாடு சொல்லும் அளவுக்கு இல்லை.

கடைசியாக மேற்கிந்திய தீவுகள் அணியுடனான போட்டியில் பங்குபற்றிய இவர் 6 இனிங்சில் விளையாடி வெறும் 72 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொண்டார்.

இதன்காரணமாகவே ட்ரொட் தனது ஓய்வு முடிவை அறிவித்துள்ளார்.

மேலும் இங்கிலாந்து கிரிக்கெட் அணியில் பங்காற்ற போதுமான திறன் தற்போது தன்னிடம் இல்லை என இங்கிலாந்து கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு தெரிவித்துள்ளார்.

இதுவரை ட்ரொட் 52 டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றி 3835 ஓட்டங்களை எடுத்துள்ளார்.

மேலும் 68 ஒரு நாள் போட்டிகளில் பங்குபற்றி 2819 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டுள்ளார். என்பது குறிப்பிடத்தக்கது.

# போட்டிகள் ஒளிபரப்பு மீளவும் சி.எஸ்.என். இற்கு

2015 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையில் இலங்கை கிரிக்கெட் அணி பங்குகொள்ளும் அனைத்து போட்டிகளையும் ஒளிபரப்புவதற்கான உரிமையை சி.எஸ்.என் நிறுவனம் மீண்டும் பெற்றுக்கொண்டது.

இது தொடர்பில் இலங்கை கிரிக்கெட் நிறுவனம் கோரியிருந்த கேள்வி மனுபத்திரத்தில் சி.எஸ்.என் நிறுவனம் அதிக விலை செலுத்தி இந்த உரிமத்தை பெற்றுக்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சி.எஸ்.என் நிறுவனம் 175.5 மில்லியன் ரூபாவையும், இலங்கை தேசிய ரூபவாஹினி கூட்டுத்தாபனம் 110 மில்லியன் ரூபாவையும், கெபிட்டல் மஹாராஜா நிறுவனம் 51.5 மில்லியன் ரூபாவையும் கேள்வி மனு கோரலில் குறிப்பிட்டுள்ளன.

இந்நிலையில் 2015 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையில் இலங்கை கிரிக்கெட் அணி விளையாடும் அனைத்து போட்டிகளையும் ஒளிபரப்பும் உரிமையை சி.எஸ்.என் நிறுவனம் பெற்றுக்கொண்டுள்ளது.

இதேவேளை 2012 முதல் 2015 வரையிலான காலப்பகுதியில் சி.எஸ்.என் நிறுவனம் கிரிக்கெட் போட்டிகளை ஒளிபரப்பியதற்காக செலுத்த வேண்டிய 125 மில்லியன் ரூபாவை அண்மையில் செலுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# விவரண திரைப்படத்தில் தோன்றுகிறார் போல்ட்



ரியோ 2016 ஒலிம்பிக் போட்டிகளுக்கான தனது முன்னேற்பாடுகள் மற்றும் 2017இல் ஓய்வு பெறுவது ஆகியன தொடர்பான விவரணத் திரைப்படத்தில் ஹிசைன் போல்ட் தோன்றவுள்ளார்.

ஒலிம்பிக் விளையாட்டு விழாகளில் 6 தங்கப் பதக்கங்களை வென்றுள்ள ஹிசைன் போல்ட இம் மாதம் முதல் விவரணத் திரைபடத்திற்கான ஒளிப்பதிவில் கலந்துகொள்ளவுள்ளார்.

அத்துடன அவரது கடந்த கால மெய்வல்லுநர் வாழ்க்கையும் இதில் உள்ளடக்கப்படவுள்ளது.

அக்காலப் பகுதியில் 100 மீற்றர் மற்றும் 200 மீற்றர் ஓட்டப் போட்டிகளில் ஹிசைன் போல்ட் உலக சாதனைகளை நிலைநாட்டியமை குறிப்பிடத்தக்கது.

இந்த விவரணத் திரைப் படத்தை கேப் மற்றும் பென் டேர்னர் ஆகியோர் ஒளிப்பதிவு செய்யவுள்ளனர். இந்தத் திட்டத்தில் இணைவதையிட்டு நான் உணர்ச்சிவசப்படுகின்றேன்.

கேப் மற்றும் பென் ஆகியோரை நான் சந்தித்தபோது அவர்களது முன்னைய வேலைகள் தொடர்பாக அறிந்து மகிழ்ச்சி அடைந்தேன்.

எனது கதையை அவர்களுக்கு சொல்வதுதான் பொருத்தம் என நான் உணர்ந்தேன்.

ரியோ 2016 இற்கான எனது பயணத்தை அவர்களிடம் எடுத்துக்கூற காத்திருக்கின்றேன்.

இது வேடிக்கையாகவும் விநோதமாகவும் இருக்கும் என நான் நம்புகின்றேன் என அவர் தெரிவித்தார்.

# தூக்கம் போனதால் அதிகரித்த உறுதிப்பாடு



டெல்லி அணிக்கு எதிரான போட்டியில் தனது அதிரடி ஆட்டத்திற்கு காரணமாக இருந்த விடயம் பற்றி ராஜஸ்தான் வீரர் ரஹானே மனம் திறந்து பேசியுள்ளார்.

ஐபிஎல் தொடரில் டில்லி அணிக்கு எதிரான போட்டியில் ராஜஸ்தான் அணி 14 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதில் அதிரடியாக விளையாடிய ரஹானே 54 பந்துகளில் 91 ஓட்டங்கள் எடுத்தார்.

இந்நிலையில் அதிரடி ஆட்டம் பற்றி ரஹானே கூறுகையில், மும்பைக்கு எதிரான போட்டியில் 16 ஓட்டங்களில் அவுட் ஆன போது மிகவும் வருந்தினேன்.

அன்று ஆட்டமிழந்ததை நினைத்து, அணியின் தோல்வி பற்றிய வேதனையில் உறக்கமிழந்தேன். நான் ஆடிய மோசமான ஷொட், மற்றும் தோல்வி என்னை மிகவும் பாதித்தது.

அதனால் இந்தப் போட்டியில் சிறப்பாக ஆடுவது என்ற உறுதிப்பாடு என்னிடம் ஏற்பட்டது. நான் சதம் குறித்து யோசிக்கவேயில்லை, கடைசி ஓவரில் முடிந்த வரை ஷொட்களை ஆடவே நினைத்தேன் என்று கூறியுள்ளார்.

டெல்லி அணிக்கு எதிரான அன்றைய போட்டியில் ரஹானே, கருண் நாயருடன் சேர்ந்து 113 ஓட்டங்களை சேர்த்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

IPL

## ஐ.பி.எல். இன்றைய ஆட்டம்

பெங்களூர் எதிர் பஞ்சாப்

இடம் :- பெங்களூர்

நேரம் :- இரவு 8.00 மணி

# பங்களாதேஷிற்கு செல்கிறது இந்திய அணி

(புதுடெல்லி)

இந்திய அணி அடுத்த மாதம் (ஜூன்) சுற்றுப்பயணம் செய்து ஒரு டெஸ்ட் மற்றும் 3 ஒருநாள் போட்டிகளில் விளையாடுகிறது.

இதற்கான போட்டி அட்டவணையை இந்திய கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது.

ஜூன் 10 ஆம் திகதி முதல் 14 ஆம் திகதி வரை டெஸ்ட் போட்டி பதுல்லா நகரில் நடக்கிறது. அதைத் தொடர்ந்து 3 ஒருநாள் போட்டிகள் ஜூன் 18, 21, மற்றும் 25 ஆம் திகதிகளில் மிர்பூரில் நடக்கிறது.

டெஸ்ட் போட்டி காலை 9.30 மணிக்கு தொடங்குகிறது. ஒரு நாள் போட்டிகள் பகல் இரவாக நடக்கிறது. இந்திய நேரப்படி பிற்பகல் 2 மணிக்கு நடக்கிறது.

# முதலாவது கால்பந்தாட்டப் போட்டி புனித அந்தோனியார் சம்பியன்



புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள மடு மாந்தை கால்பந்தாட்ட லீக் நடாத்திய முதலாவது கால்பந்தாட்டப் போட்டியில் மடு மாதா வெற்றிக் கிண்ணத்தை நெடுங் கண்டல் புனித அந்தோனியார் விளை யாட்டுக் கழகம் சுவீகரித்தது.

மடு மாந்தை கால்பந்தாட்ட லீககில் அங்கம் வகிக்கும் கழகங்கள் பங்குபற் றிய இந்த கால்பந்தாட்டப் போட்டியின் இறுதி ஆட்டம் பெரிய பண்டிவிரிச்சான், வள்ளுவர் விளையாட்டுக் கழக மைதா னத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடை பெற்றது.

போட்டி ஆரம்பித்த இரண்டாவது நிமி டத்தில் ரீ. ஏ. சபீசன் 3:0 என அலாதியாக கோல் ஒன்றைப் போட்டு புனித அந்தோனி யார் கழகத்திற்கு தெம்பூட்டினார்.

ஐந்து நிமிடங்கள் கழித்து அக் கழகம் சார்பாக எஸ்.ரொஷாந்தன் இரண்டாவது கோலைப் போட் டார்.

இறுதி ஆட்டத்தில் வள்ளு வர் கழகத்தை எதிர்த்தாடிய புனித அந்தோனியார் கழகம் 3 இற்கு 0 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்று சம்பிய னானது.

இந்த இரண்டு கோல்களி னால் துவண்டுவிடாமல் விளை யாடிய வள்ளுவர் கழகம் கோல போடுவதற்கு பல தடவைகள் முயற்சித்த வண்ணம் இருந்தது.

இதனிடையே இரண்டு இலகுவான கோல் போடும் வாய்ப்புகளையும் தவற விட் டது. இது அக் கழகத்தின் தோல்விக்கு அடிகோலுவதாக அமைந்தது.

இடைவேளையின் பின்னர் 55 ஆவது நிமிடத்தில் புனித அந்தோனி யார் கழகம் சார்பாக ஜே.செட் சென் மூன் றாவது கோலைப் போடடார்.

இப் போட் டியில் சம்பியனான புனித அந்தோனி யார் கழகத்திற்கு மடு மாதா வெற்றிக் கிண்ணத்துடன் சம்பியன் கிண்ண மும் வழங்கப்பட்டது. அத்துடன் கழக வீரர்களுக்கு தங்கப் பதக்கங்கள் சூட் டப்பட்டன.

இரண்டாம் இடத்தைப் பெற்ற வள்ளுவர் கழகத்திற்கு கிண்ணம் ஒன்று வழங்கப் பட்டதுடன் வீரர்களுக்கு வெள்ளிப் பதக் கங்கள் சூட்டப்பட்டன.

வட மாகாண சபை மீன்பிடி, போக்கு வரத்து, கிராமிய அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பிரதான கிண்ணத்தை வழங்கினார். வட மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் மடு மாந்தை கால் பந்தாட்ட லீக் முக்கியஸ்தர்களும் கலந்து சிறப்பித்தனர்.

தனது முதல் முயற்சியில் மடு மாந்தை கால்பந்தாட்ட லீக மிகக் குறுகிய காலத் தில் இப் போட்டிகளை வெற்றிகரமாக நடத்தியதன் மூலம் கால்பந்தாட்ட விளையாட்டை ஊக்குவிப்பதில் இந்த லீக் எத்தகைய அர்ப்பணிப் புடன் செயறபடுகின்றது என்பதை உணர்த்துகின்றது.

இதேவேளை இப் போட்டிகளில் கலந்துகொண்ட சகல கழகங்களுக் கும் இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனம் கால்பநதுகளை அன் பளிப்புச் செய்தது.

## தோட்டவெளி ஐக்கியம் வெற்றி

மன்னார் கால்பந்தாட்ட லீக்கினால் நடாத்தப்படும் கால்பந் தாட்டச் சுற்றுப்போட்டியில் தோட்டவெளி ஐக்கிய விளை யாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.

தோட்டவெளி விளையாட்டுக்கழக அணியும் அடம்பன் ஐக்கிய விளையாட்டுக்கழக அணியும் மோதிய போட்டியில் தோட்டவெளி விளையாட்டுக்கழக அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுள்ளது. மேற்படி போட்டி கடந்த ஞாயிற்றுகிழமை நடைபெற்றது.

# புட்சல் கால்பந்துப் போட்டி ஏழாலை ஞானமுருகன் சம்பியன்



இளைஞர் சேவை மன்றத் தின் கோப் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நடாத்தப்படும் அணிக்கு 5 பேர் கொண்ட புட்சல் கால் பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் ஏழாலை ஞானமுருகன் இளை ஞர் கழகம் சம்பியனாகியது.

காரைநகர், தெல்லிப்பளை, உடுவில், சங்கானை, சண்டிலிப் பாய் ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த இளைஞர் கழகங்கள் பங்கு பற்றும் இந்தச் சுற்றுப் போட்டியின் முதலாவது அரையிறுதி ஆட்டம் கடந்த சனிக்கிழமை மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடை பெற்றது.

இதில் சாவற்கட்டு மகாத்மா இளைஞர் கழக அணியும் ஏழாலை ஞானமுருகன் இளை ஞர் கழக அணியும் மோதின. முதல்பாதி ஆட்டத்தில் ஞான முருகன் அணிக்கு எதிரணியின் வீரர் ஒருவரால் சேம் சைட் கோல் ஒன்று கிடைக்கப் பெற்றது.

இரண்டாவது பாதி ஆட்டத் தில் மகாத்மா அணி பதில் கோல் அடித்தது. எனினும் அதனை முறி யடிக்கும் விதமாக ஞானமுரு கன் அணி ஒரு கோலைப் பெற்றது. ஞானமுருகன் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று முதல் அணியாக இறுதிக்குள் நுழைந்தது.

இரண்டாவது அரையிறுதி யில் மகாஜன இளைஞர் கழக அணியும் ஈவினை கலைமகள் இளைஞர் கழக அணியும் மோதின. ஆரம்பம் முதலே போட்டியை கட்டுப்பாட்டில் வைத்திருந்த ஈவினை கலைமகள் இளைஞர் கழக அணி அடுத்தடுத்து கோல் களைப போட்டு அதிர்ச்சியளித் தது, 2 கோல்களை ஈவினை கலை மகள் இளைஞர் கழக அணி பெற்றபோதும் பதிலுக்கு மகா ஜண இளைஞர் கழக அணியால் ஒரு கோலையே பெறமுடிந்தது.


இதனால் 2:1 என்னும் கோல் கணக்கில் ஈவினை கலைமகள் இளைஞர் கழக அணி வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது. இறுதிப் போட்டி யில் ஏழாலை ஞானமுருகன் இளைஞர் கழகமும் ஈவினை கலை மகள் இளைஞர் கழக அணி மோதின.

விறுவிறுப்பாக இடம்பெற்ற போட்டியில் போட்டி ஆரம்பித்து குறுகியநேரத்தில் ஏழாலை ஞான முருகன் இளைஞர் கழகம் கோலொன்றினைப் போட்டு முன்னிலை பெற்றது.

பதிலுக்கு தொடர்ந்து இரு அணிகளும் கோல் போட பல மாக முயற்சித்தன. இதனால் மேலும் ஒவ்வொரு கோல்கள் இரு அணி களுக்கும் கிடைக்கப்பெற்றன.

2:1 என்னும் கோல்கணக்கில் ஏழாலை ஞானமுருகன் இளை ஞர் கழகம் முன்னிலை பெற்றபோது பதிலுக்கு கோல்களைப் பெற ஈவினை கலைமகள் இளைஞர் கழக அணி முயற் சித்த போதும் அது சாத்தியமாகாமல் போக இறுதியில் 2:1 என்னும் கோல் கணக்கில் ஏழாலை ஞானமுரு கன் இளைஞர் கழகம் தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் கோப் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நடத்தப்பட்ட அணிக்கு 5 பேர் கொண்ட புட்சல் கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் சம்பியனாகி யது. (48)

## விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு



கோப் (HOPE) கனவு காண்பிப்பதற்கல்ல வழிகாட்டுவதற்கு என்ற வேலைத் திட்டத்தின் கீழ், இளைஞர் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் பகிர்ந்தளிக்கும் நிகழ்வு நாடுபூராகவும் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் , HOPE செயற்றிட்டத்தின் கீழ் சண்டிலிப்பாய், சங்கானை, உடுவில், தெல்லிப்பழை மற்றும் காரைநகர் ஆகிய பிரதேச செயலக பிரிவுகளிலுள்ள இளைஞர் சேவைகள் மன்றங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் கடந்த சனிக்கிழமை நடை பெற்றது.

இளைஞர் சேவைகள் மன்றத்தின் மாவட்ட சம்மேளனத் தலைவர் எஸ்.லக்ஷன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட அரச அதிபர் வேதநாயகன் கலந்து கொண்டார்.

இதில் சங்கானை பிரதேச செயலர் பிரிவில் 32 கழகங்கள், தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் 31 கழகங்கள், காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் 14 கழகங்கள், சண்டிலிப்பாய் பிரதேச செய லர் பிரிவிகங்கள் என மொத்தம் 161 கழகங்களுக்கு உதை பந்தாட்டம், கரப்பந்து, வலைப்பந்து, மென்பந்து கிரிக்கெட் உபகரணங்களும் மற்றும் கரம்போட் என்பனவும் வழங்கப்பட்டன. (48)

# ஜே.வி.பி-யின் ஏப்ரல் கிளர்ச்சியின் 44 ஆண்டு நிறைவில் சில நினைவுகள்

5

- முருகபூபதி -





விஜேசூரியா மற்றும் சில இராணுவத்தினராலும் தொடர்ச்சியான சித்திரவதைக்குப் பின்னர் மனம்பேரி கதிர்காமம் வீதியில் நிர்வாணமாக துப்பாக்கி முனையில் இழுத்துச் செல்லப்பட்டாள்.

(இந்தக் காட்சியை எழுதும் நானோ இதனைப்படிக்கும் வாசகர்களோ கதிர்காமத்தில் நடந்த அந்தக் கொடுமையை நேரில் பார்த்திருக்கமாட்டோம். ஆனால் 1994 ஆம் ஆண்டு திரைக்கு வந்த சேகர் கபூர் இயக்கிய சம்பல் பள்ளத்தாக்கு பூலான் தேவி பற்றிய திரைப்படம் பண்டிட் குவின் படத்தை பாருங்கள். அதில் நடிகை சீமா பிஸ்வாஸ், பூலான் தேவியாக எப்படி நிர்வாணமாக அழைத்துச்செல்லப்பட்டு பொதுமக்களின் முன்னிலையில் சித்திரவதை செய்யப்பட்டு அவமானப்படுத்தப்பட்டாள் என்பதை தெரிந்துகொள்வீர்கள்.)

சார்ஜன்ட் அமரதாஸ ரத்நாயக்கா என்பவன் கைகளை தூக்கியபடி சோர்ந்து நின்ற மனம்பேரியை சுட்டான். அவள் தரையில் விழுந்து தண்ணீர் கேட்டாள். அவளுக்கு எலடின் என்ற ஊர்வாசி தண்ணீர் கொடுக்கச் சென்றபொழுது இராணுவத்தால் தடுக்கப்பட்டார். அவள் இனி பிழைக்கமாட்டாள் என நினைத்துக்கொண்டு விஜேசூரியாவும் ரத்நாயக்காவும் முகாமுக்கு திரும்பினர்.

அவளைச் சுடத் தெரிந்தவர்களுக்கு அவள் உடலை புதைக்க மாத்திரம் ஊர்வாசிகள் தேவைப்பட்டனர். ஆனால் - அவள் குற்றுயிராகவே தண்ணீர் கேட்டு துடித்தாள். இராணுவம் அகன்றதும் எலடின் அவளுக்கு தண்ணீர் கொடுத்தார். தனது காதணிகளை கழற்றி தனது தங்கையிடம் கொடுக்கச்சொன்னாள். அவ்வேளையில் அவளுக்கு அவள் குடும்பத்தின் மீதே பிரியம் இருந்தது.

அவளும் மற்றவர்களுடன் காடுகளுக்குள் மறைந்து தலைமறைவாகியிருந்தால் சில வேளை தப்பியிருக்கவும் முடியும். சில வேளை எதிர்காலத்தில் கதிர்காமம் பிரதேசத்தில் அரசியல்வாதியாகி பின்னாளில் பாராளுமன்றமும் சென்றிருப்பாள்.

குற்றுயிராக இருந்த மனம்பேரியை மற்றும் ஒருவன் விஜேசூரியாவின் உத்தரவின் பேரில் சுட்டுத்தள்ளினான். கதிர்காமம் சிங்களவர், தமிழர், இஸ்லாமியர் வணங்கும் புனித பூமி. மனம்பேரியின் உடலை அந்த மண்ணில் புதைப்பதற்கு இராணுவத்தால் நிர்ப்பந்திக்கப்பட்டவர்களும் இந்த மூவினத்தையும் சேர்ந்தவர்கள்தான் என அறிந்தால் ஆச்சரியப்படுவீர்கள்.

எலடின் என்ற சிங்களவர், காதர் என்ற இஸ்லாமியர், பெருமாள் என்ற தமிழர்.

இன்றும் முள்ளிவாய்க்கால் போர்க்குற்றம் பற்றி உலகெங்கும் பேசப்படுகிறது. ஆனால் 1971 இல் நடந்த இராணுவ பொலிஸ் தரப்பு குற்றங்கள் பேசப்படவில்லை. நதிகளில் மிதந்து கடலில் சங்கமித்த சடலங்கள் குறித்து குரல் எழுப்பப்படவில்லை. பொலிஸ் நிலையங்களுக்கு பின்னால் எரிக்கப்பட்டவர்களின் கதைகள் மூடிமறைக்கப்பட்டன.

1987 - 1989 இலும் இந்தக் காட்சிகளே தொடர்ந்தது. மக்கள் விடுதலை முன்னணி பீனிக்ஸ் பறவை போன்று உயிர்த்தெழுந்தது.

1971 ஏப்ரல் கிளர்ச்சியின் பொழுதும் 1987 இலும் இலங்கை அரசுக்கு துணைவந்தது இந்திய அரசு. முன்னர் இந்திரா காந்தியும் பின்னர் ராஜீவ் காந்தியும் பதவியில் இருந்தார்கள். முள்ளிவாய்க்காலிலும் போர் முடிவுக்கு வந்தபொழுது பக்கத்துணையாக நின்றதும் இந்திய அரசுதான்.

இலங்கையின் ஆளும் வர்க்கத்தை தொடர்ந்து காப்பாற்றிய பெருமை இந்தியாவுக்குரியது.

ஆனால் - இந்தப் போர்களில் தமது இன்னுயிர்களை நீத்தவர்கள் பலரதும் அரசியல் தேவைகளுக்கு பேசு பொருளானார்கள்.

ஆம்... மனம்பேரியின் கொலை தொடர்பான விசாரணை நீதிமன்றம் வந்தபொழுது அதனைத் தவறாமல் பார்க்க வந்தவர்தான் ரணசிங்க பிரேமதாஸ.

இறுதியில் அந்த விசாரணையில் விஜேசூரியாவும் சார்ஜன்ட் அமரதாசவும் தண்டிக்கப்பட்டனர். சிறையிலிருந்தபொழுது விஜேசூரியா சுகவீனமுற்று இறந்தான்.

சார்ஜன்ட் அமரதாச தண்டனைக் காலம் முடிவுற்று வெளியே வந்த பின்னர் 1988 இல் ம.வி.முன்னணியினர் அவனைச் சுட்டுக்கொன்று பழி தீர்த்துக்கொண்டனர்.

1977 பொதுத்தேர்தல் பிரசாரங்களில் பிரேமதாஸ மனம்பேரி மகாத்மியம் பாடிப்பாடியே ஐக்கிய தேசியக் கட்சியின் வாக்கு வங்கியை பெருக்கினார்.

பேச்சுடன் நிற்காமல் பதவிக்கு வந்ததும் மனம்பேரிக்கு கதிர்காமத்தில் நினைவுச்சின்னமும் அமைத்து அவளின் குடும்பத்திற்கு ஒரு வீடும் கட்டிக்கொடுத்தார்.

1977 இல் விடுதலையான மக்கள் விடுதலை முன்னணி தோழர்கள், முதலில் கதிர்காமம் சென்று அந்த இடத்தை தேடிக்கண்டுபிடித்து மலர்தூவி அஞ்சலி செலுத்தினர்.

தோழர் லயனல் போப்பகே மனம்பேரி பற்றிய உருக்கமான பாடலை எழுதிப்பாடினார், இலங்கையின் பல பாகங்களிலும் அந்தப்பாடல் பாடப்பட்டது. கேட்கும் பொழுது கண்ணீர்வரும்.

பாடல் இடம்பெற்ற விடுதலைக்கீத மேடைகள் தோறும் அவளது படமும் காண்பிக்கப்படும்.

மனம்பேரி கொல்லப்பட்டு இரண்டு ஆண்டுகளின் பின்னர் சிங்கள திரைப்பட இயக்குநர் திமோதி வீரரட்ணவுக்கு பிறந்த குழந்தை சங்கீதா. சங்கீதா வீரரட்ண பின்னாளில் சிறந்த திரைப்பட நடிகையாக புகழ்பெற்று பல விருதுகளும் பெற்றார்.

சங்கீதா வீரரட்ண மனம்பேரியின் பாத்திரம் ஏற்று நடித்த திரைப்படம் வெளியாகியது.

மகாபாரத காவியத்தில் வரும் பாஞ்சாலியின் துகிலை பலபேர் பார்த்திருக்க துச்சாதனன் உரிந்தபொழுது கிருஷ்ணபரமாத்மா அவள் மானம் காத்தார். கதிர்காமத்தில் பிரேமாவதி மனம்பேரியின் துகிலை அந்த துஷ்டன் விஜேசூரிய உரியும்பொழுது கதிர்காமக்கந்தன் நிஷ்டையில் இருந்தார்.

ஒன்று காவியம். மற்றது வரலாறு. கதிர்காமத்தில் மாணிக்க கங்கை ஓடிக்கொண்டே இருக்கிறது. அந்த கங்கை நதியோரத்தில் பிறந்த கங்கை மகள் பிரேமாவதி மனம்பேரி இன்றும் நினைவுகளில் ஓடிக்கொண்டே இருக்கிறாள்.

(முற்றும்)

# தேசத்திற்கு மகுடம் 2014 இல் கிழக்குப் பல்கலைக்கழகம்

- த. விவேகானந்தராசா -

தேசத்திற்கு மகுடம் தேசிய கண்காட்சி 2014இல் பங்கெடுத்த கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைத்துறையினர் வடிவமைத்திருந்த காட்சிக்கூடம் பல்வேறு வகைகளில் முக்கியத்துவம் உடையதாக பேசப்பட்டுள்ளது.

நுண்கலைத்துறையின் காட்சிக்கூடம் மற்றும் ஆற்றுகைவெளி மூலம் கிழக்குவாழ் தமிழ்பேசும் மக்களின் பன்முகப் பண்பாடுகளின் வெட்டுமுகத் தோற்றம் தெளிவாகப் புலப்படுத்தப்பட்டதாக கண்காட்சியில் கலந்துகொண்ட பலரது உரையாடல்கள் தெரிவிக்கின்றன.

நுண்கலைத்துறையின் கண்காட்சி கூடம் உள்வாங்கியிருந்த ஒளிப்படங்கள், ஓவியங்கள், அலங்காரங்கள், வாத்திய இசைக்கருவிகள், ஏனைய வடிவமைப்புக்கள் மூலம் கிழக்கின் பல்லினப் பண்பாடுகளை நாட்டின் பல பகுதிகளைச் சேர்ந்தோரும் அறிய வாய்ப்பளிக்கப்பட்ட அதேவேளை கண்காட்சியின் ஒரு பகுதியாய் அமைந்த ஆற்றுகைவெளி பாரம்பரியக்கலைகளின் ஆற்றுகைகளுக்கும் கலைஞர்களது ஆற்றல்களின் வெளிப்பாடுகளுக்குமான களமாக அமைந்திருந்தமை முக்கிய விடயமாகும்.

காட்சிக்கூடமாகவும் கைவினைப்பொருட்களின் விற்பனைக் கூடமாகவும் ஆற்றுகைவெளியாகவும் தொழிற்பட்ட நுண்கலைத்துறையின் கண்காட்சி ஒழுங்கமைப்பில் இலங்கைத் தமிழர்களின் பாரம்பரிய அரங்கக் கட்டடக்கலைகளான களரி, தோரண வடிவமைப்பு, கைவினைப்பொருட்களின் காட்சி மற்றும் விற்பனை, பாரம்பரிய வாத்தியங்களை இணக்குதலும் இசைத்தலும், வேடர் சமூகத்தின் சடங்கு நிகழ்வு, பறங்கியரின் கபறிஞ்ஞா ஆற்றுகை மட்டக்களப்பு வடமோடி கூத்தரங்க ஆற்றுகைகள் எனப் பலவும் சங்கமித்திருந்தமை சிறப்பம்சமாகும்

இலங்கைத் தமிழர்களின் பாரம்பரிய அரங்கக்கட்டடக் கலையின் தனித்துவமிக்கவையாக களரியும் தோரணமும் விளங்குகின்றன. சமுதாயப் பங்குபற்றுதலின் அடையாளமாகவும் சமுதாயப் பங்கெடுப்பின் அடையாளமாகவும் சமுதாயப் படைப்பாக்க அடையாளமாகவும் விளங்கும் களரியும் தோரணமும் சமூகப் பண்பாட்டுப் பொருளாதார வளத்தின் அடையாளமாகவும் விளங்குகின்றன.

கிழக்குப்பல்கலைக்கழக நுண்கலைத்துறையின் புத்தாக்கமாய் நகரும் நடமாடும் களரியும் தோரணமும் தேசத்திற்கு மகுடம் கண்காட்சியில் பங்குகொண்ட பலரினையும் கவர்ந்திருந்தன. அலங்காரப் பந்தலாகவும் ஆற்றுகைவெளியாகவும் தொழிற்பட்ட வட்டக்களரி கண்காட்சியில் பங்கெடுத்தோர் களைப்பு போக்கி உற்சாகம்பெறும் ஓய்வு கூடமாகவும் அவ்வப்போது செயற்பட்டிருந்தது.

களரியை அண்மித்த முன்னரங்கவெளி வேடர் சமூகத்தினரின் சடங்கு நிகழ்த்துகை வெளியாக செயற்பட்டது. இது மிகப்பொருத்தமுடையதாகவும்



# ஜெயகாந்தன் கேள்வி பதில்



**தமிழில் முதன் முதல் வெளிவந்த Novel of ideas என்று சொல் லத்தக்கது 'பாரிசுக்குப் போ' முதன் முதலில் Novelist of ideas ஆக வந்தவர் நீங்கள் தான். இதன் சாரங்கனுக்கு, நீங்கள் பார்த்தும் பழகின சினிமாத்துறையில் பார்த்தவர்கள் காரணமா? 'பாரிசுக்குப் போ' பாதிப்பு ஏற்பட்டு தான் இளைய. ராஜா போன்றவர்கள் வித்தியாசமாய் சினிமா இசையில் முயன்றார்கள் என்று எமக்கு ஒரு எண்ணம்.**

**ஜெயகாந்தன் :** எம்.பி.சீனிவாசன் என்று ஒருவர் இருந்தார். நான் சந்திக்கும் போது டெல்லியிலிருந்து வந்திருந்தார். அவருடைய மனைவி ஒரு பஞ்சாபி முஸ்லிம். இருவரும் இசையில் மிக ஈடுபாடு கொண்டவர்கள். இன்னும் சொல்லப் போனால் எம்.பி.சீனிவாசனால் தான் எனக்கு மேற்கத்திய இசையில் ஈடுபாடு வந்தது. அவருக்கு எவ்வளவு மேற்கத்திய இசையில் ஈடுபாடு இருந்ததோ அதே அளவுக்குக் கர்னாடக சங்கீதத்திலும் ஈடுபாடு உண்டு. அவரிடம் பேசிக் கொண்டிருக்கும் போது, சங்கீதத்தைப் பற்றியும், அதில் செய்ய வேண்டிய புதுமைகள் பற்றியும் பேசும்போது, சினிமா இந்தப் புதுமைகள் செய்ய நல்ல களன் என்றும் பல விஷயங்கள் பேசுவோம். எம்.பி.சீனிவாசன் அல்ல சாரங்கன் என்ற பாத்திரம். அவருடைய கருத்துகளினால் உருவான பாத்திரம். பலருடைய குணங்களையும் என் குணங்களையும் சேர்த்து உருவான பாத்திரம் தான் சாரங்கன்.. எனக்கு முதலிலே மேற்கத்திய இசையில் தான் ரொம்ப ஈடுபாடு இருந்தது. பல விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருப்போம். அதன் பிறகு அதன் வழியாகத் தான் கர்நாடக சங்கீதத்தில் ஈடுபாடு. நான் சொல்வதுண்டு - கர்நாடக இசை தக்களியில் நூல் நூற்பதைப் போன்றது. மேற்கத்திய இசை ஊடும் பாவுமாக தறி போட்டு துணி நெய்வதைப் போன்றது. ஸிம்..பனி என்கிற வார்த்தையைத் தமிழில் முதலில் எழுதியவன் நான் தான் என்று நினைக்கிறேன். நிச்சயமாய் அது பல upcoming musicians இற்குக் கிளர்ச்சியையும். தாக்கத்தையும் ஏற்படுத்தியிருக்கும். நான் கூட நினைப்பதுண்டு-- சாரங்கன் அமைக்க விரும்பிய இசை, சீனிவாசனும், இளையராஜாவும் என இன்றுள்ள ரகுமான் வரையில் வந்துள்ளது என்று. சமூகம் சார்ந்த கருத்து, சமூகத்தைப் பாதிக்கிற போது அது பிற கலைகளையும் பாதிக்கும். பாதிக்க வேண்டும். இதற்கு "பாரிசுக்குப் போ" உதாரணம்.

**'பாரிசுக்குப் போ'வில் சாரங்கன்- லலிதா- மகாலிங்கம் உறவு டால்ஸ்டாயின் அன்னா கரீனினா-வை நினைவு படுத்துகிறது.**

**ஜெயகாந்தன் :** ஆமாம். அதிலேயே அது வரும்..

**ஆமாம், வரும். உங்கள் பாத்திரங்கள் எல்லாமே இது மாதிரி விஷயங்களில், விளிம்பு வரை சென்று திரும்பிவிடுகிறார்கள். அதற்கு மேல் அந்த விளிம்பைத் தாண்டவிடாமல் அவர்களைத் தடுப்பது, அவர்களுக்குள் இருக்கும் தடுப்புணர்ச்சியா, அல்லது ஜாக்கிரதை உணர்ச்சியா, அல்லது உங்களுக்குள் இருக்கும் இந்திய மரபின் தாக்கமா?**

**ஜெயகாந்தன் :** அது தான் என்று நினைக்கிறேன். இந்திய மரபு மேற்கத்தியப் பண்புகளை தன் வசம் சுவீகரித்துக்கொண்டாலும், அது இந்திய மரபாய்த் தான் பரிணமிக்கும். அல்லது, பரிணமிக்க வேண்டும் என்று நான் நினைப்பதாகவும் இருக்கலாம்.


**நீங்கள் இந்திய மரபு என்று சொன்னால் கூட உங்கள் fiction எல்லாமே ரஷ்ய, ஐரோப்பிய மரபின் தொடர்ச்சி, வெளிப்பாடு தான் இல்லையா? Realism போன்றவை.**

**ஜெயகாந்தன் :** Unconscious ஆக இருக்கலாம். இன்னும் சொல்லப் போனால், இந்திய மரபின் விளைவு-தான் அன்னா கரீனினா தற்கொலை செய்து கொள்வது. அவள் ஓடியிருந்தால் கதையே இல்லை. அவள் மன உறுத்தலும். தன்னையே அவள் மன்னித்துக் கொள்ள முடியாமல் இருப்பதும் தான் தற்கொலைக்குக் காரணம். அவள் ஓடிப் போய் விட்டால் கதையே இல்லை. கார்க்கி டால்ஸ்டாயை ரொம்பக் கண்டிக்கிறார். நீ தான் கொன்று விட்டாய் என்று டால்ஸ்டாயிடம் சொல்கிறார்.

**நாங்களும் கூட உங்களை....**

**ஜெயகாந்தன் :** ஆமாம். நான் தான் பிரித்து விட்டேன். அப்ப தான் அது மேன்மையாய் இருக்கிறது. சாரங்கனுடன் லலிதா ஓடியிருந்தால் அந்தக் கதையை எழுதவே வேண்டியதில்லை. யாரும் தெரிந்து கொள்ள வேண்டாத செய்தி இது. ராமன் காட்டுக்குப் போனதினால் தான் ராமன். இல்லையென்றால் மற்ற ராஜாக்களைப் போலத் தான். sacrifice என்பது எல்லா மரபிலும் இருக்கிறது. டால்ஸ்டாய், டால்ஸ்டாய் ஆனதிற்குக் காரணம் இந்தியத் தாக்கம். அவர் இந்தியராய் வாழ்ந்த ஐரோப்பியர். நாம் ஐரோப்பியர்களாய் வாழ்கிற இந்தியர்கள்.

# கண்களைப் பாதுகாக்க...



❙ கண் அழகைப் பெற, இரு கைகளையும் கண்களின்மீது மூடி சிறிதுகூட வெளிச்சம் தெரியாமல் இருட்டாக இருக்கும்படி செய்து, அந்த இருட்டிலேயே கண்களை மட்டும் மேலும் கீழும், பக்கவாட்டிலும் பயிற்சியளிப்பதன் மூலம் கண்களின் சோர்வு நீங்குவதோடு அழகும் பெறும்.

❙ கண்கள் பிரகாசமாக இருக்க, நந்தியாவட்டை பூவைப் பறித்து வந்து, வெள்ளைத் துணியில் சுற்றி கண்களில் மேல் வைத்துக் கட்டி வந்தால் போதும். மேலும், பூவை தண்ணீரில் நன்கு கழுவி, கண்களின் மேல் ஒற்றியெடுக்க கண்கள் குளிர்ச்சி பெறுவதோடு அழகும் கூடும்.

❙ படபடப்பாக இருந்தால், கண்கள் பொலிவிழந்து போகும். அப்படி படபடப்பாக உணரும்போது, வசதியாக அமர்ந்து இரு கண்களையும் மூடிக்கொண்டு, இடக்கண் இமைமீது இடக்கை விரலையும், வலக்கண் இமைமீது வலக்கை விரலையும் வைத்து: மென்மையாக நீவி விடுங்கள். ஓரிரு நிமிடங்கள் நீவிய பிறகு, கண்ணாடியில் உங்கள் முகத்தைப் பாருங்கள். உடனடியாக மாற்றம் தெரியும்.

❙ கண்கள் அழகாகவும் குளிர்ச்சியாகவும் இருக்க வேண்டுமானால், பண்ணைக் கீரை, சிறுகீரையை மதிய உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

❙ பொன்னாங்கண்ணிக் கீரையை பளி சேர்க்காமல் சமைத்தும் சாப்பிடலாம். முழு நில[illegible]வு நில-[illegible] பார்ப்பது நல்லது.

❙ வாய் நிறையத் தண்ணீர் ஊற்றிக்கொண்டு, கண்களை நன்கு திறந்து சுத்தமான தண்ணீரை கண்களில் தெளித்துக் கொண்டாலும், கண்கள் அழகாகும்.

❙ தினமும் படுக்கும் முன்பாக திரிபலா சூரணம் 5 கிராம் அளவில் எடுத்து ஒன்றரை கரண்டி த்ரைபல கிருதம் என்னும் நெய்யை லேசாக உருக்கி அதனுடன் குழைத்து, பிறகு அரை கரண்டி தேன்விட்டுக் குழைத்து நக்கிச் சாப்பிடக் கண் குளிர்ச்சியாகும். கண் நோய் எதுவும் வராமல் பாதுகாக்கலாம்.

❙ உருளைக்கிழங்கு ஒன்றை சரி பாதியாக வெட்டி, வெட்டப்பட்ட பகுதியை கண்களைச் சுற்றியும், கைகள், கழுத்து ஆகிய பகுதிகளிலும் மெதுவாகத் தேயுங்கள். கண்கள் மீதும், உள்ளங்கால்களின் மீதும்கூட அதைத் தேய்க்கலாம். இப்படிச் செய்தால், கண் கருவளையங்களும், தோலின் மீதுள்ள மருக்களும் மறையும்.

❙ கரு வளையமும், கண் சோர்வும் அகல சந்தனக் கல்லில் ஜாதிக்காயை அரைத்து, இரவில் படுக்கும் முன் கண்களைச் சுற்றித் தடவிக்கொண்டு படுங்கள். காலையில் குளிர்ந்த நீரில் கழுவுங்கள். இவ்வாறு பத்து நாட்கள் செய்து வந்தாலே போதும்.

அமைந்திருந்தது. சடங்கு ஆற்றுகையில் களரிக்கும் தோரணத்திற்குமுள்ள நெருக்கம் ஒருபுறம் இருக்க, கண்காட்சியினை பார்வையிடவந்தோர் களரியிலும் களரியை அண்மித்த திறந்தவெளியிலும் தரித்துநின்று சடங்கு நிகழ்த்துகையை கண்டுகளிக்க ஏதுவாகவும் அமைந்திருந்தது.

பூர்வீகக் குடிகளான வேடர் சமூகத்தினரின் சடங்கு வழக்காறுகளை ஏனைய சமூகத்தினரும் கண்டுகொள்ள வாய்ப்பைக் கொடுத்த இந்நிகழ்வுவெளி பறை, மத்தளம், சவணிக்கை போன்றவற்றின் இசைகளோடு கண்காட்சியில் கலந்துகொண்ட மக்களின் ஒலிகளாலும் நிரம்பி இனிமை தந்தது.

பாரம்பரிய வாத்தியங்களை இசைத்து பார்வையாளர்களது வேண்டுதலுக்கேற்ப விளக்கங்களையும் கொடுத்த நுண்கலைத்துறை மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்களது பிற சமூகத்தினருடனான ஊடாட்டங்கள் அவர்களுக்கு மிகுந்த படிப்பினையைக் கொடுத்ததாகவும் பார்வையிட்டோரை திருப்திப்பட வைத்ததாகவும் கூறினர்.

சூழலின் வளங்களில் கைகளில் விளையும் அழகிய படைப்பாக்கங்களாய் மிளிர்ந்த மாணவர்களது படைப்புக்கள் சூழலில் அருகி வருகின்ற உள்ளூர் மூலிகைகள் சிலவற்றின் பாதுகாப்பையும் பயன்பாட்டையும் வலியுறுத்தியிருந்தமையும் முக்கிய அம்சமாகும்.

உள்ளூர் மூல வளங்களைப் பயன்படுத்தி சூழலுக்கு நட்பானதும் ஆரோக்கியமானதும் படைப்பாக்கங்களுக்கு களம் அமைத்துக் கொடுப்பதுமாக அமைந்திருந்த மாணவர்களது கைவினைப்பொருட்கள் ஆக்கபூர்வமான ஆக்கத் திறன்களுக்கும் சுயதொழில் வாய்ப்புகளுக்கும் ஏற்றதாய் அமைந்திருந்ததை இவ்விற்பனைக் கூடத்தின் வெளிப்பாடுகள் பறைசாற்றின.

மண்டபம் முழுவதையும் அலங்கரிப்பதாகவும் மக்களது பன்மைப்பண்பாட்டினை பிரதிபலிப்பதாகவும் ஒட்டப்பட்டும் தொங்கவிடப்பட்டுமிருந்த வண்ணமய ஓவியங்கள், ஒளிப்படங்கள் ஒட்டுமொத்த காட்சிக்கூடத்திற்கும் உயிரூட்டியதெனலாம்.

இத்தகைய பங்கெடுப்பிற்கான ஒழுங்குகளை மேற்கொண்ட கிழக்குப் பல்கலைக்கழக துணைவேந்தர் கலாநிதி கிட்ணன் கோவிந்தராஜா, நிகழ்விற்கு ஒருங்கிணைப்பு வழங்கிய நுண் கலைத் துறைத் தலைவர் கலாநிதி சி. ஜெயசங்கர், கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறை, சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவக விரிவுரையாளர்கள் மாணவர்கள், பாரம்பரியக் கலைஞர்கள், கிழக்குப்பல்கலைக்கழக நிர்வாக ஊழியர்கள் அனைவரும் மிகுந்த பாராட்டுதலுக்குரியவர்களாகின்றனர்.

**தா**ய்லாந்தில் வசிக்கும் டுவாங்ஜே சமக்சமம் என்ற, 59 வயது பெண்மணியின் கைகள் தான், உலகிலேயே மிகப் பெரிய கைகள். உ[illegible] நல-குறைபாட்டால் இவரது கைகள் நாளுக்கு நாள் வீங்குகிறது. [illegible]னால்; கைகளில் ஏற்படும் அதிக எடையால், வலியால் துடித்துக் கொண்டிருக்கிறார். நோய் தாக்கியது முதல், 20 ஆண்டுகள் வெளியே வராமல் மறைந்தே வாழ்ந்தவர், தற்போது, வயிற்றுப் பிழைப்புக்காக சிறிய [illegible] வைத்து, தன் பெற்றோரை காப்பாற்றி வருகிறார்.

# உலகின் பெரிய கைகள்!



# இலங்கை கல்வி நிர்வாகசேவை அதிகாரிகள் பதவிகளை வகிக்க ஏற்பாடு செய்யவேண்டும்

## முஹம்மட் முக்தார் பிரதமரிடம் கோரிக்கை

சேவை பிரமாணக் குறிப்புக் களை மையமாக வைத்தே பதவிகள் உருவாக்கப்படுகின்றன. அந்த அடிப்படையில் இலங்கை கல்வி நிர்வாக் சேவை பிரமாணக் குறிப்பு திருத்தப்பட்டு மாகாணக் கல்வியமைச்சுக்களின் செயலாளர்களாகவும் மேலதிக செயலாளர்களாகவும் இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரிகள் பதவிகளை வகிக்க ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பான கோரிக்கையை இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரிகளின் கிழக்கு மாகாண பொதுச் செயலாளர் ஏ.எல்.முஹம்மட் முக்தார் விடுத்துள்ளார். இக்கோரிக்கையை அவர் கல்வியமைச்சர் அகில விராஜ் காரியவசமிடமும் விடுத்துள்ளார்.

இலங்கை கல்வி நிர்வாக சேவையை கல்வி வெள்ளையறிக்கை அமுலாக்கப்பட்ட காலத்தில் 1985 ஆம் ஆண்டு தற்போதைய பிரதமர் கல்வியமைச்சராக இருந்த காலத்தில் ஏனைய சேவைகளுக்கு சமாந்தர சேவையாக மாற்றியமைத்தார். இதன் மூலம் ஐந்து வகுப்புக்களாக இருந்த இலங்கை கல்விச் சேவை மூன்று வகுப்புக்கள் கொண்ட இலங்கை கல்வி நிர்வாக சேவையாக மாற்றியமைக்கப்பட்டது.

இலங்கை கல்வி நிர்வாக சேவையின் பிரமாணக் குறிப்பை வடிவமைத்த அதிகாரிகள் அச்சேவைக்கான உயர்ந்த பதவியாக கல்விப் பணிப்பாளர், பரீட்சைகள் ஆணையாளர், கல்வி வெளியீட்டு ஆணையாளர் போன்ற பதவிகளையே உருவாக்கினர். கல்வி அமைச்சில் மேலதிக செயலாளர், உதவிச் செயலாளர், சிரேஷ்ட உதவிச் செயலாளர் போன்ற பதவிகளை உருவாக்கவில்லை. இது இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரிகளுக்கு திட்டமிட்டு இழைக்கப்பட்ட அநீதியும் இலங்கை நிர்வாக சேவையின் மேலாதிக்கமுமே இதற்கான பிரதான காரணமாகும்.

இதன் பின்னர் மாகாண சபைகள் 1987ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட போதும் மாகாண சபைகளிலுள்ள கல்வி அமைச்சுக்களில் செயலாளர் தரத்தில் இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரிகள் எவரும் இருக்கத் தக்கதாக மாற்றங்கள் ஏற்படுத்தப்படவில்லை.

இறுதியாக 2002ஆம் ஆண்டு இலங்கை கல்வி நிர்வாக சேவை பிரமாணக் குறிப்பு திருத்தியமைக்கப்பட்ட போதும் இவ்விடயம் உள்வாங்கப்படாமல் அச்சேவைக்கான உயர்ந்த பதவியாக மாகாணக் கல்விப் பணிப்பாளர் என்ற பதவி ஏற்படுத்தப்பட்டது.

கல்வி நிர்வாகம் என்பது பொது நிர்வாகம் என்பதில் இருந்து முற்றிலும் வேறுபட்டது. தாபன விதிக்கோவையில் கூட தனியான அத்தியாயம் ஆசிரியர்களுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதிபர், ஆசிரியர்களது பிரச்சினைகள் வித்தியாசமானவை. கல்வியின் இலக்கு வேறு. இந் நிலையில் மாகாண கல்வி அமைச்சுக்களுக்கு செயலாளர்களாக இலங்கை கல்வி நிர்வாக சேவை சிரேஷ்ட அதிகாரிகள் நியமிக்கப்படுவது கல்வி அபிவிருத்திக்கும் ஆசிரியர்களது பிரச்சினைகளை இனம் காண்பதற்கும் மிகவும் பயனுள்ளது என மேலும் தெரிவிக்கப்படுள்ளது.

அகில இலங்கை சமாந்தர சேவைகளான ஒன்பது சேவைகளுக்குள் உள்ள கருத்து வேறுபாடுகளும் தப்பபிப்பிராயங்களும இதன் மூலம் நீக்கப்படும் இல்லையேல் இலங்கை கல்வி நிர்வாக சேவை சமாந்தர சேவைகளிலிருந்து நீக்கப்பட்டு வரையறுக்கப்பட்ட சேவையாக மாற்றப்பட வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# உழவன் மாத இதழ் வெளியீட்டு விழா



(யாழ்ப்பாணம்)

எஸ்.பி.லெம்பட்ட் தலைமை ஆசிரியராகக் கொண்ட உழவன் மாத இதழ் யாழ்.இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் கடந்த முதலாம் திகதி பி.ப 3.30 மணிக்கு வெளியீட்டு விழா மிக சிறப்பாக நடைபெற்றது.

**SOLID** நிறுவனத்தின் இயக்குநர் டாக்டர் சிவயோகநாதன் தலைமையில் நடைபெற்ற மேற்படி வெளியீட்டு விழாவில் கணேசலிங்கம் (முன்னாள் பண்ணை முகாமையாளர் - பயிற்சி) மற்றும் யாழ்.மாவட்ட விதை உற்பத்தியாளர் சங்க (SEEDCO) பொதுமுகாமையாளர் ரவிமயூரன், சாவகச்சேரி பொது மருத்துவமனை டாக்டர். அல்பேட்குரூஸ் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

மேலும், விவசாய போதனாசிரியர்கள், விவசாய அமைப்பு பிரதிநிதிகள், விவசாய உள்ளீடுகள் வழங்கும் தனியார் நிறுவன பிரதிநிதிகள், தனியார் பண்ணை முகாமையாளர்கள், விவசாயிகள் மற்றும் ஆர்வலர்கள் ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

தலைமை உரை நிகழ்த்திய டாக்டர் சிவயோகநாதனை தொடர்ந்து சஞ்சிகை அறிமுகம் ரவிமயூரன், மாத இதழுக்கான வாழ்துப்பா கணேசலிங்கம் நன்றி உரை டாக்டர் அல்பேட்ரூஸ் ஆகியோர் நிகழ்த்தினர்.

# சிறுவன் கழுத்தறுத்துக் கொலை வவுனியாவில் சந்தேக நபர் கைது

(வவுனியா)

வவுனியாவில் 10 வயது சிறுவன் கழுத்தறுத்து கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் 18 வயது இளைஞர் ஒருவரை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை கைது செய்தாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, சாம்பல் தோட்டம் பகுதியில் கடந்த 9 ஆம் திகதி சந்திரசேகரன் சஞ்சய் என்ற 10 வயது சிறுவன் பகல் வேளையில் கழுத்து அறுக்கப்பட்ட நிலையில் வீட்டின் பின்புறமாகவிருந்து சடலமாக மீட்கப்பட்டான்.


இது தொடர்பாக வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சண் அபேயவர்த்தன தலைமையிலான 5 பேர் கொண்ட பொலிஸ் அணி பல்வேறு கோணங்களில் பலரிடமும் வாக்கு மூலங்களைப் பெற்று விசாரணைகளை நடாத்தி வந்தது.

இந் நிலையில் இக் கொலையுடன் தொடர்புடையவர் என கொல்லப்பட்ட சிறுவனின் உறவினரான 18 வயது இளைஞர் ஒருவரை பொலிஸார் கைது செய்தனர். குறித்த இளைஞர் சிறுவனின் வீட்டின் அருகிலேயே வசிக்கிறார்.

சிறுவனின் வீட்டில் இருந்த உண்டியலில் பணத்தை திருடச் சென்ற சமயம் அதனைக் கண்ட சிறுவன் வீட்டாரிடம் சொல்லப் போவதாக கூறியதையடுத்து அருகில் இருந்த கத்தியை எடுத்து சிறுவனின் கழுத்தை அறுத்துக் கொலை செய்ததாக இளைஞன் வாக்குமூலம் அளித்தார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, மரணமடைந்த சிறுவனின் தாய்க்கும் இக் கொலையுடன் தொடர்பு இருப்பதாக சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டு இருந்தன. ஆனால் இக் கொலைக்கும் அச் சிறுவனின் தாய்க்கும் எந்தத் தொடர்பும் இல்லை எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# சிறப்புற நிறைவுபெற்ற துணுக்காய் கலாசார விழா



(துணுக்காய்)

துணுக்காய் பிரதேச செயலக கலாசார விழா கடந்த 30 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 09.00 மணியளவில் பிரதேச செயலக் மாநாட்டு மண்டபத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

மேற்படி நிகழ்வானது துணுக்காய் பிரதேச செயலர் சி.குணபாலன் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட செயலர் கே.றூபவதி கௌரவ விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் வைத்திய கலாநிதி சி.சிவமோகன் மற்றும் பலர் கலந்து கொண்டு இந் நிகழ்வினை சிறப்பித்தனர்.

இந் நிகழ்வானது பாரம்பரிய கலாசாரத்தை வெளிப்படுத்தும் கும்மி, கோலாட்டம், காவடி, மேள வாத்தியம், குதிரையாட்டம், மற்றும் கலாசாரத்தை வெளிப்படுத்தும் பல வகை ஊர்திகள் என்பனவற்றை உள்ளடக்கிய பேரணியாக ஆரம்பித்து துணுக்காய் பிரதேச செயலக மண்டபத்தில் முடிவடைந்தது.

தொடர்ந்து "மருதோவியம் [illegible] ஆரம்பித்து மேடை நிகழ்வில் முதலாவது மலரை முல்லைத்தீவு மாவட்ட செயலர் கே.றூபவதி வெளியிட்டு வைக்க வைத்திய கலாநிதி சி.சிவமோகன் (வடமாகாண சபை உறுப்பினர்) பெற்றுக்கொண்டார். தொடர்ந்து கலாசார நிகழ்வுகள் நடைபெற்றன.

## முரசின் இன்றைய பலன்

(06.05.2015 புதன்கிழமை)

மன்மத வருஷம் சித்திரை மாதம் 23 ஆம் திகதி.
நுமியை - திதி. அமிர்த சித்த யோகம்.
அனுச நட்சத்திரம் பி.ப. 12.34வரை. பின் கேட்டை.
இராகு காலம் 11.56 - 01.26 வரை. சுபநேரம் 04.26 - 05.56 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**
ஈகோவை விட்டெறிவதனால் குடும்பத்தில் கவின் நிலை உருவாகும்.

**ரிஷபம்**
மாணவர் விசா கிட்டி வெளிநாட்டில் பயிலச் செய்ய ஆயத்தமாதல்.

**மிதுனம்**
கொடுத்த கடனை மீளப் பெற முடியாத நிலையில் முறையீடு செய்தல்.

**கடகம்**
டெங்கு உற்பத்தியாகாது தடுக்க சுற்றாடல் சுத்தத்தில் ஈடுபடல்.

**சிம்மம்**
நிலுவைகள்பெறுவதற்கு தொலைபேசி மூலம் தொடர்பினை ஏற்படுத்தல்.

**மீனம்**
உங்களின் தனித்தன்மையை வெளிப்படுத்திச் செயலாற்ற முனையுங்கள்.

**கன்னி**
பரீட்சைச் சித்தியினால் அரசுத் தொழில் கிடைக்கும் செய்தி கிட்டுதல்.

**கும்பம்**
நோயினின்றும் விடுபட நடைப் பயிற்சியில் ஈடுபட முஸ்தீபு.


**மகரம்**
புதியமனை அமைய சகோதர் வழியில் உதவி கிட்டுதல்.

**தனுசு**
முகப் பார்த்துக்கதைப்பதனால் மனத்துயர் அற்றுப்போதல்.

**விருச்சிகம்**
சக ஊழியர்களை அரவணைத்து பணியின் தேக்க நிலை அற்றுப்போகச் செய்தல்.

**துலாம்**
விளையாட்டுத்துறையில் பணமும் பரிசிலும் கௌரவமும் ஏற்படல்.

# மின்சாரம் வழங்கப்படாத இடங்களுக்கு துரிதகதியில் மின்சாரம் வழங்குமாறு பணிப்பு



கிளிநொச்சிமாவட்டத்தில் இதுவரை மின்சாரம் வழங்கப்பட்டாத பகுதிகளுக்கும் பாவனை இணைப புக்கள் பொருத்தப்படாத வீடுகளுக்கும் துரிதகதியில் இணைப்புக்களை வழங்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் துறைசார்ந்த அதிகாரிகளுக்கு பணிப்பு விடுத்துள்ளார். நேற்று முன் தினம் கிளிநொச்சி மின்சாரசபையின் அலுவலகத்தில் வடக்கின் வசந்தம் மின் விநியோகத்திட்ட பொறியிய லாளர்களையும் மற்றும் கிளிநொச்சி மாவட்ட மின் அத்தியட்சகர் மற்றும் பொறியியலாளர்களையும் சந்தித்து கலந்துரையாடும்போதே அவர் இப்பணிப் புரையை விடுத்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் அனைத்து பகுதிகளுக்கும் மின்விநியோகத்திற்கான கட்டமைப்பு உருவாக்கப்பட்டு மின் இணைப்புக்களும் வழங்கப் பட்டபோதும் வேலைத்திட்டங்களை முன்னெடுக்கும் போது நடைமுறைப்பிரச்சினைகளை எதிர் கொண்ட சில பகுதிகளுக்கும் மற்றும் உபகரணங்கள் பற்றாக்குறையினால் வேலைகள் மேற்கொள்ளப்படாத பகுதிகளுக்கும் இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை அதனடிப்படையில் புதிதாக மின்மாற்றிகளை பொருத்தவேண்டிய பகுதிகளான வன்னேரிக்குளத்தின் சோலை இராம நாதபுரத்தின் அழகாபுரி மற்றும் புதுக்காடு பிரமந்தனாறு கல்லாறு இவற்றோடு முரசுமோட்டை ஊரியான், புன்னைநீராவியின் கண்ணகிநகர் கோரக் கன்கட்டின் வை.எம்.சி.ஏ சந்தி பல்லவராயன் கட்டு சோழநிலா கிராமம் ஆகிய பகுதிகளுக்கு துரிதமாக மின்மாற்றிகளை பொருத்தி மின்சாரத்தினை வழங்குவற்கு நடவடிக்கை எடுக்குமாறு பணித்த நாடாளுமன்ற உறுப்பினர். மின்சாரம் வழங்கப்பட்ட கிராமங்களில் சில வீடுகளுக்கு இணைப்புக்கள் வழங்கப்படாதுள்ளதாகவும் மாவட்டத்தின் பல கிராமங்களில் இவ்வாறு மின்சாரத்தினை பெறாத வீடுகள் காணப்படுவதாகவும் அவ்வீடுகளுக்கும் உடனடியான மின்சாரத்தினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் பணித்தார்.

நேற்று செவ்வாய்க்கிழமை மு.ப. 10.30 மணிக நண்டபெற்ற இக்கலந்துரையாடலில் வடக்கின் வசந்த மின் பொறியியலாளர் கோசல வடக்கின் வசந்த மின் அத்தியட்சகர் சமிந்த மற்றும் தனுக இவர்களுடன் கிளிநொச்சி மாவட்ட மின் பொறியியலாளர் நிரோசன் மற்றும் மின் அத்தியட்சகர் சுகராஜ் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## மினிசூறாவளியில் 3 வீடுகள் சேதம் புன்னாலைக்கட்டுவனில் சம்பவம்

யாழ்ப்பாணம் - புன்னாலைக்கட்டுவன் தெற்கு ஈவினைப் பகுதியில் வீசிய மினிசூறாவளி காரணமாக மூன்று வீடுகள் சேதமடைந்துள்ளன.

குறித்த பகுதியில் நேற்று முன்தினம் மாலை மினிசூறாவ்ளி வீசியுள்ளதுடன் சுன்னாகம், மல்லாகம், புன்னாலைக்கட்டுவன் பகுதிகளில் கடும் காற்றுடன் கூடிய மழை பெய்துள்ளது.

மேலும் குறித்த பகுதியில் வீடொன்றின் மீது மரம் முறிந்து விழுந்துள்ள போதிலும் எவருக்கும் காயம் ஏற்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

# இளங்கோ அடிகள் நினைவு தினம் வவுனியாவில் அனுஷ்டிப்பு



வவுனியா நகர வரியிறுப்பாளர் சங்கமும் கலை இலக்கிய நண்பர்கள் வட்டமும் இணைந்து ஏற்பாடு செய்த இளங்கோ அடிகள் நினைவு தினம் கடந்த ஞாயிற்றுக்கிழமை சித்திராபௌணமியன்று காலை 8.30 மணிக்கு கோவில்குளம் சிவன் கோவில் முன்பாக அமைந்துள்ள இளங்கோ அடிகள் சிலை பராமரிக்கும் சிவன் கோவில் அனுசரணையில் தமிழ மணி அகளங்கன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் முன்னாள் நகரபிதாவும், வட மாகாண சபையின் உறுப்பினருமான ஜி.ரி. லிங்கநாதன், முன்னாள் உபநகரபிதாவும், கடந்த 29ஆம் திகதி சிலையை திறந்து வைத்தவருமான சந்திரகுலசிங்கம் (மோகன்) முன்னாள் அதிபர்களான வையாபுரிநாதன், சிவஞானம், நகர வரியிறுப பாளர் சங்கத் தலைவர் சந்திரகுமார் (கண்ணன்), உறுப்பினர் மாணிக்கம் ஜெகன், சிவன் கோவில் அறங்காவலர்சபை செயலாளர் நவரத்தினராசா, வவுனியா மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ.நிததியானந்தன், நா.சேனாதிராசா, சமூக ஆர்வலர்கள் விக்னா, சிவம், நிகேதன், கேசவன், சுரேஷ், பபிந்தன், நாகராசா, யோகா உட்பட அருளக மாணவர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொணடனர்.

விருந்தினர்கள், மாணவர்கள் மாலை அணிவித்து வணக்கம் செலுத்திய பின் தமிழ் மணி அகளங்கன் இளங்கோ அடிகள் பற்றியும் அவரின் நூலான சிலப்பதிகாரம் பற்றியும் கண்ணகி அம்மன் வழிபாடு தோன்றியமை பற்றியும் கண்ணகி மதுரையை எரித்தமை எவ்வளவு தூரம் சிலப்பதிகாரத்தில் விளக்கப்பட்டுள்ளது என்பது பற்றியும் நயம்பட உரையாற்றினார்.

பின்னர் சந்திரகுமாரின் (கண்ணன்) நன்றி உரையுடன் நிகழ்வு நிறைவடைந்த பின் கலந்து கொண்ட அனைவருக்கும் சிவன்கோவில் நிர்வாகத்தால் தேநீரும், சிற்றுண்டியும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து 3 வருடங்களாக வவுனியா நகர சபையால் 1997,1998,1999 இல் நிறுவப்பட்ட இந்த தமிழ் பெரியார் சிலைகளின் நினைவு தினங்களை செய்து வரும் வவுனியா நகர வரியிறுப்பாளர் சங்கம் கடந்த 26ஆம் திகதிக்குப் பின் தெரிவு செய்யப்பட்ட புதிய நிர்வாகத்தின் கீழ் செய்யப்பட்ட முதலாவது நிகழ்வு இளங்கோ அடிகளின் நினைவு தினம் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆயுர் வேதம்



## உப்பும் கைகால்களில் வீக்கமும்

உப்பு உடலுக்குத் தேவையான உணவுப்பொருள். உணவு ஜீரணமாகி சத்தாக மாற உதவும் பொருள். தானே சத்தாகி நின்று உடலைத் தாங்கும் தாதுப்பொருள்.

கொலரா முதலிய உடலிலுள்ள நீரின் அம்சம் பெருமளவில் வெளியேற்றப்பட்ட நிலையில் உப்புக் கரைசலே உட்செலுத்தப் பட்டு ஜீவனை நிலைக்க வைக்க உதவுகிறது.

உணவின் மூலப்பொருளான அன்னத்திற்கு ருசியும், மணமும் அளித்து விருப்புடன் ஏற்கச் செய்து ஜீரணிக்க உதவி களைப்பை நீக்குவதும் உப்பே தான்.

மற்ற கடுகு, வெந்தயம் போன்ற தனித்த உருவில் நிற்காமல் உப்பு கரைந்து மறைந்து எங்கும் பரவி நிற்கிறது. இத்தகைய உப்பைத் தான் வைத்தியர்கள், அளவிற்கு மீறினால் அமிர்தமும் விஷமென்பார்கள்.

உப்பு உடலின் நீரின் அம்சத்தை தன்னுடன் சேர்த்துக் கொண்டு பணியாற்றுகிறது. கொலரா முதலிய உடலின் நீர்ப்பகுதி அதிக அளவில் குடலில் சுரந்து வெளியேறுவதைத் தவிர்க்க இரத்தத்தில் உப்பு நீர் சேர்க்கப்பட்டவுடன், குடலில் நீரின் அம்சம் அதிக அளவில் சுரப்பது நின்று பேதியாவது நின்றுவிடுகிறது.

அதனால் கொலராவின்போது உப்புநீரை இரத்தத்தில் ஏற்றுவதையே முதலுதவியாக முக்கியமாகச் செய்கின்றனர்.

உப்பு கரிக்கும் அளவு தண்ணீரில் கரைத்து அதில் சீரகத்தைத் தூளாக்கிச் சேர்த்து 10 -15 நிமிடத்திற்கொரு தடவை ஒவ்வொரு அவுன்ஸாக (30 மி.லீ) சாப்பிட்டு வர கடுமையான பேதியின்போது ஏற்படும் நாவறட்சியும், கால் குடைச்சலும், களைப்பும் நின்றுவிடும். இது கசிவும், கரைப்புமான உப்பின் இயற்கை குணங்கள் உடலுக்கு உதவும் வழி.

இதே கசிவும், கரைப்பும் உடலைக் கெடுப்பதுமுண்டு. தசைகள், வியர்வைக் கோளங்கள் இவற்றில் அதிக அளவு நீர் தேங்கி நிற்கிறது. இந்த நீரம்சம் கட்டுப்பட்டு நிற்பதாலேயே உடல் கட்டுக்குலையாமல் நிற்கிறது.

இந்த திரவாம்சம் அதிக அளவில் பிரிந்து தனித்து ஓரிடத்தில் சேர்வதோ அதிக அளவில் வெளியாவதோ நோய் நிலைக்கு அடையாளம். இரத்தம் முறிந்து நீராகிவிட்டதென்று சில நிலைகளைப் பொதுவாகக் குறிப்பிடுவார்கள். மஹோதரம், உடல்முழுவதும் வீக்கம் முதலியவை இத்தகையவை.

மஹோதரத்தில் வயிற்றிலுள்ள வெளித்தசைகளுக்குள்ளும், குடலைப் போர்த்தி நிற்கும் ஜவ்விற்கும் நடுவே ஜலக்கசிவு மிகுந்து நிற்கிறது. சாதாரண நிலையில் குடலிலிருந்து நீர் உறிஞ்சப்பட்டு இரத்தத்தில் கலந்து சிறுநீரகங்கள் வழியே சிறுநீராகப் பிரிக்கப்பட்டு வெளியேறுகிறது. குடலிலிருந்து உள்ளே உறிஞ்சப்படாத நீர் மலத்துடன் வெளியாகிறது.

மஹோதரத்தில் வயிற்றில் தேங்கிய நீர்ப்பகுதி இவ்விரு வகைகளிலும் வெளியேறுவதில்லை. குடலுக்கு அப்பாற்பட்ட இடத்திலுள்ள நீரைப் பேதியாக்கி வெளிக்கொணர்வதோ, இரத்தத்தில் சேரச் செய்து நீராக்கி வெளிக் கொணர்வதோ மிகப்பெரிய முயற்சியின் மூலமாக செய்ய வேண்டியிருக்கிறது.

ஆகவே முதல் உதவியாக உடலில் நீரின் அம்சத்தை சேர வைக்கக் கூடியதும், கசிவை அதிகமாக்கக் கூடியதுமான உப்பைத் தடைசெய்வது வீக்கத்தை அதிகமாக்காமல் இருக்க உதவுகிறது.

உடலில் சேர்ந்த உப்பு தன் பணி நிறைவேறியதும், உடலை விட்டு சிறுநீர் மற்றும் வியர்வை ஆகிய இருவழிகளில் வெளியேறுகிறது. வீக்கமுள்ள உங்களுடைய உடலில் சிறுநீரை வெளியேற்ற வேண்டிய நிலையிலுள்ள சிறுநீரகங்கள் அழற்சியுறுகின்றன. உப்பு அவ்வழற்சியை அதிகப்படுத்துகின்றது.

அழற்சியுற்ற சிறுநீரகங்கள் வேலை செய்ய முடியாததால் சிறுநீர் வெளியேற்றம் தடைப்பட்டு வீக்கம் அதிகமாகிறது. இந்த விஷச்சக்கர் சூழ்நிலையைத் தகர்க்க உப்பு அறவே நிறுத்தப் பெறுகிறது.

உப்பு குறைந்ததும் உடலின் உட்பகுதியில் ஏற்பட்டுள்ள அழற்சி எப்பகுதியிலிருந்தாலும் குறைகிறது. அழற்சி குறைந்த சிறுநீரகங்கள் சிறுநீரை அதிக அளவில் வெளியேற்ற பலம் பெறுகின்றன.

உப்பு குறைந்ததும் உடலில் நீர்க்கும் தன்மையும் அதனால் ஏற்படும் கசிவும் குறைந்துவிடுகின்றன. உப்பை நிறுத்துவதால் மாத்திரமே வீக்கநோய்களில் பெருமளவில் எதிர்பார்த்ததைவிட விரைவாகவே குணம் காண்கிறது.

இந்துப்பு கசியும் தன்மை இல்லாதது, கசியும் தன்மை குறைந்தது என்பதற்காகவே பத்தியப் பொருளாக உள்ளது. இந்துப்பு ஒரு கனிப்பொருள். கடலுப்பைப்போல் உப்பளங்களில் காய்ச்சி எடுப்பதல்ல. உப்பில்லாமல் இருக்க முடியாத நிலையில் இந்துப்பை மாத்திரம் உபயோகிக்கலாம்.

வாரத்தில் ஓரிரு வேளைகள் மாதத்தில் ஒருநாள் என்ற முறையில் உப்பை அறவே நீக்கும் உணவைக் கொள்வது நல்லது. இப்பழக்கத்தில் உடலில் அதிகளவில் உப்பு சேரும் நிலை தவிர்கக் பெறும். இரத்தக்கொதிப்பு, மனக்குழப்பம், அகாலத்தில் மூப்பு, தோல்நோய்கள் இவற்றை இதனால் தவிர்க்கலாம்.

# தண்டவாளத்தில் வான் செலுத்திய சாரதி கைது

(பேருவளை)

பேருவளை, மாகல்கந்த பிரதேசத்தில் காலி வீதிக்கு சமாந்தரமாக இருக்கின்ற தண்டவாளத்தில் சுமார் 50 மீற்றர் தூரத்துக்கு வானொன்றை செலுத்திய சாரதியை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அளுத்கம தர்கா நகரிலிருந்து வெசாக் பார்ப்பதற்காக வந்தவர்களின் வானே இவ்வாறு தண்டவாளத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு பயணித்துள்ளது.

சாரதி தூங்கியதையடுத்தே வான், தண்டவாளத்தில் பயணித்துள்ளது என்று ஆரம்ப கட்ட விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

அந்த வான், தண்டவாளத்தில் பயணிக்கும் போது அதில், சிறுவர்கள் உட்பட 15 பேர் பயணித்துள்ளதாக தெரியவந்துள்ளது.

அந்த தருணத்தில் ரயில்கள் பயணிக்காமையினால் பாரிய அனர்த்தம் தவிர்க்கப்பட்டது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

வான், தண்டவாளத்தில் பயணித்தமையால் அந்த தண்டவாளத்தின் ஊடான ரயில் சேவைகள் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை சுமார் ஒரு மணிநேரம் தாமதம் ஆனது என்று ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

வானின் சாரதியை கைது செய்துள்ளதாக தெரிவித்த பொலிஸார் அவரிடம் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

# கடல்சார் பாதுகாப்பு உதவிகளை இலங்கைக்கு அளிக்கும் அமெரிக்கா




இலங்கைக்கு கடல்சார் பாதுகாப்பு உதவிகளை வழங்கும் திட்டம், அமெரிக்காவுக்கு உள்ளதாக, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பதில் பிரதிப் பேச்சாளர் ஜெப் ரத்கே தெரிவித்துள்ளார். வொசிங்டனில் நேற்று முன்தினம் நடந்த செய்தியாளர் சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த போதே, அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடந்த செய்தியாளர் சந்திப்பில், அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரி, கடல்சார் பாதுகாப்பு உள்ளிட்ட பிராந்திய விவகாரங்களின் முக்கியத்துவத்தைச் சுட்டிக்காட்டியிருப்பதாகவும், எனவே கடல்சார் பாதுகாப்பில் அமெரிக்காவின் பங்கு என்ன என்றும், இந்த விவகாரத்தில் இலங்கையின் பங்கை அமெரிக்கா இந்தியப் பெருங்கடலிலா அல்லது ஏனைய பிராந்தியங்களிலா எதிர்பார்க்கிறது என்று கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்குப் பதிலளித்த, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பதில் பிரதிப் பேச்சாளர் ஜெப் ரத்கே, இலங்கையின் நடவடிக்கைகள் தொடர்பான மேலதிகமான விபரங்கள் தன்னிடம் இல்லை என்றும், ஆனால், நிச்சயமாக இலங்கையை ஒரு பங்காளராக பார்க்கிறோம், இலங்கையுடனான உறவுகளை நாம் கட்டியெழுப்புகிறோம், ஆனால், ஜோன் கெரியின் கருத்துகள் தொடர்பான மேலதிக விபரங்கள் என்னிடம் இல்லை என்று தெரிவித்தார்.

இதையடுத்து, கடல்சார் பாதுகாப்பு விடயத்தில், இலங்கைக்கு எவ்வாறு உதவி அளிப்பது என்பது தொடர்பான திட்டம் எதையும் அமெரிக்கா கொண்டிருக்கிறதா என்று, எழுப்பப்பட்ட மற்றொரு கேள்விக்குப் பதிலளித்த, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பதில் பிரதிப் பேச்சாளர், ஆமாம் என்று பதிலளித்தார்.

# சிவனொளிபாதமலையை சூழ சுத்திகரிப்புத்திட்டம் விரைவில்



சிவனொளி பாதமலை மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளை சுத்திகரிப்பதற்கான திட்டமொன்றை மத்திய சுற்றாடல் அதிகார சபை முன்னெடுக்கவுள்ளது.

கடந்த வருடம் டிசம்பர் மாதம் ஆரம்பமான சிவனொளி பாத மலைக்கான யாத்திரைப் பருவக் காலம் நேற்றுமுன்தினம் நள்ளிரவுடன் நிறைவுபெற்றது.

வழமைபோன்று இம் முறையும் இலட்சக்கணக்கான யாத்திரிகர்கள் சிவனொளி பாத மலைக்கான யாத்திரையை மேற்கொண்டிருந்தனர்.

யாத்திரிகர்களால் எறியப்பட்ட பிளாஸ்ரிக் போத்தல்கள் உள்ளிட்ட பெருமளவான கழிவுப்பொருட்கள் ஆங்காங்கே குவிந்துக் கிடப்பதாக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைவர் லால் தர்மசிறி கூறியுள்ளார்.

கடந்த மாதம் மேற்கொள்ளப்பட்ட சுத்திகரிப்பு நடவடிக்கையின் போது 850 கிலோகிராம் எடையுடைய பிளாஸ்ரிக் போத்தல்கள் சேகரிக்கப்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

சிவனொளி பாதமலைக்கான யாத்திரை பருவகாலம் நிறைவடைந்துள்ள நிலையில் குப்பை கூழங்களை முற்றாக அகற்றுவதற்கான திட்டத்தை இந்த வாரம் ஆரம்பிக்க மத்திய சுற்றாடல் அதிகார சபை திட்டமிட்டுள்ளது.

அம்பகமுவ பிரதேச சபை மற்றும் மேலும் சில தொண்டர் நிறுவனங்களின் ஒத்துழைப்பும் இதற்காக பெறப்படவுள்ளதென அதிகார சபையின் தலைவர் கூறியுள்ளார்.

# உள்ளூராட்சி சபைகள் எதிர்வரும் 15இல் கலைப்பு



சகல உள்ளூராட்சி சபைகளையும் இம்மாதம் 15 ஆம் திகதி கலைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரும் சுகாதார அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இதன்படி, மாநகரசபை, நகர சபை, பிரதேசசபை என்பன கலைக்கப்படவுள்ளன.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கீழ் நாடு முழுவதும் அதிகமான உள்ளூராட்சி சபைகள காணப்படுவதாகவும் இவற்றின் காலத்தை நீடிக்குமாறு சபைகளின் உறுப்பினர்கள் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளதாகவும் சிங்கள ஊடகமொன்று அறிவித்துள்ளது.

# வெலிக்கடை கொலைகளுக்கு நீதிகோரி பிரதமர் ரணிலிடம் மனு



வெலிக்கடை வன்முறையில் கொலைசெய்யப்பட்ட தமது பிள்ளைகளுக்கு நீதி கோரி, உயிரிழந்த கைதிகளின் பெற்றோரும் உறவினர்களும் பிரதமர் ரணிலிடம் மனுவொன்றை கையளிக்கவுள்ளனர்.

எதிர்வரும் 15ஆம் திகதிக்குப் பின்னர், பிரதமர் ரணிலை சந்தித்து இந்த மனுவை கையளிக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பில் ஏற்கனவே பலமுறை விசாரணை நடாத்தப்பட்ட போதும், எவ்வித நியாயமும் கிடைக்காத நிலையிலேயே பிரதமரை சந்திக்கவுள்ளனர்.

அத்துடன், உயிரிழந்த தமது உறவுகளுக்கு நியாயம் கோரி. பொரளையில் மாபெரும் பேரணியொன்றையும் நடாத்த திட்டமிட்டுள்ளனர்.

கடந்த 2012ஆம் ஆண்டு வெலிக்கடை சிறைச்சாலையில் இடம்பெற்ற வன்முறையில் 27 கைதிகள் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ரயில் விபத்துக்களினால் மாதாந்தம் 12 பேர் உயிரிழப்பு

ரயில் விபத்துக்களினால் 12 பேர் வரை மாதாந்தம் உயிரிழப்பதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது

கவனயீனமே இந்த விபத்துக்களுக்கு முக்கிய காரணம் என திணைக்களத்தின் பொதுமுகாமையாளர் விஜய அமரதுங்க கூறினார்.

ரயில் கடவைகளை கடக்கின்ற சந்தர்ப்பங்களில், சமிக்ஞைகளை பொருட்படுத்தாது பயணிக்கின்றமையினால் அதிக விபத்துக்கள இடம்பெறுவதாக ரயில்வே பொதுமுகாமையாளர் தெரிவித்துள்ளார்.

போக்குவரத்து விதிமுறைகளை மீறும் ரயில் சாரதிகளை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கான திட்டமொன்றை பொலிஸாருடன் இணைந்து தயாரித்து வருவதாக அவர் கூறினார்.

அத்துடன், ரயில் கடவைகள் தொடர்பான போக்குவரத்து விதி முறைகளை பின்பற்றுவது குறித்த தெளிவூட்டல்களையும் வழங்கவுள்ளதாக ரயில்வே திணைக்களம் குறிப்பிட்டது.

# சொந்தக் காணியற்ற மக்களுக்கு காணிகளை வழங்கத்திட்டம்

(கொழும்பு)

சொந்தக் காணியற்ற மக்களுக்கு காணிகளை வழங்குவதற்கான திட்டமொன்றினை காணி அமைச்சு ஆரம்பித்துள்ளது.

மக்களுக்கு வழங்குவதற்கான காணிகள் பிரதேச செயலக மட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளதாக அமைச்சர் எம்.கே.டி.எஸ். குணவர்தன தெரிவித்துள்ளார்.

இந்த திட்டத்தின்கீழ் காணிகளற்ற மக்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளதாக அமைச்சர் கூறியுள்ளார்.

பிரதேச செயலாளர்கள் ஊடாக விண்ணப்பதாரிகளின் தகைமைகள் பரிசீலிக்கப்பட்டு காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நகர மற்றும் கிராமப்புற பகுதிகளிலுள்ள அரச காணிகளை சொந்தக்காணிகள் இல்லாது சிரமத்தை எதிர்நோக்கியுள்ள மக்களுக்கு பகிர்ந்தளிக்கும் நடவடிக்கை படிப்படியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த சிலருக்கு இம்மாத நடுப்பகுதியில் காணி உறுதிப்பத்திரங்களை வழங்கவுள்ளதாக அமைச்சர் எம்.கே.டி.எஸ். குணவர்தன தெரிவித்துள்ளார்.

இதனைத் தவிர விவசாய நடவடிக்கைகளுக்காக காணிகளை வழங்குவது தொடர்பிலும் காணி அமைச்சு ஆலோசித்து வருகின்றது.

# தொலைபேசி மூலம் ஆசனப்பதிவு அறிமுகப்படுத்துகிறது இ.போ.ச

பேருந்துகளுக்கான ஆசன ஒதுக்கீடுகளை தொலைபேசியூடாக முற்பதிவு செய்து கொள்வதற்கான நடைமுறையை அறிமுகப்படுத்தவுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

நீண்டதூர சேவையில் ஈடுபடும் பேருந்துகளில் பயணிப்பதற்கான ஆசனப்பதிவை தொலைபேசியூடாக முன் கூட்டியே மேற்கொள்ளமுடியும் என போக்குவரத்துத் தொடர்பான பிரதிப் பொதுமுகாமையாளர் ராஜா குணதிலக தெரிவித்தார்.

தற்போது கொழும்பு மத்திய பஸ் நிலையத்திற்கு சென்று ஆசனங்களை பதிவு செய்யும் நடவடிக்கை காணப்படுவதாகவும் இதன் காரணமாக பயணிகள் முகங்கொடுக்கும் சிரமங்களை தவிர்ப்பதற்கு ஏற்றவகையில் புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

அதற்கமைய யாழ்ப்பாணம், திருகோணமலை, கல்முனை அம்பாறை போன்ற தூர பகுதிகளிக்கு பயணிப்போர் தொலைபேசியூடாக தமது ஆசனப் பதிவுகளை முன்கூட்டியே செய்து கொள்ள முடியும் எனவும் போக்குவரத்துத் தொடர்பான பிரதிப் பொது முகாமையாளர் ராஜா குணதிலக சுட்டிக்காட்டியுள்ளார்.

61. புடைவை ஒன்றின் ஓரத்தை மடிக்காது தைப்பதற்கு உதவும் தையல் எது?
(1) கம்பளித்தையல்　(2) சோம்தையல்　(3) பெருநூலோடி　(4) சிறுநூலோடி

62. தேசப்படங்களில் நீல நிறம் பயன்படுத்தப்பட்டு காட்டப்படுவது?
(1) மலைத்தொடர்கள்　(2) பெருவீதிகள்　(3) சிறுவீதிகள்　(4) குளங்குட்டைகள்

63. பின்வருவனவற்றுள் வேறுபட்ட இலைவடிவத்தைக் கொண்டது?
(1) வெற்றிலை　(2) மிளகு　(3) வட்டக்கண்ணி　(4) திப்பிலி

64. காசுக்கட்டளைப் படிவம் ஒன்றை பெற்றுக்கொள்ள செல்லவேண்டிய இடம்
(1) வங்கி　(2) நீதிமன்றம்　(3) பொலிஸ் நிலையம்　(4) தபாலகம்

65. 1948ஆம் ஆண்டு இலங்கையானது
(1) ஆங்கிலேயரிடமிருந்து சுதந்திரம் அடைந்த ஆண்டாகும்
(2) போர்த்துக்கலிடமிருந்து சுதந்திரம் அடைந்த ஆண்டாகும்
(3) ஒல்லாந்தரிடமிருந்து சுதந்திரம் அடைந்த ஆண்டாகும்
(4) அரசர்களிடமிருந்து சுதந்திரம் அடைந்த ஆண்டாகும்

66. நெல் தாக்கப்படுவது
(1) வெண்முட்டுப்பூச்சியினால்
(2) வண்டினால்
(3) ஈயினால்
(4) தண்டுகோதிப்புழுவினால்

67. காற்றின் உதவியுடன் பரவும் தாவரம்
(1) புன்னை
(2) துத்திரி
(3) இருவேரி
(4) எருக்கலை

68. இலங்கை அரசாங்க இலட்சினையில் பூரணத்துவத்தைக் காட்டி நிற்பது
(1) நெற்கதிர்
(2) மலரிதழ்
(3) தர்மச்சக்கரம்
(4) புன்கலசம்

### நேற்று பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்

(01). 01. தந்தை　02. மயக்கம்　03. அடியற்றமரம்　04. இராமன்　05. கூறிக்கொண்டனர்
06. சகோதரர்களை　(02). 07. உன்னதமானது　08. பதறி　09. வழி　(03). 10. பிழை
11. பிழை　(04). 12. நான் உள்ளே வரலாமா?　13. நாஜ் நாளை வருவேன்
(05). 14. please clean the blackboard　(06). 15. h　16. b　17. e,e
(07). 18. மகே கம மஹேநுவர　(08). 19. ஆசிரியர் வகுப்புக்கு வந்தாரா?
(09). 20. 18　21. நாட்டார்　(10). 22. கோதண்ட ராமா　23. விகடம் சொல்வாய்
(11). 24. புகையிலை　25. அழுகின்றாய்　26. அவிழ்த்துக்கட்டு　(12). 27. வருகின்றேன்　28. பத்திரிகைகள்
29. ஆண்டுகளாக　(13). 30. அம்புலி　31. கிரிமலை　32. நெசவாளி　(14). 33 - 35 வரை
விரும்பிய வசனம்　(15). 36. 4　37. 4143　2. i. 4000 ii. 40　38. 16, 24, 32, 40, 56, 72
39. 13:00h　40. 175.00　41. 1. கும்பகம்　2. 04　42. 3600.00　43. 20cm²
44. 2　45. ஞாயிற்றுக்கிழமை　46. படத்தை வரைக　47. XI, XIV,
XV, XVI, XIX　48. 108　(16). 49. 1　50. 4　51. 2　52. 3
53. 2　54. 1　55. 1　56. 3　57. 3　58. 2
59. 1　60. 4　61. 4　62. 1　63. 4　64. 1
65. 4　66. 1

**இப் பயிற்சி வினாக்களின் விடைகள் நாளைமறுதினம் வெளியாகும்**



## தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை முன்னோடி - 2015

பகுதி - I
1 மணி 15 நிமிடம்

# கல்வி முரசு



எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க

(01) பின்வரும் பாடலை வாசித்து வினாக்களுக்கு விடை தருக

ஈசன் நாமத்தை - அனுதினம்
　ஏத்திப்புகழ வேண்டும்
தாசதானாய்ப் - பணிந்து
　தருமம் காக்க வேண்டும்
உன்னுயிரைப் போல இந்த
　உலகில் உயிரையெல்லாம்
மன்னும் அன்போடு நீ - என்றும்
　மதித்து வாழ வேண்டும்

01. பாடலில் இடம் பெற்றுள்ள அறம் என்ற சொல்லுக்கான இன்னொரு பொருள்தரும் சொல்லை தருக? ..........

02. பாடலில் இடம்பெற்றுள்ள உவமானத்தை எழுதுக? ..........

03. யாருடைய பெயரை தினமும் புகழ வேண்டும் என்று கவிஞர் கூறுகின்றார்? ..........

04. இகழ் என்ற சொல்லுக்கான எதிர்ச்சொல்லை தருக? ..........

05. இறைவனை போற்றுவதற்காக நாம் எவ்வாறு பணிய வேண்டும்? ..........

06. சுழியும், விசிறியும் பயன்படுத்தப்பட்ட சொல்லொன்றை பாடலிலிருந்து தெரிவு செய்து எழுதுக? ..........

(02) இடைவெளி நிரப்புக

07. கண்டது கற்கப் ..........ஆவான்

08. கேள்விச் ..........ஊரைக் கெடுத்தான்

09. ..........ஒருவனுக்கு சிறந்த செல்வமாகும்

10. இமைக்..........கண்ணுக்குத் தெரியாது

(03) பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (சரி) எனவும் பிழையாயின் (பிழை) எனவும் எழுதுக

11. இணையத்தின் மூலம் பல தகவல்களையும் பெற்றுக் கொள்ளலாம்　(　　)

12. துடைப்பான் கிழிந்து உள்ளே இருந்த துண்டுத்துணி எல்லாம் வெளியேறின　(　　)

13. எல்லே விளையாட்டில் ஐரோப்பிய விளையாட்டுக்களை தழுவிய சில அம்சங்கள் உள்ளது　(　　)

(04) பின்வரும் சொற்களை பயன்படுத்தி இடைவெளியை நிரப்புக
(உயர்திணை, இறந்தகால, நிகழ்கால, ஒருமை, பன்மை, எதிர்கால, அஃறிணை)

14. வருகின்றனர் என்ற சொல்லானது உயர்திணை .......... படர்க்கை .......... வினைச்சொல்லாகும்

15. குடித்தது என்ற சொல்லானது .......... ஒருமை, படர்க்கை இறந்தகால வினைமுற்றாகும்.

16. பெற்றோர் என்ற சொல்லானது .........., .......... பெயர்ச்சொல்லாகும்

(05) பின்வரும் வாக்கியங்களின் கோடிடப்பட்ட சொற்களின் கருத்தை எழுதுக

17. எல்லே விளையாட்டின் வரலாறு பற்றி கூறுவீர்களா? ..........

18. அவன் உயிர் பிழைப்பது அரிது என்று மருத்துவர்கள் கையைவிரித்தனர் ..........

19. என் நண்பர்களுடன் மழலை பேசிய வண்ணம் பறப்பேன் ..........

(06) பொருத்தமான முடிக்கும் சொற்களை தெரிவு செய்க

20. உங்கள் உபசரிப்பில் நாம் இருவரும் பெருமகிழ்ச்சி .......... (அடைகிறேன், அடைகிறோம்)

21. மழைபெய்து பயிர்கள் செழித்து ................................ (வளர்ந்தது, வளர்ந்தன)

22. களியாட்டங்களின் போது நாட்டார் பாடல்கள் பெரும்பாலும் ................ (பாடப்படுகின்றது, பாடப்படுகின்றன)

**(07) பின்வரும் வாக்கியங்களுக்குப் பொருத்தமான நிறுத்தற்குறிகளை இடுக**

23. யாருக்கு என்ன பயன் கிடைக்கப் போகிறது

24. நான் கூறுவது சரிதானே

25. பொருள் விற்க வருவோரும் வாங்க வருவோரும் நன்மை அடைவர் அல்லவா

**(08) கருத்தினை தமிழில் எழுதுக**

26. please be silent ................................

27. Will you sing a song ................................

**(09) கருத்தினை ஆங்கிலத்தில் எழுதுக**

28. நான் பாடசாலை போகின்றேன் ................................

**(10) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் முறையை தமிழில் எழுதுக**

29. இங்கே அமருங்கள் ................................

**(11) வெற்றிடத்தை நிரப்புக**

30. Ho......se 31. eig......t

**(12) பின்வரும் வாக்கியங்களின் கருத்தினை தமிழில் எழுதுக**

32. சுப உபன் தின பெதும் ................................

**(13) பின்வரும் இணைமொழிகளின் ஒரு பொருள் தரும் இணைமொழிகளை தெரிந்து எழுதுக**

உற்றார் உறவினர், மேலும் கீழும், ஆதிஅந்தம், ஏழைஎளியவர், தானதருமம்

33. ................ 34. ................ 35. ................

(14) நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பது முதுமொழி எவ்வளவு செல்வம் இருப்பினும் நோய் இருப்பின் அந்த செல்வத்தில் பயன் ஏதும் இல்லை அந்த அடிப்படையில் நோய்கள் இல்லாமல் வாழ்வதற்காக நாம் மேற்கொள்ளத்தக்க நன்மையான காரியங்கள் என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒரு வாக்கியத்தில் ஐந்து சொற்களுக்கு மேல் இடம்பெற்றிருக்க வேண்டும் எழுவாய், பயனிலை தொடர்பு சரியாக அமைய வேண்டும்

36. ................................

37 ................................

38 ................................

**(15) கணித வினாக்களுக்கு விடை தருக**

39. பத்தாயிரத்து ஒன்று என்பதை இலக்கத்தில் எழுதுக? ................

40. தீர்க்க 1099 + 211 = ................ 41. கழிக்குக 10400 - 319 = ................

42. 1. உருவில் 3 /4 பங்கை நிழற்றுக?



2. நிழற்றாத பகுதி முழு உருவின் பின்னமாக எழுதுக? ................

43. சமபக்கமுடைய முக்கோணியின் சமச்சீர் அச்சுக்களின் எண்ணிக்கை யாது? ................

44. பாத்திரமொன்றில் 3லீற்றர் 500 மில்லிலீற்றர் பால் இருந்தது அதில் 2லீற்றர் 750 மில்லிலீற்றர் தேநீர் ஊற்றுவதற்கு பயன்படுத்தப்பட்ட பின்னர் எஞ்சியுள்ள பாலின் அளவு யாது?

................................



45. 400cm நீளமுள்ள ஓர் அளவை நாடாவின் ஒரு பகுதி சேதமடைந்துள்ளது. அப்பகுதியை அகற்றி மீதி இரு துண்டுகளும் 2cm விதம் ஒன்றின் மீது ஒன்று வைத்து ஒட்டப்பட்டது. பெறப்பட்ட நாடாவின் நீளம் 383cm எனின் சேதமடைந்த நாடாப்பகுதியின் நீளம் யாது?


................................

46. 3kg பருப்பின் விலை ரூபா 360ஆகும் எனின் 1kg 500g பருப்பின் விலை யாது? ................

47. 10L பெற்றோலில் ஒரு வாகனமானது 30கிலோமீற்றர் தூரம் பயணிக்கும் எனின் அவ்வாகனமானது 15km தூரம் பயணிப்பதற்கு தேவையான பெற்றோலின் அளவு யாது?

................................

48. தரப்பட்டுள்ள கடிகார முகத்தில் 4 மணிக்கு 25 நிமிடங்கள் எனும் நேரத்தைக் குறித்துக்காட்டுக?



49. கழிக்குக

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | 4kg | 50g | 2. | 5L | 000ml |
| | 2kg | 150g | | 2L | 750ml |

50. ஒரு பெட்டிக்குள் 9 சவர்க்காரக்கட்டிகளை அடுக்க முடியும் எனின் 927 சவர்க்காரக்கட்டிகளை அடுக்கத் தேவையான பெட்டிகள் எத்தனை?

................................

**(16) மிகச்சரியான விடையின் கீழ் கோடிடுக**

51. தலையை மண்ணினுள் புதைத்து எதிரியிடம் இருந்து தன்னை காத்துக்கொள்ளும் பிராணி
(1) கோழி (2) நெருப்புக்கோழி (3) தீக்கோழி (4) வாத்து

52. விவசாயத்தொழிலில் பயன்படும் உபகரணம் ஒன்று
(1) நுகத்தடி (2) தூக்குகுண்டு (3) கைவாள் (4) முலைமட்டம்

53. விற்றமின்கள் அதிகம் உள்ள உணவுக்கூட்டம்
(1) தக்காளி, மரவள்ளி (2) கரட், போஞ்சி (3) கோதுமை, பலா (4) முட்டை, பால்

54. புரதக்குறைபாட்டு நோய் ஒன்று
(1) மாலைக்கண் (2) யானைக்கால் (3) மரஸ்மஸ் (4) என்புருக்கி

55. மஞ்சட்காமாலை ஏற்படக் காரணம்
(1) அசுத்தமான உணவு (2) அசுத்தமான வளி (3) அசுத்தமான நீர் (4) அசுத்தமான சூழல்

56. தக்காளிப் பூவின் நிறம்
(1) ஊதா (2) மஞ்சள் (3) வெள்ளை (4) சிவப்பு

57. பாதையோரத்தில் காணப்பட்ட பதாகை ஒன்றில் இடது பக்கத்தை பயணிப்பதற்கு பயன்படுத்தவும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது அது யாருக்கான அறிவுறுத்தலாகும்?
(1) பாதசாரிகளுக்கு (2) முதியவர்களுக்கு (3) சிறுவர்களுக்கு (4) சாரதிகளுக்கு

58. உருவில் உள்ள பிராணி



(1) தேனீ (2) குளவி (3) எறும்பு (4) நுளம்பு

59. உருவில் உள்ள தாவரம்



(1) கறிவேப்பிலை
(2) கொன்றை
(3) வேம்பு
(4) செவ்வரத்தை

60. உதைபந்தாட்டத்திற்குரிய பந்து பின்வருவனவற்றுள் எது?



# சினம், குரோதம், வைராக்கியத்தை ஆட்சியாளர் கைவிடவேண்டும்

## முன்னாள் ஜனாதிபதி மகிந்த அறிவுரை



(கொழும்பு)

நாட்டின் நன்மைக்காக ஆட்சியாளர் சினம், குரோதம், வைராக்கியத்துடன் செயற்படக் கூடாது என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பெலியத்த பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்கால சந்ததிக்காக சிறந்த வழிகளை கற்பிக்க வேண்டும்.

பௌர்ணமி தினம் போன்ற விசேட தினங்களிலும் சிறார்கள் அறநெறி பாடசாலைகளுக்கு செல்வதில்லை.

பெரியவர்கள் செயற்படும் முறைகளை அவர்கள் கடைப்பிடிக்கிறார்கள்.

அதேவேளை, தான் பெயருக்காக மாத்திரம் செயற்படவில்லை என முன்னாள் ஜனாதிபதி தெரிவித்தார்.

மகிந்தோதய என்ற பெயர்ப் பலகையை அகற்றிவிட்டால் மாத்திரம் பொதுமக்கள் தம்மை மறந்து விட மாட்டார்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# அலைபேசி கடையில் திருட்டு சந்தேக நபர் கைதானார்

மட்டக்களப்பு மாவட்டம் ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள தன்னாமுனையில் வைத்து அலைபேசி திருட்டுக்கள் தொடர்பில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 20 ஆம் திகதி செங்கலடியிலுள்ள அலைபேசிக் கடையொன்றிலிருந்து 3 இலட்சத்து 9 ஆயிரத்து 850 ரூபாய் பெறுமதியான பல அலைபேசிகள் திருட்டுப் போயிருந்தன.

இது தொடர்பாக தொடர்ந்தும் புலனாய்வு செய்து வந்த பொலிஸார் தன்னாமுனை வாசியான தச்சு வேலை செய்யும் தேவநாயகம் சுதர்ஷன் (வயது 35) என்பவரை நேற்று முன்தினம் மாலை கைது செய்தனர்.

சந்தேக நபரிடமிருந்து ஒரு தொகுதி அலைபேசிகளும் மீட்கப்பட்டதாகத் தெரிவித்த பொலிஸார் தொடர்ந்தும் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகக் கூறினர்.

பொதுமக்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்தே மேற்படி நபரை தாம் கைது செய்ததாக பொலிஸாரால் மேலும் தெரி விக்கப்படுகின்றது.

# அரசியல் மேடைகளில் எப்போது ஏறுவார் மகிந்த

## விளக்கம் தருகிறார் கம்மன்பில



(கொழும்பு)

பொதுத்தேர்தல் தொடர்பான அறிவித்தல்கள் வெளியாகியதன் பின்னரே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசியல் மேடைகளில் பங்கேற்கவுள்ளதாக மேல் மாகாண முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றிற்கு வழங்கியுள்ள செவ்வி ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் அளித்துள்ள செவ்வியில்,

மகிந்த ராஜபக்ஷவை பிரதமர் வேட்பாளராக அறிவிக்க வேண்டுமெனக் கோரி கூட்டங்கள் நடாத்தப்பட்டு வருகின்றன.

இந்தக் கூட்டங்களில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பங்கேற்கவில்லை.

போதியளவு மக்கள் பங்கேற்பதனால் முன்னாள் ஜனாதிபதி பங்கேற்கவில்லை.

தற்போது முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் பாதுகாப்பே முக்கியமானது.

நாடாளுமன்றத் தேர்தல் எப்போது நடைபெறும் என தெரியாமல் மகிந்தவை மேடைகளில் ஏற்றி பேச விட வேண்டிய அவசியமில்லை.

மணமகள் இல்லாத திருமண மேடையில் மணமகனை மட்டும் ஏற்றுவதில் அர்த்தமில்லை.

மிகவும் பொருத்தமான தருணத்தில் மகிந்த ராஜபக்ஷ மேடை ஏறுவார்.

மகிந்த மேடையில் ஏறாவிட்டாலும் தொடர்ச்சியாக மகிந்தவை பிரதமர் வேட்பாளராக நியமிக்குமாறு கோரி போராட்டம் முன்னெடுக்கப்படும் எனவும் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

# 2ஆயிரம் நேபாள மக்களுக்கு இலங்கைப்படையினர் சிகிச்சை



நேபாளத்தில் நிலநடுக்கத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிக்காகச் சென்ற இலங்கை இராணுவத்தினர் சுமார் 2000 பேருக்கு சிகிச்சை அளித்துள்ளதாக பிரதமரின் ஊடகப் பிரிவு அறிவித்துள் ளது.

தற்பொழுது படையினர் மிகவும் கஷ்டப் பிரதேச கிராமங்களை நோக்கி நகர்ந்துகொண்டிருப்பதாக இவ் உதவிப் படைக்குத் தலைமை தாங்கிச் சென்ற தளபதி மேஜர் ஜெனரல் மைத்திரி டயஸ் தெரிவித்துள்ளார்.

இறுதியாக இடம்பெற்ற நிலநடுக்கத்தினால் பாதிக்கப்பட்ட பாதைகளைச் சரிசெய்யும் பணியிலும் படையினர் ஈடுபடுத்தப்பட்டனர். வெசாக் தினமாக நேற்று முன்தினம் இருந்ததனால் விகாரைகளுக்குச் சென்று வணக்க வழிபாடுகளில் படையினர் ஈடுபட்டு வருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# வர்த்தகர்களுக்கு எச்சரிக்கை

உரிய தர நிர்ணயங்களுக்கு உட்படாத சுமார் 85 ஆயிரம் பௌத்த கொடிகளை நுகர்வோர் அதிகார சபையினர் கைப்பற்றியுள்ளனர்.


திரிபுபடுத்தப்பட்ட பௌத்த கொடிகள் நாடளாவிய ரீதியில் விற்பனை செய்யப்பட்டு வந்த நிலையில் நுகர்வோர் அதிகார சபையின் சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது இவை மீட்கப்பட்டுள்ளன.

வெசாக் பண்டிகையை முன்னிட்டு இந்த பௌத்த கொடிகள் விற்பனைக்குத் தயாராக இருந்த நிலையிலேயே இவை கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நீலம், மஞ்சள், சிவப்பு, வெள்ளை மற்றும் செம்மஞ்சள் ஆகிய நிறங்களை உள்ளடக்கிய தரமான பௌத்த கொடிகளுக்குப் பதிலாக வேறு நிறங்களை உள்ளடக்கியும் வாசகங்களை பொறித்தும், தர்மச் சக்கரம் உள்ளிட்ட சின்னங்களைப் பதித்தும் வெவ்வேறான பௌத்த கொடிகள் விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் அதிகார சபை குற்றம் சுமத்தியுள்ளது.

இவ்வாறு திரிபுபட்ட பௌத்த கொடிகளை விற்பனை செய்த நபர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் அதிகார சபை எச்சரித்துள்ளது.

# கண்ணகி கலை இலக்கிய விழா கலந்தாலோசனைக் கூட்டம்





கண்ணகி கலை இலக்கிய விழாவிற்கான கலந்தாலோசனைக் கூட்டம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மட்டக்களப்பு வந்தாறுமூலை விஷ்ணு மகா வித்தியாலய கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

கண்ணகி தொடர்பான கலை இலக்கியங்களை அறிமுகம் செய்து பரவலாக்குதல், பண்டைய காலம் தொடக்கம் இன்று வரை பயின்றுவரும் தொன்மங்களை மீட்டுப் பார்த்தல், கிழக்கிலங்கையின் பண்பாட்டு அடையாளமாக விளங்கும் இலக்கியங்களை வெளிக்கொணர்தல், தென்னிந்தியாவிலும், கிழக்கிலங்கையிலும் நிலவும் கண்ணகி நம்பிக்கைகளுக்கிடையோன பொதுமைகளை ஆராய்தல் ஆகிய நோக்கங்களை கொண்டு இந்த கலந்தாலோசனைக் கூட்டம் இடம்பெற்றதாக கண்ணகி கலை இலக்கியக் கூடல் அமைப்பின் தலைவர் ரீ. கோபாலகிருஸ்ணன் தெரிவித்தார்.

2011 இல் ஆரம்பிக்கப்பட்ட கண்ணகி இலக்கிய விழா வருடம் தோறும் நடாத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதனை முன்னெடுக்கும் பொருட்டு உருவாக்கப்பட்டதே கண்ணகி கலை இலக்கிய கூடல் என்ற அமைப்பு.

பாரம்பரிய கலை வடிவங்களையும், இலக்கியங்களையும், பண்பாட்டுவிழுமியங்களையும், மீளக் கட்டமைத்துப் பேணி வளர்த்தெடுக்கும் மற்றும் எதிர்காலத்தில் கிழக்கிலங்கைத் தமிழ்ச் சமூகத்தையும் பண்பாட்டுத் தளத்தில் ஒன்றிணைத்து சமூக, பொருளாதார, கல்வி, கலை, இலக்கிய, ஆன்மீக மேம்பாட்டை நோக்கி மக்களை அறிவுபூர்வமாக ஆற்றுப்படுத்தும் நோக்கங்களையும் கொண்டு செயற்பட்டுவருகின்றது.

2015ஆம் ஆண்டுக்கான கண்ணகி கலை இலக்கிய விழா, இம்முறை ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வந்தாறுமூலையில் நடைபெற இருப்பதால் அதற்கான முன்னோடி ஏற்பாடுகள் இடம்பெற்றுவருகின்றன.

கலை இலக்கிய ஆர்வலர்களின் முழுமையான பங்களிப்பும் வரவேற்கப்படுகின்றது. கண்ணகி கலை இலக்கியக் கூடல் உறுப்பினர்கள் உட்பட கலை இலக்கிய ஆர்வலர்களும் வருகை தந்திருந்தனர்.

# வெளிநாட்டு மீட்புப் படைகளை வெளியேறப்பணித்தது நேபாள்



நேபாளத்தில் நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டோரை மீட்கும் பணியில் ஈடுபட்டுள்ள, இந்தியா உள்ளிட்ட, 34 நாடுகளின் மீட்புப்படையினரை உடனடியாக வெளியேறுமாறு, நேபாள அரசு திடீரென்று உத்தரவு பிறப்பித்துள்ளது.இதையடுத்து, ஜப்பான், துருக்கி, உக்ரைன், இங்கிலாந்து, நெதர்லாந்து ஆகிய நாடுகளின் மீட்புப் படையினர், நேபாளத்தை விட்டு வெளியேறத் தொடங்கியுள்ளனர்.

இந்திய மீட்புப் படையினரும் வெளியேறுவார்கள், என, இந்திய தேசிய மேலாண்மை படை (என்.டி.ஆர்.எப்.,) தலைவர் ஓ.பி.சிங் தெரிவித்துள்ளார். நேபாளத்தில், இந்தியாவின் என்.டி.ஆர்.எப்., படையினர் தான் அதிக அளவில் மீட்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.இதை, இந்திய ஊடகங்கள் பெருமையுடன் கூறுவதை பொறுத்துக் கொள்ள முடியாத சில நேபாளிகள், சமூக வலைத்தளங்களில் கடுமையாக விமர்சித்து வருகின்றனர்.இதைத் தொடர்ந்து, நேபாள வெளியுறவு அமைச்சகம், இந்தியா உள்ளிட்ட 34 நாடுகளின் மீட்புப் படையினரை வெளியேறுமாறு கூறியுள்ளது. நிலநடுக்கம் ஏற்பட்டு, 10 நாட்கள் ஆகி விட்டதால், யாரும் உயிர் பிழைக்க வாய்ப்பில்லை என்று கூறப்படுகிறது. அதனால், மீட்புப் பணியை நிறுத்தி விட்டு, நிவாரண உதவிகளில் கவனம் செலுத்த முடிவு செய்துள்ளதாக, நேபாள அரசு தெரிவித்துள்ளது. நேபாளத்தில் வெளிநாடுகளை சேர்ந்த, 4,500 பேர் மீட்புப் பணியில் ஈடுபடுத்தப் பட்டனர். நிலநடுக்கத்தால், 80 இலட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். நேபாளத்தில், கடந்த 10 நாட்களில், அடுத்தடுத்து, 7 முறை நில நடுக்கம் ஏற்பட்டுள்ளது.

# குட்டி இளவரசியின் பெயர் சார்லட் எலிசபெத் டயானா



இங்கிலாந்தின் குட்டி இளவரசிக்கு சார்லட் எ்லிசபெத் டயானா என பெயர் சூட்டி உள்ளதாக கென்சிங்டன் அரண்மனை அதிகாரபூர்வமாக தகவலை அறிவித்துள்ளது

தாத்தா சார்லஸை குறிக்க, அதன் பெண் பெயரான சார்லட்டும், கொள்ளுப் பாட்டியான எலிசபெத் பெயரும், பாட்டியின் நினைவாக டயானா பெயரையும் இணைத்து, இனி குழந்தை அழைக்கப்படும்.

லண்டனில், கடந்த 2ஆம் திகதி பிறந்த, இந்தக் குழந்தையின் படம் பொறித்த கோப்பைகள், பீங்கான் தட்டுகள், டி - சேர்ட்டுகள் உள்ளிட்ட, பல்வேறு பொருட்களின் விற்பனை, படுசூடாக நடைபெற்று வருகிறது.

இதில், 770 கோடி ரூபாய் அளவிற்கு வர்த்தக வாய்ப்பு உள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.இக்குழந்தை, 10 வயதை அடைவதற்குள், 900 கோடி ரூபாய்க்கு வர்த்தகம் விரிவடையும் என, எதிர்பார்க்கப்படுகிறது.

இதுகுறித்து, ஆடை வடிவமைப்பு ஆலோசகர் பாட்ரிசியா டேவிட்சன் கூறியதாவது,குழந்தை எதை உடுத்துகிறாள் என்பதை ஒவ்வொருவரும் கூர்ந்து கவனிப்பார்கள். கேத், தன் குழந்தைக்கு எந்த உடைகளை வாங்குகிறார் என்பதைப் பார்த்து, அதே மாதிரியான உடைகளை மக்கள் வாங்குவார்கள். இதே போல் தான், கேத் அணியும் உடைகள், நகைகள் போன்றவற்றை, மக்கள் விரும்பி வாங்கி வருகின்றனர். ஜோர்ஜை விட, பெண் குழந்தை அதிக வருவாயை ஈட்டிக் கொடுப்பாள் என, எதிர்பார்க்கிறேன். என அவர் கூறினார்.

வில்லியமின் முதல் குழந்தையான ஜோர்ஜ், 2013இல் பிறந்த போது, பல்வேறு நினைவுப் பொருட்கள் மூலம், 2,381 கோடி ரூபாய் வசூலானதும் குறிப்பிடத்தக்கது.

# பேருந்து பள்ளத்தில் வீழ்ந்ததில் 35 பயணிகள் ஸ்தலத்தில் பலி



இந்தியாவின் மத்தியப் பிரதேச மாநிலம் பன்னா மாவட்டத்தில் பேருந்தொன்று பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளாகியதில் 35 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்தில் பத்துக்கும் மேற்பட்ட பயணிகள் படுகாயங்களுடன் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தேசிய நெடுஞ்சாலையொன்றில் பயணித்த பேருந்து திடீரென வேகக் கட்டுப்பாட்டை இழந்து பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளாகியது.

பேருந்து தீப் பிடித்துக் கொண்டதில் சம்பவ இடத்தில் 35 பேர் உயிரிழந்ததுடன், மேலும் பலர் காயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்து தகவல் அறிந்த தீயணைப்புப் படை வீரர்கள், தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

விபத்து குறித்த மேலதிக விசாரணைகளை பன்னா மாவட்டக் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

உலகச் செய்திகள்

# பப்புவா நியூகினியாவில் நேற்றும் நில நடுக்கம்




பப்புவா நியூகினியாவில் நேற்றுக் காலை 7.5 ரிக்டர் அளவில் பாரிய நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து அங்கு சுனாமி எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

கொக்கொப்பு நகருக்கு தெற்காக 13 கிலோமீற்றர் தொலைவில், கடலுக்கடியில் 50 கிலோமீற்றர் ஆழத்தில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.


இதனால் கடல் அலைகள் சுமார் 1 மீற்றர் உயரத்திற்கு மேலெழ வாய்ப்புள்ளதாக பசிபிக் சுனாமி எச்சரிக்கை மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதனால் கரையோர பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். எனினும் சேத விபரம் குறித்து இன்னும் எவ்வித தகவல்களும் வெளியாகவில்லை.

கொக்கொப்பு நகரில் கடந்த வாரமும் நிலநடுக்கம் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

பப்புவா நியூகினியாவில் 7.4 ரிச்டர் அளவுகொண்ட சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை இலங்கைக்கு எவ்வித ஆபத்துமில்லையென அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

# கேரளாவில் 5 மாவோயிஸ்டுகள் கைது



கேரளத்தில் சட்டத்திற்கு புறம்பான தீவிரவாத வேலைகளில் ஈடுபட்டு வரும் மாவோயிஸ்ட் தீவிரவாத இயக்கத் தலைவர் ரூபேஷ் உட்பட அந்த இயக்கதைச் சேர்ந்த ஐந்து தீவிரவாதிகளை கோவை அருகே கியூ பிரிவு பொலிஸார் சுற்றி வளைத்துகைது செய்யதனர் கைதான ஐந்து தீவிரவா திகளிடமும் விசாரணை நடை பெற்று வருகிறது.

கேரளாவில் மாவோயிஸ்ட்களை பிடிக்க பொலிஸ சோதனை தீவிரப்படுத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து தமிழக எல்லைப்பகுதியில் உள்ள வனப்பகுதியில் மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் பதுங்குவதாகவும், தமிழக பொலிஸார் உரிய கண்காணிப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் கேரள பொலிஸார் தமிழக பொலிஸாருக்கு தகவல் கொடுத்தனர். இதைத்தொடர்ந்து தமிழக பொலிஸாரும் கியூ பிரிவு பொலிஸாரும் மாவோயிஸ்ட் தீவிரவாதிகளின் நடமாட்டத்தை கண்காணித்து வந்தனர்.

இந்த நிலையில் கோவை அருகே உள்ள கருமத்தம்பட்டி பகுதியில் மாவோயிஸ்ட் தீவிரவாத குழுவினர் பதுங்கி இருப்பதாக தமிழக கியூ பிரிவு பொலிஸார் மற்றும் ஆந்திர மாநில சிறப்பு பிரிவு பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது. அன்னூர் சாலை பகுதியில் ஒரு காரில் வந்த ஐந்து பேர், காரை நிறுத்தி தேநீர் கடையில் தேநீர் குடித்தனர்.

அப்போது தமிழக கியூ பிரிவு பொலிஸாரும், ஆந்திர மாநில பொலிஸாரும் துப்பாக்கி முனையில் இந்தக் காரை சுற்றி வளைத தனர். தீவிரவாதிகள் ஐந்து பேரும் கோஷம் எழுப்பியவாறு பொலிஸாரிடம் சரண் அடைந்தனர். பிடிபட்டவர்கள் கேரள மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் என்றும், இதில் ஒருவர் மாவோயிஸ்ட் தீவிரவாத குழுவின் தலைவர் என்றும் தெரியவந்தது. கைதான ஐந்து பேரையும் கியூ பிரிவைச் சேர்ந்த பொலிஸார் கோவைக்கு கொண்டு சென்று இரகசிய இடத்தில் வைத்து விசாரணை நடாத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# அமெ. ஓவியக்கண்காட்சியில் இருவர் சுட்டுக்கொலை

அமெரிக்காவில் இடம்பெற்ற ஓவிய போட்டியொன்றின் போது. துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட ஆயுததாரிகள் இருவர், பொலிஸார் மேற்கொண்ட தாக்குதலில் உயிரிழந்துள்ளனர்.


இதனையடுத்து, குறித்த ஆயுததாரிகள் பயணித்த வாகனத்தில் வெடிபொருட்கள் உள்ளதா என்பது தொடர்பில் சோதனை மேற்கொள்ளுமாறு குண்டு செயலிழக்கும் பிரிவினருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த ஓவிய கண்காட்சியானது டல்லாஸ் புறநகர் பகுதியில் இஸ்லாமிய குழுவொன்றினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த தாக்குதலையடுத்து குறித்த பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக் அமெரிக்க தகவல்க்ள் தெரிவிக்கின்றன.

# பலாலி படைத்தள வாயிலில் சிதறு தேங்காய் உடைப்பு

## இடம்பெயர்ந்த மக்களின் தெய்வ வழிபாட்டுக்கு தடை



வசாவிளான் மத்திய கல்லூரிக்கு அருகாமையில் இருக்கும் பலாலி இராணுவமுகாமின் நுழைவு வாசலுக்கு முன்பாக வசாவிளான் மக்கள்கற்பூரமேற்றி வைரவக் கடவுளை வழிபட்ட சமபவம் ஒன்று நேற்று செவ்வாய்க் கிழமை நடைபெற்றுள்ளது.

வசாவிளான் பலாலி இராணுவக்குடியிருப்பு என்று பொறிக்கப்பட்ட வளைவில் இருந்து உள்நோக்கி சுமார் 200 மீற்றர் தூரத்தினுள்வசாவிளான் ஞான வைரவர் ஆலயம் உள்ளது. பெரிய வைரவர் ஆலயங்களில் ஒன்று என்ற பெருமையைப் பெற்ற இந்த ஆலயத்தில் மேமாதத்தில் வைரவர் மடை பெரிய அளவில் கொண்டாடப்படுவது வழக்கம். ஆனால், உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் வசாவிளானை இராணுவம் கையகப்படுத்திய பின்னர் இந்த ஆலயத்துக்கு மக்களால் சென்றுவர முடியவில்லை.

புதிய ஜனாதிபதி பதவியேற்ற பின்னர் கொண்டு வரப்பட்ட நூறு நாள் வேலைத் திட்டத்திலாவது வசாவிளான் ஆலயப்பகுதி விடுவிக்கப்படும் என்று பொதுமக்கள் எதிர்பார்த்திருந்தனர். அது நிறைவேறாத நிலையில், மே மாத மடைத்திருவிழாவைக் கொண்டாடுவதற்கு முன்னோடியாக இன்று ஆலயத்துக்குச் சென்று வழிபடுவது என்று தீர்மானித்த நூற்றுக் கணக்கான வசாவிளான் மேற்கு மக்கள் இராணுவ வளைவுக்கு முன்னால் திரண்டனர்.

இராணுவமுகாம் நுழைவு வாசலில் கடமையில் இருந்த படையினரிடம் ஆலய வழிபாட்டுக்காக வந்திருக்கிறோம் என்பதை படை அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்துமாறு பொது மக்களும், மக்கள் பிரதிநிதிகளும் கேட்டுக் கொண்டதற்கிணங்க, அதிகாரிகளுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. எனினும் உள் நுழைவதற்கான அனுமதி வழங்கப்படவில்லை. அத்தோடு பொதுமக்களைச் சந்திப்பதற்கு படை அதிகாரிகளும் நீண்டநேரமாகியும் சமுகமளிக்கவில்லை.

இந்நிலையிலேயே, சினம் கொண்ட மக்கள் முகாம் வாசலுக்கு முன்பாக சிதறு தேங்காய் உடைத்து, கற்பூரம் கொழுத்தி வழிபாட்டில் ஈடுபட்டுள்ளனர். முகாம் வாசலில் கற்பூரவழிபாட்டைச் செய்ய வேண்டாம் என்று கடமையில் இருந்த இராணுவத்தினர் ஆரம்பத்தில் சொன்னபோதும், பொது மக்கள் திரளாக வழிபட ஆரம்பித்ததும் விலகிச் சென்று விட்டனர்.

### முன்னாள்...

இதையடுத்து, பிற்பகல், 3.15 மணியளவில், அவர் கைது செய்யப்பட்டார். அவரை, பொலிஸார் கொழும்பு பிரதம நீதிவான் கிஹான் பிலப்பிட்டிய முன்பாக, முன்னிலைப்படுத்திய போது, இன்று வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட் டார். அத்துடன் இன்று ஜோன்ஸ்டன் பெர்னான்டோவை குருநாகல் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறும் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

### பாடசாலை...

அவர் குற்றம் சுமத்தினார்.

இந்நிலையில் குறித்த குற்றச்சாட்டு தொடர்பில் பேசிய சிரேஸ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் ஏ.ஜயசிங்க,

சபையிலிருந்த யாழ்.பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியை பார்த்து கேள்வி எழுப்பினார். இதற்கு பதிலளிக்க முடியாத நிலையில் பொலிஸ் பொறுப்பதிகாரி திணறிய நிலையில், மேற்படி விடயம் தொடர்பாக உடனடியாக நடவடிக்கை எடுக்காவிட்டால். பொருத்தமான வேறு பொறுப்பதிகாரி நியமிக்கப்படுவார் என எச்சரித்துள்ளார்.

### போலி...

வைத்தியர்கள் குற்றம் சுமத்தியிருக்கின்றனர்.

இது தொடர்பாக அவர்கள் மேலும் குறிப்பிடுகையில்,

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு முன்பாக பல் சிகிச்சை மருத்துவ உதவியாளர்களால், பல் சிகிச்சை நிலையங்கள் நடத்தப்படுகின்றன. இவர்கள் அவ்வாறான சிகிச்சை நிலையம் ஒன்றை நடத்த முடியாது என மருத்துவ சட்டம் கூறுகின்றது.

ஆனால் இவர்கள் சத்திரசிகிச்சைகளையும் கூட நடத்துகின்றார்கள். மேலும் தரகர்கள் ஊடாக சிகிச்சைக்கு 25ஆயிரம் தொடக்கம் 30 ஆயிரம் வரையில் பணமும் அறவிடப்படுகின்றது.

இந்நிலையில் விடயம் தொடர்பாக யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு கொடுக்கப்பட்டபோதும் நடவடிக்கை இல்லை. என மருத்தவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இதனையடுத்து சபையில் இருந்த யாழ்.பொலிஸ் நிலைய பொறுபதிகாரியை அழைத்து என்ன நடந்தது? எதற்காக நடவடிக்கை எடுக்கப்படவில்லை? என கேள்வி எழுப்பினர்.

இதன்போது அந்தப் பிரச்சினை சுமுகமாக தீர்க்கப்பட்டதாக பொறுப்பதிகாரி பதிலளித்தார். இதனையடுத்து மருத்துவர்களிடம் கேள்வி எழுப்பிய ஜயசிங்க சுமுகமாக தீர்க்கப்பட்டதா? என கேட்ட போது அவ்வாறு தீர்க்கப்படவில்லை.

பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லை. என அ வர் கூறியதையடுத்து பொறுப்பதிகாரியை பார்த்து பொய் சொல்லவேண்டாம். என திட்டிய சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் வைத்தியர்களின் முறைப்பாட்டை பதிவு செய்யுமாறும், இரு தினங்களுக்குள் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

### விமானப்படை..

பில், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும், நீதிமன்ற விசாரணைகள் மற்றும் பிரேத பரிசோதனைகளை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

### ஒரே...

அடுத்த் பொதுத் தேர்தலில் போட்டியிட்டு அரசாங்கமொன்றை அமைப்பதே இதன் முக்கிய நோக்கம் என கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்தவின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையிலான சந்திப்பு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை வீட்டுக்கு அனுப்புவதற்காகவே என்றும் இந்த சந்திப்பு, நிபந்தனைகள் அற்றவகையில் இடம்பெறும். இந்தச் சந்திப்பை யாராலும் நிறுத்த முடியாது என்று ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடகப்பேச்சாளர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதிக்கும் இந்நாள் ஜனாதிபதிக்கும் இடையிலான இந்தச் சந்திப்புக்கு, ஐக்கிய தேசியக்கட்சியே இடையூறு விளைவிக்கின்றது. அதற்கு துணை போகின்ற ஊடகவியலாளர்களும் இருக்கின்றனர். இந்தச் சந்திப்பை யாராலும் நிறுத்த முடியாது. இது கட்சியின் உள்விவகார பேச்சுவார்த்தையாகும்.

19ஆம் திருத்தம் கொண்டுவரப்பட்டபோது, அதற்கு ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவளித்தது. அப்போது சிலர், சு.க. இரண்டாகிவிடும் என்று நினைத்தனர். எனினும், அவர்களின் நினைப்பு நிறைவேறவில்லை.

அடுத்த பொதுத்தேர்தலின் போது, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பிரதமர் வேட்பாளராக ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் நிறுத்தும் நோக்கோடு இந்தச் சந்திப்பு இடம்பெறுகின்றதா என வினவுகையில்,

ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் அனைவரும் ரணில் விக்கிரமசிங்கவை வீட்டுக்கு அனுப்பவேண்டும் என்றே கோரிநிற்கின்றனர் என்று தெரிவித்தார்.

அதேவேளை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்திப்பதற்கு, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ நிபந்தனை விதித்துள்ளார். என்றும்

இரண்டு நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டால் மட்டுமே சந்திப்பு நடத்த முடியும் என மஹிந்த ராஜபக்ஸ அறிவித்துள்ளார். என்றும் மற்றொரு தகவல் தெரிவிக்கிறது.

தேசிய அரசாங்கம் அமைக்கக் கூடாது எனவும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஊடாக அரசாங்கம் அமைக்க வேண்டுமெனவும் மஹிந்த ராஜபக்ஸ கோரியுள்ளார்.

இந்த நிபந்தனைகளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஏற்றுக்கொள்ளத் தவறினால் சந்திப்பு நடத்தப்போவதில்லை என் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ கோரியுள்ளதாக முன்னாள் அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

இந்த நிபந்தனைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டால் எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலின் போது முழு அளவில் ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரச்சாரத்திற்கு ஆதரவளிக்கப்படும் என மஹிந்த உறுதியளித்துள்ளார்.

அத்துடன் தேர்தல் பிரச்சாரக்குழுவின் முகாமையாளராகவும், வேட்பாளர்தெரிவுக்கான செயற்குழுவின் அங்கத்தவராகவும் தன்னை இணைத்துக் கொள்ள வேண்டும். எனவும் நிபந்தனை விதித்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# தாய்சேய் சௌக்கியம் இலங்கைக்கு தனி இடம்

தென்னாசியாவில் இலங்கை மற்றும் மாலைத்தீவு என்பன தாய்மையில் சிறந்த இடங்களைப் பெற்றுக்கொண்டுள்ளன.

சேவ் த சில்ரன் அமைப்பு வெளியிட்டுள்ள "உலகலாவிய அன்னை 2015" பட்டியலிலேயே இந்த தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகலாவிய ரீதியில் 179 நாடுகளில் இலங்கை 92 ஆம் இடத்தில் உள்ளதுடன் மாலைத்தீவு மற்றும் ஜமேக்கா என்பன அதே இடத்தில் உள்ளன.

இதேவேளை, கடந்த வருடம் வெளியிடப்பட்ட பட்டியலில் இலங்கை 89ஆவது இடத்தில் இருந்தது.

1,400 பேருக்கு 1 என்ற நிலையில் இலங்கையில் தாய்மார் மரண வீதம் காணப்படுவதாக அந்த பட்டியலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நோர்வே, பின்லாந்து, ஐஸ்லாந்து, டென்மார்ன் மற்றும் சுவீடன் ஆகிய நாடுகள் இந்த பட்டியலில் உலகளாவிய ரீதியில் முதலிடத்தில் உள்ளன. இதேவேளை, மோசமான நாடுகள் பட்டியலில் சோமாலியா, பொங்கோ குடியரசு, மத்திய ஆபிரிக்கா, மாலி மற்றும் நைஜர் ஆகிய நாடுகள் இடம்பிடித்துள்ளன.

# சுகாதார தின நிகழ்வு

குடும்ப நல சுகாதார சேவை உத்தியோகத்தர் தினம் மன்னார் நகர சபை மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த குடும்ப நல சுகாதார சேவை உத்தியோகத்தர் பலர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமாகாண சுகாதார அமைச்சர் பா.சத்தியலிங்கம், சிறப்பு விருந்தினராக வடமாகாண மீன்பிடி, போக்குவரத்து அமைச்சர் பா.டெனிஸ்வரன் மற்றும் கௌரவ விருந்தினர்களாக வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருமதி யூட் ரதனி, மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருமதி அன்ரன் சிசில், சுகாதார வைத்திய அதிகாரிகள், வைத்தியர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது குடும்ப நல சுகாதார சேவை உத்தியோகத்தர்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

### வீதி...

வரை வீதிப் போக்குவரத்துப் பொலிஸார் மறித்து உரையாடியுள்ளனர். அதன் பின்னர் அவ ருக்கு தொலைபேசி, அழைப்பு வந்துள்ளது. வீதியோரமாக தொலை பேசியில் அவர் உரையாடிக் கொணடிருந்த சமயம் யாழ்ப் பாணத்திலிருந்து உரும்பிராய் நோக்கிச் சென்ற வாகனம் வேகக் கட்டுப்பாட்டை இழந்து அவரை மோதித் தள்ளி அருகி லிருந்த மின்கம்பத்தையும் மோதி அதன் பின்னர் காணி ஒன் றுக்குள் புகுந்து நின்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அங்கிருந்து சடலம் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்திய சாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டதுடன் வாகனமும் பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப்பட்டது. மேலதிக விசாரணைகளை கோப்பாய் போலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(25) (இ)

### பாக்..

நியமிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக, நம்பகமான தகவல்கள் கிடைத்துள்ளதாக, கொழும்பு ஆங்கில நாளிதழ் குறிப்பிட்டுள்ளது.

தற்போது, பாகிஸ்தானுக்கான தூதுவராக பணியாற்றும்; முன்னாள் விமானப்படைத் தளபதி எயர் சீவ் மார்சல் ஜெயலத் வீரக்கொடி, விரைவில் அங்கிருந்து திருப்பி அழைக்கப்படவுள்ளார்.

அவர் 2009ஆம் ஆண்டு தொடக்கம் பாகிஸ்தானில் பணியாற்றி வருகிறார்.அதேவேளை, தற்போது ஆட்சியில் இருக்கும் ஐ.தே.க. முன்னர் வெளிநாட்டுத் தூதுவர் பதவிகள் மற்றும் இராஜதந்திரப் பதவிகளுக்கு படை அதிகாரிகளை நியமிப்பதற்கு கடுமையான எதிர்ப்பை தெரிவித்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

# மக்கள் பணிக்கு வியர்வை சிந்தாதவர்கள் உழைப்பிற்கு உரிமை கோருகின்றனர்

## வடமாகாண உறுப்பினர் தவநாதன்

(கிளிநொச்சி)

இந்த மாவட்டத்தில் மக்களுக்காக, அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக ஒரு துளி வியர்வை கூட சிந்தாதவர்கள் நாங்கள் செய்கின்ற மக்கள் பணிக்கும் ,எங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினரின உழைப்புக்கும் உரிமை கோருகின்ற மிகக் கேவலமான அரசியலைச் செய்து வருகின்றனர் என வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை. தவநாதன் தெரிவித்துள்ளாார்.

நேற்று கிளிநொச்சி ஊற்றுப் புலம் பழைய குடியிருப்பு மக்கள் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில்

கடந்த ஐந்து வருடங்களில் கிளிநொச்சி மாவட்டத்தில் எங்களால், எங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமரினால் மேற்கொள்ளப்பட்ட மக்கள் நலத்திட்டங்களை மாவட்ட மக்கள் நன்கறிவார்கள் ஆனால் இந்த ஐந்து வருடங்களில் மக்களுக்காக, மாவட்டத்தின் முன்னேற்றத்திற்காக ஒரு செங்கல்லையேனும் வைக்காதவர்கள் இன்று எமது மக்கள் பணிகளுக்கு உரிமை கோரி அரசியல் செய் கின்றவர்களாக உள்ளனர்.



போலிக் கோசங்களும், வெற்றுப் பேச்சுகளையும் பேசிக்கொண்டு போலித் தேசிய வாதிகளாக சுற்றித்திரியும் இவர்கள் மற்றவர்களின் உழைப்புக்கு உரிமை கோரு கின்ற அநாகரீகமான அரசியலை விட்டுவிட்டு மக்களுக்காக உழைக்க முன்வர வேண்டும் ஆனால் இவர்கள் அவ்வாறு செய்வார்களா? எனக்கேள்வி எழுப்பிய மாகாண சபை உறுபபினர் வினைத்திறனற்ற இவர்களால் போலித்தேசிய வாதிகளாக காட்சி தர முடியுமே தவிர மக்களுக்காக உழைக்க முடி யாது எனவும் தெரிவித்தாா.

இதேவேளை இங்கு உரையாற்றி நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் தலைவரும் உரையாற்றினார்.

ஊற்ற[illegible]லம் வள்ளுவர் பண்ணை [illegible]ம அபிவிருத்திச் சங்கத் த[illegible]லைவர் சுதர்சன் தலைமையில் இடம்பெற்ற சந்திப்பில் பச்சிலைப்பள்ளி [illegible] தேச சபை உறுப்பினர் [illegible] அன்பழகன், கிராம அபி[illegible]ச் சங்க செயலாளர் பா[illegible], ஊற்றுப்புலம் கமக்கார அமைப்பின் தலைவர் பெ.ஆனந்தன் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.


# நாகரிகம் இல்லாத அரசியல்

தமிழர் பிரச்சினைக்கு இலங்கைக்குள்ளே தீர்வைக் காண வேண்டுமே தவிர அமெரிக்காவிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தஞ்சம் புகுவது அரசியல் நாகரிகம் அல்ல என முன்னாள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார். அமெரிக்காவுக்கும் ஏகாதிபத்தியவாதிகளுக்கும் எதிரான முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவின் ஆட்சியைக் கவிழ்த்து அமெரிக்காவின் கைப்பொம்மையான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் ஐ.தே. கட்சி ஆட்சி நாட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அவ்வாறு ஏற்படுத்தப்பட்ட அமெரிக்க ஆட்சி இலங்கையில் எவ்வாறு செயற்பாடுகளை முன்னெடுக்கின்றதென்பதை ஆராயவும் அதற்கான உதவி களை வழங்கவும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் ஜோன் கெரி இங்கு வந்தாரே தவிர இது இலங்கையின் எதிர்காலத்திற்கு நன்மைகள் விளைவிக்கும் பயணமல்ல. அதேவேளை தமிழர் பிரச்சினைக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு இலங்கைக்குள்ளேயே தீர்வுகளை காணவேண்டும். அதை விடுத்து அமெரிக்காவிடம் அரசி யல் தஞ்சம் புகுவது நாகரிகமான அரசியல் ஆகாது என்றும் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.



# மைத்திரி பயணித்த வானூர்தி அருந்தப்பு நடுவீதியில் தரையிறக்கம்



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையும் அவருக்கு பாதுகாப்பு வழங்குவதற்காக சென்ற குழுவினரையும் ஏற்றிக் கொண்டு பயணித்த இலங்கை விமானப்படைக்கு சொந்தமான ஹெலிகெப்டர்கள் இரண்டு, மிக அவசரமாக வீதியில் தரையிறக்கப்பட்ட சம்பவமொன்று இடம் பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் அவருக்கு பாதுகாப்பு வழங்குவதற்காக சென்ற குழுவினரையும் ஏற்றிக் கொண்டு இரண்டு ஹெலிகெப்டர்கள் ஹம்பாந்தோட்டை சூரிய வெவவுக்கு நேற்று சென்றன.

கொத்தலாவல, பாதுகாப்பு பல்கலைக்கழக தெற்கு வளாகத்தை திறந்துவைப்பதற்காகவே ஜனாதிபதி அங்கு சென்றிருந்தார்.



அங்கு பெய்த கடும் மழை மற்றும் சீரற்ற காலநிலை காரணமாகவே, அந்த இரு ஹெலிகெப்டர்களும் இடை நடுவில் பல்கலைக்கழகத்துக்கு செல்லும் காபர்ட் இடப்பட்ட வீதியில் தரையிறக்கப்பட்டன.

# பசிலுக்கு நாளை வரை விளக்கமறியல்

(கொழும்பு)

இலங்கையின் முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்சவை நாளை வரை விளக்கமறியலில் வைக்க, கடுவெல நீதிமன்ற நீதிவான் இன்று உத்தரவிட்டுள்ளார்.

திவிநெகும திணைக் களத்தில் இடம்பெற்ற முறைகேடுகள் தொடர்பாக, கடந்த ஏப்ரல் 22ஆம் நாள், நிதிக்குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட பசில் ராஜபக்சவை, நேற்று வரை விளக்கமறியலில் வைக்க கடுவெல நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.

இதையடுத்து வெலிக்கடைச் சிறைச்சாலை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பசில் ராஜபக்ச பின்னர், சிகிச்சைக்காக கொழும்பு தேசிய மருத்துவமனையின் கட்டண விடுதியில், அனுமதிக்கப்பட்டிருந்தார்.

அவரது விளக்கமறியல் நேற்றுடன் முடிவடையும் நிலையில், அங்கிருந்து நேற்று காலை கடுவெல நீதிமன்றத்துக்கு நோயாளர்காவு வண்டியில், கொண்டு வரப்பட்டார்.

எனினும், பசில் ராஜபக்சவின் உடல்நிலையைக் கருத்தில் கொண்டு, அவர் நோயாளர் காவு வண்டியில் இருந்து இறக்கப்படவில்லை.

கடுவெல நீதிவான், நோயாளர் காவு வண்டிக்குள் சென்று, அவரைப் பார்வையிட்டு நாளை வரையும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

தொடர்ந்தும் பசில் ராஜபக்சவை, கொழும்பு தேசிய மருத்துவமனையில் சிகிச்சை பெற அனுமதிக்குமாறு நீதிவானிடம், சட்டத்தரணிகள் கோரிக்கை விடுத்தனர்.

அதனை நிராகரித்த நீதிவான், வெலிக்கடைச் சிறைச்சாலை மருத்துவமனையில் அனுமதிக்குமாறு உத்தரவிட்டார்.

# அரசியல் கட்சி செயலாளர் மீது துப்பாக்கிச் சூடு நடத்த முயற்சி

மட்டக்களப்பில் அரசியல் கட்சி ஒன்றின் செயலாளர் மீது அடையாளம் தெரியாத இருவர் துப்பாக்கிப் பிரயோகம் நடத்த முற்பட்டதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு லேக் வீதியில் நேற்று முன்தினம் தனது மனைவியுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்தபோது மற்றுமொரு மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் தன்மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ள முயற்சித்ததாக முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்தது.

அதற்கமைய, மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை அடுத்து சந்தேகநபர் ஒருவர் நேற்று முற்பகல் கைது செய்யப்பட்டுள்ளார்.

அரசியல் கட்சி உறுப்பினரைக் கண்டபோது தனது கையடக்கத் தொலைபேசியை மாத்திரமே கையில் எடுத்ததாகவும், தன்னிடம் துப்பாக்கி இருக்கவில்லை எனவும் சந்தேகநபர் வாக்குமூலம் அளித்துள்ளார்.

எனினும், கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடம் தொடர்ந்தும் மட்டக்களப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டது.

# டிப்பர் விபத்தில் சிப்பாய்கள் காயம்

கிளிநொச்சியிலிருந்து இரணைமடு நோக்கிச் சென்ற டிப்பர் வாகனமும் இரணைமடுவில் இருந்து கிளிநொச்சி நோக்கிச் சென்ற மோட்டார் வாகனமும் கிளிநொச்சி தொண்டைமான் நகருக்கு அருகில் விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கில் வாகனத்தில் பயணம் செய்த இராணுவச்சிப்பாய்கள் இருவர் படுகாயமடைநதனர்.

நேற்று இரவு 8.30 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்துச் சம்பவத்தின் போது, காயமடைந்த இராணுவச் சிப்பாய்கள் இருவரும் கிளிநொச்சி மாவட்ட பொது மருத்தவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதோடு.. சிப்பாய்களில் ஒருவர் பலத்த காயங்களுக்கு உள்ளானதில் மேலதிக ,சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

மேலும் இவ் விபத்துச் சம்பவம் தொடர்பில் கிளி நொச்சி மாவட்ட பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள ளனர். (77)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 மே 06 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.